
தேவி
ரமணிசந்திரன்

# தேவி

ரமணி சந்திரன்

அருணோதயம்
3, கௌடியாமடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை-600 014

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : தேவி |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : ஜூலை, 1999 |
| இரண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2001 |
| மூன்றாம் பதிப்பு | : ஜூலை, 2003 |
| நான்காம் பதிப்பு | : மார்ச், 2005 |
| ஐந்தாம் பதிப்பு | : செப்டம்பர், 2006 |
| ஆறாம் பதிப்பு | : மார்ச், 2008 |
| ஏழாம் பதிப்பு | : செப்டம்பர், 2009 |
| எட்டாம் பதிப்பு | : ஏப்ரல், 2011 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 216 |
| கட்டமைப்பு | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |

# பதிப்புரை

தமிழ் நாவல் உலகிலே அனைத்துத் தரப்பு வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றவர் திருமதி ரமணிசந்திரன் அவர்கள்.

கதைகளில் வரும் சம்பவங்கள் ஒவ்வொன்றும் தங்கள் தங்கள் வீட்டிலே நடப்பது போல் உள்ளதாகக் கருதுகிறார்கள் வாசகர்கள்.

அன்றாட வாழ்வில் நடக்கும் சம்பவங்களை வைத்துப் பலவிதக் கோணங்களில் கற்பனை செய்து அற்புதமாக எழுதுவதாக பதினாயிரக்கணக்கான வாசகர் களின் பாராட்டுக் கடிதங்கள் கூறுகின்றன.

இதற்கு ஈடாகவோ, இணையாகவோ எழுத முடி யாது என்று பலர் கருதுகிறார்கள்.

எது எப்படி இருந்தாலும் தரமான கதைகளின் சொந்தக்காரர் திருமதி ரமணிசந்திரன் என்பது அனைத்து வாசகர்களுக்கும் புலப்படுகிறது.

ஆவலுடன் எதிர்பார்த்த அடுத்த நாவல் உங்கள் கரங்களிலே, படித்து மகிழுங்கள்.

**அருணோதயம் அருணன்**

## ஒரு வாசகியின் கருத்துரை

அன்பு மனம் கொண்ட திருமதி ரமணிசந்திரன் அவர்களுக்கு என் கோடி வணக்கங்கள்.

உங்கள் பல ஆயிரத்திற்கும் மேலான ரசிகைகளில் நானும் ஒருத்தி. உங்கள் நாவல்கள் எல்லாவற்றையும் படித்துள்ளேன். எதை விடுவது? எல்லாமே அருமை அல்லவா? உங்கள் நாவல்களைப் படிப்பதென்றால் அறுசுவை உணவு உண்பது போல் இருக்கும்.

கடல் கடந்து இருந்தாலும், உங்கள் நாவல்களைப் படிக்கும்போது, நீங்கள் என் அருகில் இருக்கிற உணர்வு வருகிறது.

உங்கள் நாவல்களில் அவனும் அவளும், மாலை மயங்குகிற நேரம், ஒரு கல்யாணத்தின் கதை, என் கண்ணில் பாவையன்றோ, எத்தனைமுறை படித்திருக்கி றேன் தெரியுமா? எத்தனை முறை படித்தாலும் சலிக்க வில்லை.

உங்கள் எழுத்துப்பணி என்றும் தொடரட்டும்.

**திருமதி. இன்பராஜ் சத்தியபாமா**

**Jalan Tengku Kelana, 41000 Klang**

# தேவி

## 1

தேவிக்குத் தனியாகச் சிந்திக்க வேண்டியிருந்தது!

'என் தோழியைப் பார்க்கப் போகிறேன்' என்று அத்தையிடம் சொன்னாள். அத்தையின் பதிலை எதிர்பாராமலே விரைவாக வெளியே நடந்து விட்டாள். சற்றுத் தயங்கினால் கூட அத்தை தடுத்து விடுவாள் என்பது அவளுக்குத் தெரியும். இப்போதுகூட தேவிக்காக அவளுடைய தங்கை செல்வி அத்தையிடம் வாங்கிக் கட்டிக் கொண்டு இருப்பாள் என்பது தேவிக்கு — செந்தாமரை தேவிக்கு நன்றாகத் தெரியும். ஆனால் என்ன செய்வது? சுயமான சிந்தனைக்கு அந்த வீட்டில் இடமே கிடையாதே, சிந்திக்காமல் எப்படிச் செயல்பட முடியும்?

செந்தாமரை தேவி, வெண் தாமரைச் செல்வி. ஆகா நிரம்பவும் பொருத்தம் பார்த்துதான் அப்பாவும், அம்மாவும் பெயர் சூட்டி விட்டார்கள். தன் தோழிக்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமானால் உறை வாங்க இருபது பைசா கூட தேவியிடம் கிடையாது! செல்வியோ அத்தையின் அதட்டலில் எட்டாவதோடு படிப்பை நிறுத்தி விட்டாள். தேவியின் திடமும் துணிவும் அவளுக்கும் இருந்திருந்தால் அவளும் மேலே படித்திருப்பாள். ஆனால், அவள் வெறும் கோழை, முதுகெலும்பே கிடையாது.

லேசான புருவச் சுளிப்புடன் தேவி மேலும் வேகமாக நடக்கலானாள்.

வைகையின் வெண்மணல் பரப்பு விரிந்து அகன்று பரந்து கிடந்தது. ''வா மகளே, உனக்கு என்ன வேதனை? என்னிடம் சொல்லி ஆறுதல் பெற்றுக் கொள்' என்று ஓடையாகச் சென்ற ஆறும் மணலும் அழைப்பது போல் தேவிக்குத் தோன்றியது. சட்டென விழிகளில் நீர் மல்கியது. சுற்றுப்புறத்தில் ஆட்கள் நடமாட்டம் இல்லாதிருந்தால் அப்படியே குப்புற விழுந்து அழுதிருப்பாள்.

அழுதிருப்பாளா! அதுவும் சந்தேகம்தான். தேவியைப் பொறுத்தவரையில் அழுவது கோழைத்தனம். அதிலும் மற்றவர் பார்க்க அழுவது என்றால் சே! அவமானம்! ஆத்திரத்துடன் தலையைச் சிலுப்பிக் கொண்டாள். நிமிர்ந்து நேராக நடந்தாள். தன் வழக்கமான இடத்தை அடைந்தாள்.

வைகை ஆற்றுப் பாலத்தின் ஒருபுறமாக பாலத்தைத் தாங்கும் கரையோரத் தூண் மீது சாய்ந்தபடி, அவள் அமர்ந்தாள். மெல்லிய நீண்ட விரல்கள் பட்டு மணலில் கோலமிட்டன. பூமணலின் பூக்கோலம், பாவையின் மனதிலோ எண்ணத்தின் கோலம்.

எண்ணுவதற்கும் அதிகமாக ஒன்றும் இல்லை. சசி அக்கா சொல்லுவதை ஏற்பதா வேண்டாமா? இரண்டில் ஒன்று முடிவு செய்ய வேண்டும்.

செல்விக்கும் அவளுக்கும் இந்தப் பிறவியில் ஒரு விடிவு காலம் வேண்டும் என்றால், சசி அக்கா சொல்வதை ஏற்பதுதான் வழி. ஆனால், குடும்பத்தை விட்டுப் பிரிந்தாக வேண்டும். பிரிய முடியாதபடி யாருக்கும் யாரிடமும் பற்றும் பாசமும் உருகி ஓடுவது ஒன்றும் இல்லைதான். ஆனால் செல்வியும் தேவியும் மட்டுமே குடும்பம் என்று ஆகிவிட வேண்டியதிருக்கும். ஒரு கவலை கலக்கம் என்றால், காப்பதற்குப் பெரியவர்கள் இருக்க மாட்டார்கள்.

இப்போதும் கலக்கத்தை தீர்க்க யாருமே கிடையாது. என்றாலும் தனியே இருக்கும் பெண்கள் தானே என்று யாரும் வாலாட்ட முடியாது. அதுவும்தான் எப்படிச் சொல்வது? அத்தையின் அக்கா மகன் ஒரு தடியன் வந்திருக்கிறானே அவன் செல்வியைப் பார்த்து விசில் அடிப்பதும் கொச்சையாகப் பாடுவது... எல்லாம் அத்தை கொடுக்கும் இடம், செல்வியும் பயந்து ஓடுகிறாள். அந்த நாய் விரட்டுகிறது. திரும்பி நின்று ஒருதரம் முறைத்தால் கூடப் போதும். அதற்குக் கூடத் துணிவின்றி நடுங்கிக் கொண்டு கிடக்கிறாள் மக்கு!

இந்தக் கஷ்டத்தில் இருந்து அவளை மீட்க எந்தப் பெரியவர்கள் இருக்கிறார்கள்? இந்தப் பெரியவர்களை நம்பி எட்டிப் பார்க்கும் விடிவு காலத்தை விட்டு விடுவதா?

சிந்தனையில் மூழ்கிக் கிடந்த தேவிக்கு சுற்றுப்புறமே மறந்திருந்தது.

'சுளீர்' என்று யாரையோ அறையும் ஓசையும் ''அய்யோ சத்தியமாய் நான் திருடவில்லையே'' என்று ஒரு சிறு பெண்ணின் கதறலும் வெகு அருகில் கேட்கவே திடுக்கிட்டு எழுந்தாள்.

கதறிய குரல் அறிமுகமானது போலவும் தோன்றியது. சுற்று முற்றும் பார்த்தாள். பாலத் தூணின் மறுபுறம்தான் அங்கே விரைந்து ஓடினாள்.

''அயோக்கியக் கழுதை திருடியதும் இல்லாமல் சத்தியம் வேறா?'' என்று சினத்துடன் கையை மீண்டும் ஓங்கினான், அவன்.

தேவி அவனைக் கவனியாமல் அந்தச் சிறுமியைப் பார்த்தாள். அவள் ஊகித்தது போலவே அவள் பூக்காரச் செந்திருதான். எட்டே வயதுச் சிறுமி.

அடுத்த அறை விழுமுன் தேவி பாய்ந்து சென்றாள், செந்திருவை அவன் பிடியில் இருந்து விடுவித்தாள்.

''உங்கள் பலத்தையெல்லாம் காட்ட இந்தச் சின்னக் குழந்தை தானா அகப்பட்டாள், சே...'' என்றபடி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் தேவி.

பார்த்தவளுக்கு நெஞ்சில் சிறு நடுக்கம் ஓடியது.

அண்ணாந்து பார்க்கும் உயரத்துடன் திண்ணென்ற தசைகளுடன், இரையை இழந்த புலிபோல் ஆத்திரத்துடன் நின்று கொண்டு இருந்தான் அவன்.

அவளையே அடித்து விடுவான் போல அவன் உறுத்து விழித்தான்.

தேவிக்கு மீண்டும் உள்ளூர உடல் சிலிர்த்தது.

## 2

''திருட்டு நாய்... விடு அவளை'' என்று உறுமினான் அந்தப் புதியவன். அவனோடு ஓர் இளமங்கையும் அங்கே நின்றாள்.

செந்திரு தேவியை இறுகக் கட்டிக் கொண்டாள். ''இல்லை, அக்கா, அந்தப் பையை நான் திருடவில்லை'' என்றாள் நடுக்கத்துடன்.

தேவி இரக்கத்துடன் அவளை அணைத்துக் கொண்டாள். ''அவள் திருடினாள் என்றால் போலீசில் புகார் செய்யுங்கள். அவள் மேல் கை வைக்க உங்களுக்கு ஏது உரிமை?'' என்று மிடுக்காக அவனிடம் கேட்டாள்.

''பெரிதாக வக்காலத்து வாங்குகிறாயே, கொள்ளையிலே கூட்டா?'' என்றான் அவன், ஏளனமாக.

''இல்லை அக்கா நான் மெய்யாகவே திருடவில்லை. ஊற்றுப் பள்ளத்தின் பக்கமாக மணலில் புதைந்து கிடந்தது வார் மட்டும் தெரிந்தது. எடுத்துப் பார்த்தேன். அதற்குள் இவர் என்னைப் பிடித்து அடித்து விட்டார் அக்கா...'' என்று கேவினாள் சிறுமி.

''அய்யய்யோ, தினு அத்தான், நான்தான் அங்கே பையை விளையாட்டாகப் புதைத்து வைத்தேன். பிறகு மறந்தே போனேன்'' என்று கத்தினாள் அந்த தினகர் என்பவனோடு நின்றிருந்த இளமங்கை. பையைப் பிரித்துப் பார்த்து விட்டு, ''எல்லாமே இருக்கிறது. அத்தான், பரவாயில்லை, அந்தப் பெண் எதையும் எடுத்து விடவில்லை.''

தேவி மிகுந்த வெறுப்புடன் அவளைப் பார்த்தாள். ''உங்களுக்கு ஒரு நட்டமும் இல்லையல்லவா? பரவாயில்லைதான். ஆனால் இவள்! கன்னம் வீங்கப் பேயறையாக அறைந்திருக்கிறாரே, இந்த வலி 'ஓ! வருந்துகிறேன்' என்று தளுக்காகச் சொல்லி விட்டுப் போய்விடுவீர்கள். ஆனால், அந்த ஒரு வார்த்தையில் இந்த வீக்கம் வடிந்து விடுமா? வலி மறைந்து விடுமா?' என்று சினத்துடன் பொறிந்தாள்.

''ஊசிப்பட்டாசு போல வெடிக்கிறாயே!'' என்று வியந்தான், அந்த தினு. ''உன் தங்கை அல்லவா? உள்ளம் உருகத்தான் செய்யும். ஆனால், இதற்கும் பரிகாரம் இருக்கிறது தெரியுமா?'' என்று பாண்ட் பையினுள் கையை விட்டான் ஒரு ''பர்ஸ்'' வந்தது, கத்தையாக இருந்த பெரிய நோட்டுகளை ஒதுக்கி ஓர் ஒற்றை ரூபாய்த் தாளை எடுத்தான். ''இந்தா வைத்துக் கொள் ஏதாவது பலகாரம் வாங்கிச் சாப்பிடு, கோபம் தணிந்து விடும்'' என்று தேவியின் கையில் அந்தத் தாளைத் திணித்தான்.

ஏதோ தரும தாதா மாதிரி அவன் வெகு அலட்சியமாக அவளைத் தொட்டு ரூபாயைக் கையில் வைத்ததும் தேவிக்கு ஆவேசமே வந்து விட்டது. வெறி பிடித்தவள் போல அந்த ரூபாய் நோட்டைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தாள். அந்தத் துணுக்குகளை

அவன் முகத்திலேயே விட்டெறிந்தாள். ''சீ'' என்ற ஒற்றைச் சொல்லுடன் வேகமாக அங்கிருந்து திரும்பி நடந்தாள்.

''இந்தா, பெண்ணே'' என்று அந்தத் திமிர் பிடித்தவன் அழைத்த குரல் கேட்டது.

தேவி திரும்பிப் பாராமல் ஓட்டமும் நடையுமாக விரைந்தாள். அவன் குரல் கூடக் கேட்க முடியாத தூரத்துக்குச் சென்ற பிறகு நடையைச் சற்று நிதானப்படுத்தினாள்.

''அவனுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்! சின்னப் பெண் என்று பாராமல் செந்திருவை அடித்து விட்டான். செய்தது தப்பு என்று தெரிந்த பின்னும் மன்னித்துக் கொள் என்று ஒரு வார்த்தை இல்லை? தருமம் செய்கிறானாம் தருமம்! பிச்சைக்காரி என்று நினைத்தானோ?''

கொதித்துக் கொண்டே சென்ற தேவி சட்டென நின்றாள், அத்தை வீடு வந்தாயிற்று. அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் கண்மண் புரியாமல் நடந்திருக்கிறாள். ஆனால் கால்கள் வழக்கப்படி வீட்டிற்கே கொண்டு வந்து நிறுத்தி விட்டன. இவள் முடிவெடுக்கச் சென்ற பிரச்சினை அப்படியே மலைபோல நின்றது. எல்லாம் அந்த அகம்பாவியால் வந்த வினை.

ஒரு பெருமூச்சுடன் வீட்டினுள் நுழைந்தாள் தேவி. உடனே 'ஷாக்' அடித்தாற்போல அசைவற்று நின்றாள். அவள் செவியில் வந்து தாக்கியது செல்வியின் விம்மல் ஒலி. ஏன்? கோபத்துடன் உள்ளே விரைந்தாள்.

தேவி நினைத்தது போலவே செல்வி அத்தையின் முன்னே நின்று கேவிக் கொண்டு இருந்தாள். தன் பெருத்த உடலை ஒரு நாற்காலியுள் திணித்தபடி ஒரு காலைக் குத்திட்டு அமர்ந்திருந்தாள். அத்தை அரசாணி அம்மாள் ஒரு பேச்சை முடித்து அடுத்த பேச்சைத் தொடங்குவதற்கு மூச்சு வாங்கிக் கொண்டு இருந்தாள் போலும்.

அவள் அருகில் தன் கருக்கரிவாள் மீசையைத் தடவியபடி நின்றிருந்தான், அந்தக் கட்டைத் தடியன் — அத்தையின் அக்காவின் அருமருந்தன்னப் புத்திரன் - ரங்கு.

வெறுப்புடன் அவனை வெறித்துவிட்டு அத்தையையும் அலட்சியம் செய்துவிட்டு தேவி தங்கையை நெருங்கினாள். செல்வியின் தோளைப் பற்றித் திருப்பி, ''என்னடி ஏன் அழுகிறாய்?'' என்று அதிகாரத்துடன் வினவினாள்.

'''அக்கா?'' என்று தேவியின் தோளில் முகம் புதைத்து ஒரேயடியாக விம்மத் தொடங்கினாள் செல்வி.

''அடி. அம்மாடியோவ்'' என்று மூக்கில் விரலை வைத்தாள், அத்தை ''என்ன மாய்மாலம் செய்கிறாளடியம்மா உன் தங்கை அனாதைப் பிள்ளைகள், ஆதரவு இல்லாமல் நிற்கிறதே என்று என் பூஞ்சை மனம் தாளாமல் பரிதாபப்பட்டு வளர்த்தேன். இப்போது வளர்த்த கடா மார்பில் பாய்கிறது, என் இரக்கமான குணத்துக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணுமடியம்மா வேணும்'' என்று நெஞ்சில் பட்பட்டென்று அடித்துக் கொண்டாள் அந்த அம்மா.

''அய்யோ, அய்யோ! நெஞ்சில் அடிக்சுக்காதே, சின்னம்மா உன் மார்வலி திரும்பி விடப் போகிறது. அப்புறம் நான் என்ன செய்வேன்'' என்று உருகினான் ரங்கன்.

தேவி அவர்களைத் திரும்பியும் பார்க்கவில்லை. தங்கையைத் தன்னிடமிருந்து பிரித்து நிறுத்தினாள். ''என்னதான் நடந்தது என்று சொல்லிவிட்டு அழுடி'' என்றாள், பொறுமையிழந்து.

மீண்டும் தன் தோளை செல்வி நாடுவதையும், புயலில் சிக்கிய நாணல் போல அவளுடைய தளிர் மேனி நடுங்குவதையும் கண்டாள். தேவி, ஏதோ பெரிய விஷயம் என்று தோன்றியது. தங்கையை அணைத்துக் கொண்டாள், யோசனையுடன் அத்தையைப் பார்த்தாள்.

''அவள் ஏனடி சொல்ல வேண்டும்? என்னிடம் கேட்டால் சொல்ல மாட்டேனா? என்னைப் பார்த்தால் சொல்லக் கூடிய மனுசி போல் உன் கண்ணுக்குத் தெரியவில்லையா?'' என்று பொரிந்தாள், அத்தை.

''இல்லை பூதம் மாதிரித் தெரிகிறது'' என்று நினைத்தாள் தேவி. ஆனால் அதைச் சொல்ல முடியுமா? கையால் தங்கையின் கூந்தலை நீவியபடி அத்தையம்மாளையே முறைத்துக் கொண்டு நின்றாள்.

அந்த அம்மாளின் விழிகளில் லேசாகச் சலனம் கண்டது. விழிகள் தாழ்ந்தன. சில வினாடிகள் தாம். அதற்குள் முன்னிலும் அதிகமான அகந்தையுடன் நிமிர்ந்தாள்.

''என்னடி முறைக்கிறாய்? அவளை இங்கே யாரும் கடித்துத் தின்றுவிடவில்லை. நீ தின்று விட்டு கடாமாடு மாதிரி சுற்றவில்லையா? இவளும் அப்படி இருப்பதை யார் தடுத்தார்கள்? பெரிசாகச் சமையல் செய்கிறாளாம். அடுப்பில் விரலைச் சுட்டுக் கொண்டாள். பாவம், இந்த அசட்டுப் பையனுக்கும் என்னைப் போல இரக்கமான குணம். அவள் தவிப்பது தாளாமல் விரலில் மருந்து போடப் போயிருக்கிறான். முறைப் பையன்தானே, விரலைத் தொட்டுப் போட்டால் குடி மூழ்கி விடுமோ இல்லை, முளுகித் தான் விடுவாளா என்று கேட்கிறேன். அய்யோ சாமி, இதற்குப் போய் இந்த ஆசாத்தியம் பண்ணுகிறாளே. அவன் தொட்டால் இவள் தேய்ந்தா போவாள்?'' என்று முகவாய் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள், அத்தை.

''கொடியிடையில் காய் பறிக்க..'' என்று ஒரு மட்டமான சினிமாப் பாட்டை முணுமுணுத்தபடி அகன்றான் ரங்கு. அவனுக்குத்தான் அத்தையின் ஆதரவு இருக்கிறதே.

என்ன நடந்து இருக்கும் என்பதில் தேவிக்குச் சட்டெனப் புரிந்தது. பேச்சில், பார்வையில் காலித்தனம் செய்தவன் இப்போது செயலிலும் துணிந்து விட்டானா? உடல் பதற, ''அத்தை அள வோடு பேசுங்கள்'' என்று கத்தினாள், தேவி.

''ஆமாண்டி நீ உத்திரவு போடு, நான் உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்ளுகிறேன். திமிரைப் பார், படித்து விட்ட கர்வ மடி? அன்றைக்கே போதும் படிப்பு என்று உன் காலை முறித்து வீட்டில் போட்டிருக்க வேண்டும். உம் மாமா கொடுத்த இடம் அவர் போன பிறகும் நீ என்னை அதட்டுகிறாய், தண்டச் சோறு தின்னும் சனியனுக்கு எவ்வளவு திமிர் இருந்தால்...''

மேலே அவளது வசைமாரியை நின்று கேட்கவில்லை. தேவி செல்வியை இழுத்துக் கொண்டு அங்கிருந்து அகன்றாள்.

சமையல் அறைக்கு அடுத்ததாக விறகு போடும் இடம் ஒன்று உண்டு. அந்த இடம்தான் தேவி - செல்வியின் அரசவை. அங்கே ஒரு பெரிய மரத்துண்டின் மேல் தேவி அமர்ந்தாள், செல்வியையும் அருகில் அமர்த்திக் கொண்டாள்.

''அக்கா'' என்று மெல்ல அழைத்தாள் செல்வி.

''ஏம்மா''

''அக்கா, நாம் இருவரும் எங்கேயாவது போய்ச் செத்து விடுவோமா?''

''சே அசடு, நாம் ஏனடி சாக வேண்டும். அப்படிச் சாவதற்கு நாம் என்ன தப்பு செய்தோம்..?''

''இல்லை அக்கா... அந்த ரங்குவை நினைத்தாலே பயமா இருக்கிறது.''

சொல்லும் முன்பே செல்வியின் உடல் நடுங்கியது.

தங்கையை உற்றுப் பார்த்தாள் தேவி. பதினைந்து வயதுச் சிறுமி, பால் முகம், பச்சைக் குழந்தை. இவளிடமா? இவளிடமா அப்படி அநாகரிகமாக நடப்பதா? அதற்கு அதற்கு அத்தையின் ஆதரவு வேறா? திமிர்! தன்னை யார் கேட்பது என்ற திமிர். இளக்காரம்! நம்மை அண்டி வாழுகிற அபலைகள்தானே என்ற இளக்காரம். போக்கிடம் அற்ற அபலைகள் தானே என்ற துணிச்சலில் செல்வியிடம் கைநீட்டி இருக்கிறான், அயோக்கிய ராஸ்கல்.

சட்டெனத் தங்கையை நிமிர்த்தினாள், தேவி. ''ஏன் செல்வி, அடுப்பில் கொள்ளிக் கட்டை இல்லையா? எடுத்து அவன் கண்ணில் சொருகுவதற்கு என்ன?'' என்று அதட்டினாள்.

'அக்...கா.... எனக்கு பயமாய் இருக்கிறதே' என்று மீண்டும் அழத் தொடங்கினாள், செல்வி. தேவியின் மனம் உருகியது. தங்கையை அணைத்துக் கொண்டாள்.

அப்பொழுது ''உள்ளே போய்ப் பாரேண்டி, அந்த அடங்காப் பிடாரி அங்கேதான் இருக்கும்'' என்று அத்தையின் பெருங்குரல் கேட்டது.

அடங்காப் பிடாரிப் பட்டம் தனக்கே உரியது என்று தேவி அறிவாளே? இந்த நேரத்தில் தன்னைத் தேடி வருவது யார் என்று சென்று பார்த்தாள்.

வந்தவள் செந்திரு.

அவளுடைய ஒரு கன்னம் வீங்கியிருந்தது. அவளை அடித்தவன் மேல் ஆத்திரம் வந்தது. உலகம் முழுமையிலுமே எளியாரை வலியார் மிதிப்பதுதான் இயற்கையா? இது என்ன அநியாயம்!

தேவி செந்திருவை அருகே அழைத்து அடிபட்ட கன்னத்தை மென்மையாக வருடினாள். ''ராட்சசன்! என்னமாக அடித்து விட்டான்!'' என்று வருந்தினாள்.

செந்திரு அவள் அளவுக்கு வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ''இல்லை, அக்கா, அந்த ஆள் பொல்லாதவர் இல்லை. ''இதோ பார் எனக்குப் பத்து ரூபாய் கொடுத்தார்'' என்று கண்களை உருட்டினாள்.

''ஓகோ, ரேட்டை உயர்த்தி விட்டாரோ! ஏண்டி, பத்து ரூபாய் தந்தால் அவன் நல்லவனாகி விடுவானா?'' என்று கோபத்துடன் கேட்டாள் தேவி.

''அதுமட்டும் இல்லையக்கா உங்களுக்கும் கடிதமோ என்னவோ தந்தார். உள்ளே பணம் கூட இருக்கிறதாம்'' என்று ஒரு கடித உறையை எடுத்து தேவியிடம் நீட்டினாள், செந்திரு.

லேசான புருவச் சுளிப்புடன் தேவி அதைப் பார்த்தாள். பிறகு நிதானமாகப் பிரித்தாள். உள்ளே மடித்தாற்போல் ஒரு நூறு ரூபாய் நோட்டு இருந்தது. அதன் உள்ளே சிறு கடிதம், தேவி படித்தாள்.

''ஒரு ரூபாயை வீசியெறிந்து விட்டாய், இந்த நூறை என்ன செய்வாய்? நேரில் பார்க்க எனக்கு ஆசைதான். ஆனால் நேரம் இல்லையே, இதைக் கொண்டு ஒரு நல்ல சேலை வாங்கிக் கொள்.''

## 3

கடிதத்தைப் படிக்கையிலே தேவியின் முகம் சிவந்தது. ''என்ன திமிர்'' என்று சீறுமுன் செந்திரு உற்சாகத்துடன் குதித்தாள்.

''அக்கா, அக்கா நூறு ரூபாயா? அப்படியானால் நீ பெரிய பணக்காரி ஆகிவிட்டாய் இல்லையா? அந்த ஆள் நல்லவர்தான் அக்கா. நூறு ரூபாயைக் கொடுத்து விட்டாரே'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

தேவி அவளை இரக்கமாகப் பார்த்தாள். நூறு ரூபாயில் ஒருவர் பணக்காரராகி விட முடியுமா? அன்றாடம் பூ விற்று இரண்டு ரூபாய் சம்பாதிக்கிறவள், அவளுக்கு நூறு ரூபாய் பெருந்தனம் தான்; ஆனால் அதை அலட்சியமாக விட்டெறிந்து இருக்கிறானே அந்த அகம்பாவி? அந்த நூறு ரூபாயும் குப்பைக் காகிதமும் அவனுக்கு ஒன்றுதான். எவ்வளவு திமிர் இருந்தால் பணமும் அனுப்பி விட்டு, ''சேலை வாங்கிக் கொள்'' என்றும் எழுதுவான்! அவள் கந்தலைக் கட்டினால் என்ன? கிழிசலை உடுத்தினால் என்ன? இவன் யார் அதைப்பற்றிச் சொல்லுவதற்கு?

சேலையில் வெளியே தெரிந்த கிழிசலை ஆத்திரத்துடன் மறைத்தாள். தேவி அந்த நூறு ரூபாயை செந்திருவிடம் நீட்டினாள். ''எவனோ கொடுத்தால் நீ வாங்கி வந்து விடுவதாடி? உம்! போய்த் திருப்பிக் கொடுத்து விடு, ஓடு'' என்றாள், அழுத்தம் திருத்தமாக.

செந்திரு மிரள விழித்தாள். ''அய்யய்யோ! நான் மாட்டேன், அக்கா... இதைக் கட்டாயம் உன்னிடம் கொடுத்து விடச் சொல்லியி ருக்கிறார். நீ வாங்கவில்லை என்று தெரிந்தால், என்னைக் கொன்றே விடுவார். நான் வாங்க மாட்டேன் நீயே ஏதாவது செய்து கொள்'' என்று ஓடப் பார்த்தாள்.

தேவி அவளைக் கையெட்டிப் பிடித்தாள். ''இந்தாடி என் றால்...''

''அக்கா அவர் காரில் கிளம்பிப் போய் விட்டார். அக்கா சென்னைக்குப் போகிறாராம். நான் எப்படிக் கொடுக்க முடியும். அதோடு கட்டாயம் பணத்தை உன்னிடம் சேர்த்து விட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அக்கா என்னை விட்டுவிடு அக்கா,'' என்று மன்றாடினாள் சிறுமி.

''இந்த பணத்தை தேவியிடம் சேர்க்கா விட்டால் ஏதேனும் செய்வேன்'' என்று அந்த ''தினு'' மிரட்டியிருக்க வேண்டும். அல்லது செந்திரு ஏன் இப்படி மிரண்டு விழிக்க வேண்டும்?''

''அக்கா'' என்று செல்வி அழைத்தாள்.

''என்ன?'' என்று திரும்புமுன் தேவியின் பிடியிலிருந்து நழுவி ஓட்டம் பிடித்தாள், செந்திரு. எங்கே போய் விடுவாள்? பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தங்கையிடம் திரும்பினாள் தேவி.

அதற்குள் ''எல்லா மூதேவிகளும் மூலையில் அடைந்து கொண்டால் இருப்பவர்கள் எப்படிச் சாப்பிடுவது?'' என்று அத்தை யம்மாளின் கடுங்குரல் வீடெல்லாம் எதிரொலி கிளம்பியது.

அவசர அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டு கிளம்பி னாள், செல்வி.

''உட்காரடி'' என்று அவளை அதட்டினாள், தேவி. ''இரண்டு கை உள்ள மனிதப் பிறவிகள் சட்டியில் இருந்து எடுத்துப் போட் டுக் கொண்டு சாப்பிடுவார்கள். மற்றதுகள் எக்கேடும் கெடட்டும்'' என்று உரக்க மொழிந்தாள்.

சற்று நேரம் அமைதி நிலவியது.

பிறகு ஏதோ பாத்திரங்கள் உருளும் ஓசை கேட்டது. 'வாடா ரங்கு' சாப்பிடுவோம். மிச்சம் மீதி இருந்தால் சாக்கடையில் கொட்டு, பட்டினி கிடந்தால்தான் இந்தப் பிடாரிகளுக்கு புத்தி வரும்'' என்றாள், அத்தை.

அலட்சியமாக முகத்தைக் குலுக்கினாள், தேவி. ''சும்மா படுத்துத் தூங்கு செல்வி. ஒருவேளைப் பட்டினியில் நாம் செத்து விட மாட்டோம், நம் மனமும் செத்து விடாது.''

தேவிக்கு பணிந்து படுத்தாள் செல்வி.

தேவி குறுக்கும் நெடுக்கும் நடை போட்டாள்.

இனி இங்கே இருப்பது ஆபத்து என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் ஒரு தரம் இப்படி நடந்தால் செல்வியின் மனம் ஒடிந்து விடும்.

அதுமட்டுமல்ல, அத்தையின் திட்டமும் இப்போது தேவிக்கு நன்றாக விளங்கியது. தன் உதவாக்கரை உறவினனுக்கு செல்வியைக் கட்டிப் போட்டு விட வேண்டும் என்பது அவளது திட்டம். அவள் வீட்டுக்கு ஒரு நிரந்தர வேலைக்காரியும் கிடைப்பாள் அல்லவா? தேவி கொஞ்சம் ஏமாளியாக இருந்திருந்தாள் அவளிடமே முயன்றிருப்பாள். செல்வியின் துணிவின்மை அவளுக்கு வாய்ப்பாகிப் போயிற்று.

இப்போது இங்கிருந்து சென்று விட வேண்டும். சென்றபின் என்ன செய்வது என்பது பிரச்சினை இல்லை.

தேவியின் வகுப்புத் தோழி பானுரேகா. அவளுடைய அக்கா சசிரேகா சென்னையில் ஒரு டாக்டர். சிறு பருவத்தில் இருந்தே தேவி, செல்வி இருவரிடமும் அவளுக்கு ஒரு தனிப்பற்று உண்டு. இங்கே இவர்கள் படும் துன்பம் தாளாமல் சென்னையில் தேவிக்கு ஒரு வேலை தேடி வைத்திருந்தாள். அதுபற்றிக் கடிதமும் எழுதியிருந்தாள். ஆனால் சென்னைக்கு எப்படிப் போவது? மதுரையிலருந்து சென்னை வரை செல்ல வேண்டும். கொஞ்ச தூரம்தான் — காலெட்டுப் போட்டு நடந்து சென்று விடலாம் என்பதற்கு சென்னை அருகே இல்லையே டிக்கட்டுக்குப் பணம்?

பணம்! தேவிக்குப் பளிச்சென்று மூளையில் பொறி தட்டியது. கைக்குள் கசங்கியிருந்த உறையைப் பார்த்தாள். அதற்குள் இருந்த நூறு ரூபாய் - அது தேவியையும், செல்வியையும் சென்னைக்குக் கொண்டு சேர்க்குமே.

ஆனால், அந்தப் பணத்தையா பயன்படுத்துவது? எவனோ ஒருவன், முன்பின் அறியாதவன் எவ்வளவு மட்டமாக அவளை எடைபோட்டு பணம் அனுப்பியிருக்கிறான் இருந்திருந்து 'அந்த'ப் பணத்தைத் தொடுவதா? அதை திருப்பிக் கொடுத்துவிட வேண் டாமா?

'முட்டாள் மூளையே கண்டபடி உளறாதே' என்று தன் தலையிலேயே ஒன்று போட்டுக் கொண்டாள். தேவி இந்தப் பணத்தை அனுப்பியவன் இங்கே இல்லை. அப்படியிருக்க அவனி டம் எப்படிப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பது? அவனும் சென்னைக்குத் தான் போகிறானாம், செந்திரு சொன்னாளே, தேவி யும் அங்குதானே செல்ல வேண்டும்? அங்கே சென்றதும், முதல் மாதச் சம்பளத்திலேயே நூறு ரூபாய் எடுத்து அவனிடம் கொடுத்து விடுவது அவ்வளவுதானே? இப்போது கடவுளாகப் பார்த்துக் காட்டிய வழியைக் கைவிடலாமா?

தேவி ஒரு முடிவுக்கு வந்து விட்ட திருப்தியுடன் ரூபாய் நோட்டை எடுத்துப் பார்த்தாள். ஏதோ ஒன்று அவள் மனதில் நெருடியது. இந்தப் பணத்தால் அவளது வாழ்வே மாறிவிடுமோ என்று தோன்றியது. தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள். இந்த அடிமை வாழ்வில் இருந்து விடுதலை பெற்றுப் புதுவாழ்வு தொடங்கத்தானே இதைப் பயன்படுத்தப் போகிறாள். பிறகு வாழ்வு மாறுமோ என்று அஞ்சுவானேன்?'' அசட்டு மனம்!

இவ்வளவு நேரம் தமக்கையை பார்த்துக் கொண்டு இருந்த செல்வி, என்னக்கா அது? சசி அக்காவின் கடிதமா? பணமும் அனுப்பினார்களா?'' என்று வியப்புடன் வினவினாள்.

தேவியின் பதிலை எதிர்பாராமல் சசி அடிக்கடி கடிதம் எழுதுவாள். ஏனெனில் உறை வாங்கும் அளவு கூட தேவியிடம் அனேகமாக காசு இராது என்பது அவளுக்குத் தெரியும். அப்படி

எழுதுவதும் கமலி என்ற இன்னொரு சிநேகதி வீட்டுக்குத்தான் எழுதுவாள். எங்கே அத்தை கையில் கிடைத்தால் அதோகதி ஆயிற்றே. ஆனால், அவ்வளவு அன்பானவளிடம் இருந்து கூடப் பணம் பெற தேவி சம்மதித்தது இல்லை. எனவேதான் செல்விக்கு வியப்பு ஏற்பட்டது.

முதலில் என்ன பதில் சொல்வது என்பது தேவிக்கு புரிய வில்லை. பிறகு மெல்ல, ''இல்லையடி இது... கமலி வீட்டில் ஏதோ விழாவாம். வெற்றிலை பாக்குடன் வைத்துத் தந்தார்கள். சசி அக்கா கடிதம் மட்டும்தான் போட்டார்கள்'' என்றாள்.

பிறகு உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டாள். ''செல்வி, நாம் இங்கிருந்து போய்விடலாம்? இங்கே இருப்பது எனக்குப் பிடிக்கவே இல்லை.''

''எனக்கும் இங்கே நிரம்பவும் கஷ்டமாக இருக்கிறது அக்கா. ஆனால் இங்கிருந்து எங்கே போவது'' என்று கேட்டாள் செல்வி.

''சென்னைக்குப் போகலாம். அங்கே சசி அக்கா எனக்கு ஒரு வேலை பார்த்து வைக்கிறார்களாம். சம்பளம் என்ன தெரியுமா? முந்நூறு ரூபாய். மூன்று நூறுகள்!''

''அடேயப்பா! அப்படியானால் நாம் பணக்காரர்களாகி விடுவோம்'' என்றாள், செல்வி உற்சாகமாக.

தேவியின் முகம் சட்டென மாறியது. சற்றுமுன் செந்திரு இதையேதான் சொன்னாள் அந்த அகம்பாவக்காரன் அனுப்பிய பணத்தைப் பார்த்துச் சொன்னாளே. பிடிவாதமாக அவன் நினைவை அகற்றினாள். வலியச் சிரித்தபடி, ''ஆமாமடி. முகம் கழுவிக் கொள் அடுத்து முதல் ரெயில் எதுவோ அதில் கிளம்பி விடலாம். சீக்கிரம்'' என்று தங்கையைத் துரிதப்படுத்தினாள்.

திடீர் என்று 'எங்கேடி கிளம்புகிறீர்கள்?' என்று பூசை வேளைக் கரடி மாதிரி அத்தை உள்ளே நுழைந்தாள்.

கொஞ்சம் தெம்புடன் எழுந்த செல்வி அப்படியே உட்கார்ந்து விட்டாள். அத்தையாவது, அவர்களை அனுப்பி வைப்பதாவது?

ஆனால் அந்த மாதிரி அச்சம் ஏதும் தேவிக்குத் தோன்ற வில்லை. ''சென்னைக்கு'' என்று நிமிர்ந்து பார்த்து அழுத்தம் திருத்தமாகப் பதில் கூறினாள்.

''போவாயடி, போவாய். இங்கே இருக்கிறவன் ஏமாந்திருந் தால் சென்னைக்கு மட்டுமா ஓடுவாய்? இன்னும் எத்தனை ஊர் உண்டோ அத்தனை ஊருக்கும் ஓடுவாய் ஓகோன்னானாம்! வாசற் படி தாண்டிக் காலை வைத்தாயோ அப்புறம் இந்தப் பக்கம் அண்டவிட மாட்டேன்'' என்று கர்ச்சித்தாள், அத்தை.

''நிரம்பவும் நல்லதாகப் போயிற்று'' என்றாள் தேவி சாவதா னமாக. ''நாங்கள் கிளம்புவதன் நோக்கமே அதுதானே.''

''எது?''

''உங்களை அண்டி இனி வாழக் கூடாது என்பது.''

அத்தை சற்று விழித்தாள். ''இதுகள் போக்கிடம் அற்ற கழுதைகள் தானே; விரட்டி விடுவேன் என்றாள் மிரண்டு போவார் கள்'' என்று நினைத்துப் பேசினாள். தேவி அது நல்லது என்றதும் திகைத்து விட்டாள்.

''ஆமாம் அத்தை, இவ்வளவு காலம்தான் உங்களுக்குப் பார மாக தண்டச்சோறு தின்னும் சனியன்களாக இருந்தாயிற்று. இனி யும் உங்களுக்குச் சுமையாக இருக்க விருப்பம் இல்லை. அதனால் இந்த அன்பான வீட்டை விட்டுப் போகிறோம்'' என்று லேசான புன்னகையுடன் இனிமையான குரலில் பேசினாள் தேவி.

அவள் பேச்சு அத்தைக்கு நன்றாகப் புரிந்தது. தான் செய்த கொடுமைகளைக் குத்திக் காட்டுகிறாள் என்று ஆத்திரம் உண்டா யிற்று. பயங்கரமாக பல்லை இளித்தாள். ''அப்படியாடி கண்ணு களா? ஆமாம். ரெயில் டிக்கட்டுக்குப் பணம் வேணுமே, அதற்கு என்ன செய்தீர்கள்? அதை எந்தக் கள்ளப் புருஷன் தந்தான்?'' என்று இழுத்தாள்.

''சீ, போ' என்று எதையும் அலட்சியம் செய்துவிடக் கூடிய தேவிக்கே நெஞ்சில் 'சுரீர்' என்று வலியெடுத்து விட்டது. பாவம் பூஞ்சை மனத்துச் செல்வியைக் கேட்பானேன்.

''அய்யோ அத்தை, அப்படியெல்லாம் பேசாதீர்கள்...'' என்று கதறிய செல்வி, அப்படியே மயக்கம் அடைந்து விழுந்து விட்டாள்.

## 4

'இங்கிருந்து அவளிடம் வாய் கொடுத்தோமே' என்று தன்னையே நொந்து கொண்ட தேவி, ஓடிச் சென்று கொஞ்சம் நீர் கொண்டு வந்தாள். தங்கையின் முகத்தில் தெளித்தாள். 'எழுந் திரு செல்வி, எழுந்திரு. இதற்கெல்லாம் மயங்கி விழுந்தால் எப்படி வாழ்வது? தெருவில் செல்லும்போது ஏதேதோ குலைக்கி றது. அதையெல்லாமா பொருட்படுத்துவது? அசடு...'' என்று தேற்றினாள்.

தங்கையைத் தேற்றும் ஆத்திரத்தில் அந்த அத்தை அருகி லேயே நிற்பதை தேவி மறந்து விட்டாள். பலன்? அவள் மீண்டும் ஆங்காரமாய்க் கத்தத் தொடங்கி விட்டாள். ''ஆமாமடி.... நான் நாய்தான். தெருவில் குலைப்பவள்தான். ஆனால், நான் வெளிச்சத் தில் நிற்கிறவள், உன்னைப் போல இருட்டில் சம்பாதிக்கவில்லை, அந்த, மானங்கெட்ட வாழ்வு...''

''அத்தை'' என்று கத்தினாள் தேவி. ''என் கால் தூசியை மிதித்தவர்களுக்குக் கூட அந்த மானம் கெட்ட வாழ்வு வாழத் தோன்றாது. அதுமட்டும் அல்ல, உயிருக்கும் மேலாக நான் நினைக்கிற மானம் — என் தங்கையின் மானம் கெட்டு விடக் கூடாது என்றுதான் இங்கிருந்து வெளியேறுகிறோம் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டுச் செல்வியிடம் திரும்பி னாள். ''வா செல்வி போய் விடுவோம், இனிமேலும் தாமதிக்க வேண்டாம், கிளம்பு.''

''கிளம்புவதற்கு என்னடி இருக்கிறது? கட்டிய துணியோடு வெளியேறுங்கள். வேறு ஒரு துண்டுத் துணி கூட எடுத்துச் செல்ல விடமாட்டேன்'' என்று குதித்தாள், அத்தை.

''ஒன்றும் வேண்டாம், அத்தை இதுபோதும் அந்த இன்னொரு கிழிசலை நாங்கள் இங்கேயேதான் விட்டு விட்டுப் போகிறோம். பத்திரமாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஏன் தெரியுமா? காலம் மாறும். மலையும் மடு ஆகும். அப்படி ஒரு தேவை ஏற்படும்போது உங்களுக்குக் கட்டுவதற்கு அந்தக் கிழிசலாவது மிஞ்ச வேண்டும் அல்லவா? கவனமாக மடித்து வைத்துக் கொள் ளுங்கள்'' என்று வெறுப்புடன் மொழிந்தாள், தேவி. ''வாடி'' என்று தங்கைக்குக் குரல் கொடுத்து விட்டு, முன்னே நடந்தாள்.

''வருகிறோம் அத்தை'' என்று மெல்லக் கூறி விட்டுப் பின் தொடர்ந்தாள், செல்வி.

''வர மாட்டீர்கள், உருப்படாமல் ஒழிந்து போவீர்கள்'' என்று முழுமனதாக ஆசீர்வாதம் செய்தாள், அத்தை. கெட்டுச் சீரழிந்து போவீர்கள்'' என்று சாபமிட்டாள்.

''இதுவரை சீரழிந்து கிடந்தது உண்மை. ஆனால் இனி வாழுவோம், நீங்களும் அதைப் பார்த்து வயிறு எரியுங்கள்'' என்று திருப்பி பதில் கொடுத்து விட்டு திரும்பி பாராமல் நடந்தாள் தேவி.

இருவரும் முதலில் 'டவுன் ஆல்' ரோடுக்குச் சென்றார்கள். அங்கே மலிவான இரண்டு சேலைகளை வாங்கினாள் தேவி, அவன் எழுதியது போலச் சேலை வாங்குகிறோமே என்று ஒரு கணம் மனம் சங்கடப் பட்டது. 'அவன் பணத்தைத்தான் திருப்பித் தந்து விடப் போகிறேனே' என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள்.

கடையில் இருந்து நேரே ரெயில் நிலையம் வந்தார்கள். அங்கு குளியலறையில் இருவரும் உடைமாற்றிக் கொண்டனர்.

டிக்கெட் எடுத்துக் கொண்டு இருவரும் உள்ளே சென்றார்கள்.

சிறிது நேரத்தில் சென்னைக்கு செல்லும் ரயில் வந்தது.

அது சென்னை செல்லும் ரயில்தானா என்று தேவி விசாரித்து உறுதி செய்து கொண்டு பெண்கள் பெட்டியைத் தேடினாள். அது ஒரே கூட்டமாக இருந்தது.

''ஏறிக்கொள் செல்வி'' என்றாள் தேவி.

தங்கையின் பின்னேயே தேவியும் ரெயிலில் ஏறிக் கொண் டாள்.

மறுநாள் காலையில் அக்காவும் தங்கையும் சென்னையை அடைந்தார்கள்.

சென்னை அவர்களுக்குப் புதிய ஊர்தான். அந்த ஊரைப் பற்றி தேவி கதையாகப் படித்து இருக்கிறாள். ஆகவே பழக்கப்பட்டவள் போல தைரியமாக நடந்து கொண்டாள்.

சசிரேகாவின் முகவரி தேவியிடம் இருந்தது. அவர்களுடன் ரெயிலில் வந்த ஓர் அம்மாவின் உதவியுடன் அந்த முகவரியை அதிகச் சிரமமில்லாமல் கண்டு கொண்டாள்.

வீட்டு வாசலில் 'டாக்டர் சசிரேகா' என்ற பெயர்ப்பலகை பதிக்கப்பட்டு இருந்தது. அதைப் பார்த்ததும் தேவியின் முகம் மலர்ந்தது. தங்கையை அழைத்துக் கொண்டு உரிமையுள்ளவள் போல், வேகமாக உள்ளே சென்றாள்.

அப்பொழுதுதான் மருத்துவமனைக்குப் புறப்பட்டுக் கொண்டு இருந்த சசி தேவியைப் பார்த்ததும் ஓடிவந்து கட்டிப் பிடித்துக் கொண்டாள். குழந்தையைப் போலே தூக்கி முத்தமிட்டுக் கொஞ்சினாள். தேவியை எதிர்பாராது சந்தித்ததில் அவளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி, அவளது அன்புப் பிடியில் தேவி திணறினாள். செல்வியையும் சசி அரவணைத்துக் கொண்டாள்.

''தேவி! சென்னைக்கு எப்பொழுது வந்தீர்கள்? எனக்கு ஏன் முன்கூட்டியே கடிதம் எழுதவில்லை? ஒரு தந்தி கொடுத்தால், அழைத்துச் செல்ல ரயில் நிலையத்துக்கு நானே கார் கொண்டு வந்திருப்பேன்?'' என்று சசி அன்புடன் பொரிந்தாள்.

''உங்களுக்கு வீண் சிரமம் கொடுக்க வேண்டாம் என்று தான் நாங்களே வந்து விட்டோம்'' என்றாள் தேவி.

''இது என்ன சிரமம்? உங்களுக்கு உதவி செய்ய காத்துக் கொண்டு இருப்பவள் நான்'' என்றாள் சசி.

''உதவி செய்பவர்களை தொடர்ந்து தொல்லை கொடுக்கக் கூடாது அல்லவா?'' என்று தேவி புன்னகைத்தாள்.

''முதலில் குளித்து சாப்பிடுங்கள். மற்றதெல்லாம் பிறகு பேசிக் கொள்வோம்'' என்ற சசி, வேலைக்காரியை அழைத்து, அவர்கள் குளிக்க ஏற்பாடு செய்யச் சொன்னாள்.

டாக்டர் சசிரேகா இயல்பாகவே நல்ல பெண்மணி. தேவி சகோதரிகளிடம் அன்பும் அனுதாபமும் கொண்டு இருந்தாள். அவர்கள் சென்னைக்கு வந்திருப்பதன் நோக்கம் தெரிந்ததும், அவர்களுக்கு எல்லா ஆதரவும் அளித்தாள். அதை தனது கடமையா கக் கருதினாள்.

முதலில் தேவியை வேலையில் அமர்த்தினாள், முந்நூறு ரூபாய் சம்பளம்.

வேலைக்குச் சென்றதும் இனியும் சசி வீட்டில் தங்குவது முறையல்ல என்று தேவி நினைத்தாள். சசி எவ்வளவோ சொல்லி யும் தனி வீடு பார்க்கும்படி தேவி வற்புறுத்தினாள். அதன்படி சசியே அவர்களுக்கு ஒரு சிறு வீட்டின் மாடியை வாடகைக்கு அமர்த்திக் கொடுத்தாள்.

தேவி சம்பாதித்துப் போட்டாள். வீட்டு வாடகை போக, இரண்டு பச்சை நோட்டுக்கு மேலாகவே தேவி கையில் சலசலத்தது.

வீட்டுப் பொறுப்பைச் செல்வி ஏற்றுக் கொண்டாள். தேவி வேலை முடிந்து வருமுன் செல்வி மறுநாளைக்குத் தேவையான காய்கறிகளை வாங்கிக் கொண்டு வீடு திரும்பி விடுவாள்.

தண்ணீர்ச் சோற்றைச் சுடு சொல்லோடு உண்டவர்களுக்கு சோறும் ஒரு குழம்பும் கூட்டுமே அமிர்தமாக இருந்தன.

யாரின் அதட்டலும் இல்லாத நிம்மதியான வாழ்க்கை. சில நாட்களில் மாலையில் கோயில், சினிமா, கடற்கரைக்கு செல்வது உண்டு. நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் சசி வீட்டுக்கும் போவது உண்டு. காலம் வெகு இனிமையாக கழிந்தது. இவ்வளவு நிம்மதியும் இனிமையும் வாழ்க்கையில் இருக்க முடியுமா என்று இருவருமே வியப்பதும் உண்டு.

இந்த நிம்மதிக்குள்ளும் அன்று அத்தை பேசிய சொற்கள் நினைவுக்கு வந்தால் தேவிக்கு துக்கம் கெட்டு விடும். அதனால் முடிந்த அளவு அதை நினைப்பதே இல்லை. நினைத்தாலும் செல்வியிடம் அதைப் பற்றிப் பேசாமல் இருந்து விடுவாள்.

அதுபோலவே செல்வி எப்போதாவது முகம் வாடிக் காணப்படுவாள். அந்த நேரங்களில் காணாதது போல இருந்து விடுவாள் தேவி. அத்தைப் பேச்சைப் பற்றிய நினைவில் வருந்துகிறாள் என்று தேவி அறியாளா, என்ன. தானா ஆறிவரும் புண்ணை மீண்டும் மீண்டும் பேசி கிளறி அதிகமாக்குவானேன்?

ஒரு கசப்பை மறக்க முடிந்த தேவிக்கு இன்னொரு கசப்பைச் சீரணிக்க முடியவில்லை. அந்த நூறு ரூபாய்க்காரனுக்கு அவனது பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லையே. முதல் மாதச் சம்பளத்திலேயே தேவி அந்தப் பணத்தை எடுத்துத் தனியே வைத்து விட்டாள். அதன்பின் பன்னிரண்டு மாதம் ஆகி விட்டது. ஆனால், இந்த ஓர் ஆண்டு காலமாக அவனைக் காணும் புண்ணியத்தை தேவி பண்ணவில்லையே, புண்ணியமா? அவனை காண்பதே பாவம்தான்! ஆனால், செய்து தொலைக்க வேண்டிய பாவம். அலுவலகம் செல்லும்போது, வரும்போது, திரைப்படம், கடற்கரை என்று செல்லுகையில், எப்போதும் அவனுக்காகத் தங்கை அறியாமல் தேடுவாள். ஆனால் பலன்தான் ஏமாற்றமாக இருந்தது.

''அந்தப் படுபாவியைப் பார்த்து, என்றைக்கு என் கடனை தீர்த்துக் கொள்ளப் போகிறேனோ?'' என்று சிந்தித்துக் கொண்டே ஒரு நாள் மாலையில் தேவி வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டுக் கதவில் பூட்டு தொங்கியது.

## 5

தேவி திகைத்துப் போனாள்.

அவள் அலுவலகத்தில் இருந்து திரும்பி வரும்பொழுது ஒருநாள் கூட வீடு பூட்டியிருந்தது இல்லை. செல்வி மணக்க மணக்கக் காப்பியைக் கையில் வைத்துக் கொண்டு அவளுக்காகக் காத்துக் கொண்டு நிற்பதுதான் வழக்கம்.

தேவி வீட்டுக்கு திரும்புமுன் செல்வி காய்கறி வாங்கி வந்து விடுவாள். அந்த நினைவு வந்ததும், 'ஓ - இன்னும் கடையில் இருந்து திரும்பவில்லையோ?' என்று நினைத்துக் கொண்டே, தேவி வீதியைப் பார்த்தாள்.

அப்பொழுது ''அக்கா!'' என்று குதித்துக் கொண்டு வந்து விட்டாள் செல்வி. அவள் கையில் காய்கறிக்கூடை கனத்தது.

தங்கையைப் பார்த்ததும் தேவியின் முகம் மலர்ந்தது. அத்தை வீட்டில் இருந்திருந்தால் இந்த சிரிப்பையும் துள்ளலையும் ஆயுள் முழுமைக்கும் கண்டிருக்க முடியுமா? பெருமிதத்தோடு கூடிய புன்னகையில் தேவியின் ரோஜா இதழ்கள் மலர்ந்தன.

குனிந்து கதவைத் திறந்தபடி, ''சீக்கிரமாக வந்து விட்டீர்களா, அக்கா?'' என்று விசாரித்தாள் செல்வி.

தேவி மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்தாள். செல்வியின் முன்பு கை நீட்டிச் சொன்னாள். ''மணி ஆறாகப் போகிறது. சீக்கிரம் என்று சொல்கிறாயே. இன்று நீதான் தாமதம். ஏன் காய்கறி

கிடைக்கவில்லையா?'' என்று வினவியபடி தங்கையின் பின்னே தேவி உள்ளே நுழைந்தாள்.

செல்வி காய்கறிக் கூடையோடு சமையல் அறைக்குச் சென்றாள். ''என்னையா அக்கா கேட்டீர்கள்?'' என்று அங்கிருந்தபடி குரல் கொடுத்தாள்.

''சேச்சே, உன்னை எங்கே கேட்டேன். அதோ அந்த சுவரை அல்லவா கேட்டேன்! சுவரே, சுவரே. இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய் என்று இப்போதாவது சொல்வாயா?'' என்று பேசிய தேவி குபீரென்று சிரித்தாள்.

''என்ன அக்கா'' என்று கொஞ்சினாள், தங்கை. ''நான் காய் வாங்கப் போயிருந்தேன்'' என்று காப்பியைச் சூடு செய்யலானாள். அந்த வேளையில் முனைந்தபடி ''இவ்வளவு நேரம் நின்றால்தான் ஆர அமர நல்லதாக வாங்க முடிகிறது. கூடாதா அக்கா?'' என்று கண்களை மலர்த்தியபடி காப்பியுடன் வந்தாள்.

அதற்குள் தேவியும் முகம் கழுவி விட்டு வந்தாள். தங்கையைப் புன்னகையுடன் நோக்கினாள். 'கூடாது என்பது இல்லையடி, இருட்டுமுன் வீடு வந்துவிடு. அவ்வளவுதான். வா, காப்பி குடிக்கலாம்' என்றாள்.

இருவரும் ஒன்றாக அமர்ந்து காப்பி பருகினார்கள்.

''செல்வி...''

''என்ன அக்கா?''

''நாளை நான் 'கேம்ப்' போக வேண்டும்.''

''எப்போது திரும்பி வருவீர்கள்.''

''இரண்டு நாளில் வந்துவிடுவேன்.''

''இன்று சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொள்ளுங்கள் அக்கா...''

''நான் வரும்வரை நீ கவனமாக இருக்க வேண்டும்.''

''வீட்டைப் பூட்டிக் கொண்டு உள்ளேயே இருப்பேன். நீங்கள் வந்து தட்டினால்தான் கதவைத் திறப்பேன்.''

''சன்னலையாவது திறந்து வைத்துக் கொள். இல்லாவிட்டால், மூச்சு முட்டி விடும்!''

தங்கையை கேலி செய்தவாறு, தேவி சிரித்தாள்.

வீட்டு வேலைகள் செய்யும் தேவி இரவில் ஒரு முறை குளிப்பது வழக்கம். அன்றும் குளித்து விட்டு வந்தாள். சாப்பாட்டு வேலைகளை முடித்து விட்டு அந்த சின்ன 'டிரான்சிஸ்டரில்' பாட்டு கேட்கத் தொடங்கினாள்.

ரசனையுடன் அடிக்கடி சிரித்துக் கொண்டாள், செல்வி. தேவிக்கு ஒரே பெருமை அவள் அல்லவோ தங்கையின் முகத்தில் சிரிப்பைப் படரவிட்டவள்!

செல்வி மெல்ல தேவியின் அருகே வந்து அமர்ந்து கொண்டாள். ஏதோ சொல்ல வருவது போல வாயெடுத்தாள். பிறகு என்ன நினைத்தாளோ, ஒரு குறுஞ்சிரிப்புடன் கவிழ்ந்து படுத்துக் கொண்டாள், அப்படியே தூக்கமும் கொண்டாள்.

ஆனால், அன்று தேவிக்குத்தான் உறக்கம் வரவில்லை. ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தாள். அது ரசிக்கவில்லை. ஏதோ தோன்றியது. புத்தகத்தை மூடி வைத்தாள். எழுந்து வந்து அலமாரியைத் திறந்தாள். அங்கிருந்த சில சேலைகளுக்கு அடியில் கையை விட்டுத் துழாவினாள். தேடியது தட்டுப்படவே அதை எடுத்துப் பார்த்தாள். அது ஒரு நூறு ரூபாய் நோட்டு.

அதையே சற்று நேரம் உற்றுப் பார்த்தாள். ஒரு கர்வியின் முகம் அதில் தென்பட்டதோ? தேவியின் முகம் சட்டெனக் கடுத்தது. அவன் முகத்தில் அந்த ரூபாயை விசிறி அடிக்க காலம் வரவில்லையே! அவளுக்கு ஒரு பெருமூச்சு வந்தது. பச்சை நோட்டை மீண்டும் உள்ளே வைத்தாள். படுக்கும் இடத்துக்கு வந்தாள். தூக்கத்தில் மலர்ந்து சிரித்த செல்வியின் முகம் கண்ணில் பட்டது. மற்ற குழப்பங்கள் மறந்தன. நிம்மதியுடன் படுத்து உறங்கி விட்டாள்.

தேவிக்கு மாதம் ஒரு முறை 'காம்ப்' போக வேண்டிய வேலை. அவளுக்கு மேல் அதிகாரி ஒரு பெண். ஆபீசர் ராங்க், உள்ளவர் 'காம்ப்' செல்லுகையில் தன்னுடன் தேவியை அழைத்துச் செல்வார். பெண்ணுக்குப் பெண் என்பதோடு தேவியின் கச்சித மான வேலையும் ஒரு காரணம்.

முதலில் செல்வியைத் தனியே விட்டுச் செல்லுவதற்குத் தேவிக்குக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. சசியின் வீட்டில் விட்டுப் போகலாமா என்றுகூட நினைத்தாள். ஆனால், மாதா மாதம் அவளைத் தொந்தரவு செய்ய மனமில்லை. எனவே தேவி 'காம்ப்' செல்லுகையில் செல்வி தனித்திருப்பது வழக்கம் ஆயிற்று. அது பழகியும் போய்விட்டது. பக்கத்து வீட்டிலும் ஆட்கள் துணைக்கு இருந்தார்கள்.

இம்முறை 'காம்ப்' சென்று வந்தபின் செல்வி மெலிந்து இருப்பது போல் தேவிக்குத் தோன்றியது.

''ஏன்?'' என்று கேட்டதற்கு ''ஒன்றும் இல்லையே'' என்று பதில் வந்தது.

மறுநாள் காலையில் தேவி வேலைக்குக் கிளம்ப சற்று தாமதம் ஆகி விட்டது. தபால்காரர் கூடத் தெரு முனைக்கு வந்து விட்டார்.

செல்வி வாயிலில் நின்று எட்டிப் பார்த்துக் கொண்டு இருந் தாள்.

''என்ன பார்க்கிறாய்?'' என்று கேட்டபடி 'டிபன் பாக்சில்' சோற்றை அடைத்தாள் தேவி.

''தபால்காரர் அக்கா, நம் வீட்டுக்கு வருகிறாரோ என்று பார்த்தேன்''. இன்னமும் அவளது பார்வை உள்ளே திரும்ப வில்லை.

தேவி சிரித்தாள். ''அசடே, நமக்குக் கடிதம் போட யார் இருக்கிறார்கள்? நமக்கு எப்படிக் கடிதம் வரும்? இப்போது சீக்கிரம் சாப்பிடவா, எனக்கு நேரம் ஆகிறது பார்'' என்று தங்கையை அழைத்தாள் தேவி.

ஒருகணம் அசைவற்று நின்றாள், செல்வி. பிறகு, ''வந்தாலும் வரும் அக்கா'' என்று மெல்லக் கூறினாள். அது தேவியின் காதில் விழவில்லை.

வரவரச் செல்வி மிகவும் மெலிந்தாள். சோர்ந்து கிடந்தாள். எந்நேரமும் படுக்கை. ஒழுங்காக உண்பது இல்லை, எது கேட்டா லும் மழுப்பலான பதில்.

தங்கையைப் பார்க்க தேவிக்கு அச்சம் உண்டாயிற்று. ஒருநாள் ஒரு மணி நேரம் முன்னதாகவே வீடு வந்தாள். பிடிவாதமாக செல்வியை டாக்டர் சசிரேகாவிடம் அழைத்துச் சென்றாள்.

செல்வியை தனியறையினுள் அழைத்துச் சென்று பரிசோதித் தாள், சசி.

பதினைந்து நிமிடம் கழித்து, சசி மட்டும் வெளியே வந்தாள். தேவியைத் தனியே அழைத்தாள். மிகவும் இரக்கத்துடன் அவளைப் பார்த்தாள்.

''என்ன சசி அக்கா? செல்விக்கு என்ன உடம்பு? இப்படிப் பார்க்கிறீர்கள் அக்கா'' என்று பதறி விட்டாள் தேவி.

உதட்டைக் கடித்துக் கொண்டு சற்றுத் தயங்கினாள் சசி. பிறகு மெல்லத் தொடங்கினாள். தேவி இது மருத்துவமனை. இங்குமங் கும் நோயாளிகளும், ஆட்களும் இருக்கிறார்கள். எனவே நீ அமைதியாக இருக்க வேண்டும். இது மிகவும் அதிர்ச்சியான செய்திதான். ஆனால், நீ அமைதியாக தாங்கிக் கொள்ள வேண்டும்.

''சசி அக்கா, செல்வியின் உயிருக்கு ஆபத்து இல்லையே?'' என்று அச்சத்துடன் கேட்டாள், தேவி.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை.''

''பின்னே எதுவானாலும் தாங்கிக் கொள்வேன், சொல்லுங் கள், சசி அக்கா. என் செல்விக்கு என்ன?''

மிகவும் பரிதாபமாகப் பார்த்து விட்டு சசி சொன்னாள்.

''செல்வி உன் செல்வியாக இல்லாமல் இன்னோர் ஆளின் செல்வியாக ஆனதால் உண்டான விளைவுதான் இது.''

''புரியவில்லை அக்கா'', தேவி தவித்தாள்.

''உன் செல்வி இப்போது கர்ப்பிணி, இது இரண்டாம் மாதம்.''

தேவி சட்டென எழுந்து நின்றாள். மொழி தெரியாதவளைப் போல; முகம் அறியாதவரைப் பார்ப்பது போலச் சசியைப் பார்த்து மலங்க விழித்தாள்.

## 6

டாக்டர் சசி, தேவியிடம் அவ்வளவு முன் எச்சரிக்கை செய்திருக்கத் தேவையில்லை. அதிர்ச்சியில் தேவி கத்தி விடக் கூடாதே என்றுதான் அவள் எச்சரித்தது. ஆனால், தேவியின் வாயில் இருந்து சத்தமே எழவில்லை.

ஒலியோ வார்த்தையோ இல்லாமல் ஒரு முறை வாயைத் திறந்து மூடினாள், தேவி. பேச முடியவில்லை. ஒன்றுமே புரியாதது போல ஓர் உணர்வு, காதுகளில் ஓவென்று ஓர் இரைச்சல், பூமி பிளந்து அவளை உள்ளிழுப்பது போல் இருந்தது. அறையில் உள்ள பொருட்கள் எல்லாம் ஏன் அறையைக் கூடக் காற்றில் மிதப்பது போலத் தோன்றியது. தலையை இரு கரங்களாலும் பற்றியபடி மீண்டும் அமர்ந்து விட்டாள். வெகு பிரயாசைப்பட்டு, 'அக்கா, தொண்டை வறளுகிறது' என்று சொல்லி விட்டுக் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

மின்னல் வேகத்தில் குளுகோஸ் கரைத்த நீருடன் வந்தாள் சசி. 'இதைக் குடி தேவி' என்று அவள் வாயில் வைத்துப் புகட்டினாள்.

கொஞ்சம் கொஞ்சமாக தேவி தெளிந்தாள். சசிரேகா சொன்னதும் மூளையில் உறைத்தது. இது எப்படி மெய்யாக இருக்க முடியும்? கூறியது எல்லாம் ஏதோ தவறு என்று சொல்லி விட மாட்டாளா என்பது போலச் சசியை ஏக்கத்துடன் பார்த்தாள்.

அந்த அகன்ற விழிகளின் தவிப்பைச் சசியால் தாள முடியவில்லை. ''பாவி, இப்படிச் செய்து விட்டாளே, நீ பட்டதெல்லாம் போதாதா? இந்தக் கஷ்டம் வேறு வரவேண்டுமா?'' என்று அவளே குமுறி அழுதுவிட்டாள்.

வறண்ட விழிகளுடன் அவள் அழுவதை வெறித்துப் பார்த்தாள் தேவி. பிறகு நினைவு வந்தவளாக, 'என் செல்வி எங்கே அக்கா?' என்று கேட்டாள்.

''உள்ளே இருக்கிறாள், தேவிம்மா.''

''அவள் என்ன சொன்னாள்'' ஒரு பெருமூச்சுடன், கேட்டாள் தேவி.

''ஒன்றும் சொல்லவில்லை. கண்ணீர் விடுகிறாள். ஆனால் உன்னிடம் சொல்லுவாள் என்று நினைக்கிறேன்.

புறங்கையால் கண்ணைத் தேய்த்துக் கொண்டு எழுந்தாள் தேவி. ''நாங்கள் வருகிறோம் அக்கா... பாவம் எங்களால் உங்களுக்கு வேலையும் கெட்டு மனதுக்கும் கஷ்டமாகி விட்டது.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை தேவி... தேவி... அவளிடம் மெல்லக் கேள். இதற்குக் காரணமானவன் யார் என்று அறிந்து, அவனுக்கே செல்வியை மணமுடிக்கப் பார்க்கலாம். எதற்காகவும் ஒரேயடியாக இடிந்து போய் விடாதே... தைரியமாக இரு மனதை...''

வெறுப்புடன் சிரித்தாள் தேவி. ''எனக்கு தைரியத்துக்கு என்ன குறைச்சல், சசி அக்கா? அத்தை ஆயிரம் தடவை சொல்வாளே 'இந்தத் துணிச்சலுக்குப் படுவாயடி' என்று. திரும்ப திரும்ப சாபம் இடுவது போலக் கூறுவாளே, இப்போது... ச்சு' கண்களில் பொங்கிவிட்ட நீரை ஆத்திரத்துடன் துடைத்தெறிந்தாள், தேவி.

''இந்தப் பெண் இப்படிச் செய்யக் கூடும் என்று எண்ணக் கூட முடியவில்லையே, செல்வி மகா சாது ஆயிற்றேம்மா'' என்று வருந்தினாள், சசி.

''என் தவறுதான் அக்கா, எல்லாமே நான் செய்த தவறினால் விளைந்ததுதான். என்னைப் பொறுத்தவரையில் அலுவலகம் போவதும் வருவதுமாகப் பொழுது சரியாகி விடுகிறது. ஆனால், அவள்? வயது வந்த பெண் நாலு சுவருக்குள் நாளெல்லாம் அடைந்து கிடக்கிறாள் அல்லவா? புத்தி போக வேண்டாத வழி யில் போயிருக்கிறது. குறைந்தது அவளது படிப்பையாவது தொடர்ந்திருக்கலாம். இவ்வளவு தூரம் சென்றிராது. உம் இனி அதை எண்ணி என்ன செய்வது? வெள்ளம் பொங்கி வந்து ஊரை யெல்லாம் அழித்து ஒழித்த பிறகு முன்பே அணை கட்டியிருக்க லாமே என்ற அறிவு வருகிறது. எல்லாமே முடிந்த பிறகு இப்படிச் செய்திருக்கலாமே என்று ஞானோதயம் பிறக்கிறது'' என்று தன் னையே நொந்து கொண்டாள் தேவி.

''இப்படி வெறித்துப் பேசாதே தேவி. தவறைச் சீர் செய்ய முயற்சிப்போம். அது இயலாவிட்டால் எல்லாமே கனவு என்று ஒதுக்கி விட்டுப் புது வாழ்வு தொடங்க முடியும். அதற்கு விஞ்ஞா னத்தின் துணை இருக்கிறது. மனம் தளராமல் போ...'' என்று தேறுதல் கூறினாள் சசிரேகா.

அப்பொழுது கதவைத் தட்டிக் கொண்டு நர்சு ஒருவர் வந்தார். ''அம்மா, அந்தப் பிரசவக் கேஸ் வலிப்பு மாதிரி இருக்கிறது'' என்றாள் பரபரப்புடன்.

''நீ போ, நான் இதோ வந்து விடுகிறேன்'' என்று அவளை அனுப்பினாள் சசி.

''நாங்கள் போகிறோம்'' என்று கிளம்பினாள் தேவி.

''போய் வருகிறோம் என்று சொல் தேவி... தேவி... முட்டாள் தனமாக எதையும் செய்து வைக்காதே. அந்த அளவுக்கு எந்த இக்கட்டும் சமாளிக்க முடியாதது அல்ல...'' என்று உரைத்தாள் சசி.

மெலிந்த புன்னகை ஒன்று தேவியின் இதழ்களில் தோன்றி மறைந்தது. ''ஏன் அக்கா, நாங்கள் தற்கொலை செய்து கொள் வோமோ என்று பயப்படுகிறீர்களா? நான் இன்னமும் அவ்வளவு பெரிய முட்டாள் ஆகிவிடவில்லை'' என்று கூறி சசியிடம் விடை பெற்றாள்.

வீட்டை அடையும் வரையிலும், அதன் பின்னரும் கூட தேவி எதுவும் பேசவில்லை. எதுவுமே பேசத் தோன்றவும் இல்லை. 'செல்வி இப்படிச் செய்து விட்டாளே, இப்படி எல்லாம் செய்து விட்டாளே' என்று உள்ளம் அரற்றியது. வீட்டுக்கு வந்ததும், வேதனையுடன் சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்து விட்டாள்.

பொம்மை போலச் சற்றுநேரம் நின்றாள், செல்வி. பிறகு மெல்ல அக்காவை நெருங்கி வந்தாள். அவள் முன்னே மண்டி யிட்டு அமர்ந்தாள். 'அக்கா' என்று அழைத்தாள்.

தேவி தலை நிமிர்ந்து தங்கையைப் பார்க்கவில்லை. பேசாமல் கற்சிலை போல அமர்ந்திருந்தாள்.

செல்விக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. அவ்வளவு தான் மடமடவென்று கொட்டி விட்டாள். ''அக்கா... நான் தப்பாக நடந்து விட்டேன், கெட்டுப் போய்விட்டேன் என்று நினைக்கிறீர் கள் அல்லவா? அதெல்லாம் இல்லையக்கா... கோவிலில் வைத்து மாலை மாற்றி மணந்து பிறகுதான் நான் அவருக்குச் சொந்தமா னேன் அக்கா, மோதிரம் கூட தந்தார் அக்கா, இதோ பாருங்கள்'' என்று ஓடினாள். உள்ளே இருந்து ஒரு மோதிரத்தை எடுத்து வந்தாள்.

அதில் 'ம' என்று தமிழில் பொறித்திருந்தது.

தேவி அந்த மோதிரத்தை வெறித்துப் பார்த்தாள். 'நவீன துஷ்யந்தன், சகுந்தலைக்கு மோதிரம் போட்டானாக்கும்!' என்று முணுமுணுத்தாள்.

''அப்படி இல்லை அக்கா'' செல்வியின் கண்களில் ரோஷத்தி னால் கண்ணீர் துளித்தது. அவர் திருப்போரூர் முருகன் சன்னதியில்

மாலை மாற்றினார். இரண்டு சாட்சிகளைக் கூட அழைத்து வந்திருந்தார். அந்த சாட்சிகளின் முகவரி கூடத் தந்தாராக்கும். போட்டோ கூட எடுத்துக் கொண்டோம். ஏமாற்றுகிறவர் அப்படிச் செய்வாரா அக்கா?''

தேவி இதைக் காதில் வாங்கவில்லை. இவ்வளவு நடந்திருக்கிறது. இந்தப் பெண் ஒரு வார்த்தை கூட உடன் பிறந்தவளிடம் சொல்லவில்லையே? 'பாவி, ஒன்றுமே என்னிடம் சொல்லவில்லையேடி. என்னிடம் கூட மறைப்பதற்கு உனக்கு எப்படி மனம் வந்ததோ, தெரியவில்லையே!' என்று குமுறினாள்.

செல்வி தலைகுனிந்தாள். ''சொல்லத்தான் நினைத்தேன், அக்கா. அவர்தான் அவருடைய அண்ணனிடம் சொல்லி ஊரறியத் தாலிகட்ட ஏற்பாடு செய்யும்போது சொல்லலாம் என்று சொல்லி விட்டார்'' என்று மெல்லிய குரலில் சமாதானம் சொன்னாள்.

''பெரிய 'அவர்' யாரடி அவன், உடன் பிறந்த சகோதரியை விடப் பெரிய கொம்பன்; யார் அவன்!' என்று வெடித்தாள் தேவி.

''அக்கா, தயவு பண்ணி அவரை 'அவன் இவன்' என்று சொல்லாதீர்கள் அக்கா, எனக்குக் கஷ்டமாக இருக்கிறது'' செல்வி விம்மினாள்.

கஷ்டமா? தேவிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆத்திரப்படுவதால் என்ன பயன்? ஒரு வேளை இருக்கும் புத்தியும் மட்டமாகலாம். மற்றபடி என்ன பயன் உண்டாகப் போகிறது? அதிலம் செல்வி எவ்வளவு அப்பாவி என்பது அவள் அறிந்தது தானே, ஆகவே கோபத்தை அடக்கிக் கொண்டு நிதானமாகக் கேட்டாள், 'யார் அவர்?'

'அவர் பெயர் மனோகர் அக்கா, மிகவும் நல்லவர். ஏழை பணக்காரர் என்று பார்க்க மாட்டார். நான் வழக்கமாகச் செல்லும் காய்கறிக் கடைக்கு அடுத்த தேங்காய்க் கடைக்காரருடைய பையன் அவருடைய நண்பராம். அவரைப் பார்க்க வந்தார். அப்போது நம் காய்கறிக்காரன் என்னை ஏமாற்றி இரண்டு தரம் காசு வாங்கப்

பார்த்தான். உடனே அவர் பார்த்து அவனை அதட்டி அடக்கினார்... பிறகு.. பிறகு..'

'பிறகு அடிக்கடி சந்தித்தீர்களாக்கும்? அதனால்தான் காய்கறி வாங்கிவர அவ்வளவு நேரம் ஆயிற்றாக்கும்! என்று ஏளனமாகக் கேட்டாள், தேவி.

செல்வி கெஞ்சுவது போல தேவியைப் பார்த்தாள். பிறகு, 'ஆமாம் அக்கா போனமாதம் அவர் வட இந்தியாவுக்கு செல்ல வேண்டியதாகி விட்டது. 'அங்கே பல தொழிற்சாலைகளில் வேலை முறை பார்த்து வரவேண்டும் என்று அவருடைய அண்ணா உத்தி ரவு போட்டு விட்டாராம். குறைந்தது இரண்டு மாதம் செல்ல வேண்டியிருந்தது. அப்போது நீங்கள் கூடக் 'காம்ப்' போயிருந்தீர் கள். அவருக்கும் என்னைப் பிரியவே மனம் இல்லை; அப்போது தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்றார்... இதோ பார் அக்கா'' என்று மீண்டும் உள்ளே ஓடினாள் செல்வி. கையில் ஒரு 'போட்டோ' படத்துடன் மீண்டும் திரும்பி வந்தாள்.

''இவர்தான் அக்கா. இந்தப் படத்தை பத்திரமாக வைத்திருக் கச் சொல்லிக் கொடுத்தார். துஷ்யந்தன் என்கிறீர்களே, ஏமாற்ற நினைப்பவர் இப்படியா செய்வார்?'' என்று அழுத்தமாகக் கேட் டாள்.

தேவி படத்தைப் பார்த்தாள். பையன் அழகன்தான். கவடு அறியாதவன் போலக் கண்கள். இந்தப் பூனையும் பாலைக் குடிக் குமா என்பதுபோலச் சாதுவான தோற்றம். ருத்ராட்சப் பூனை என்று ஆத்திரத்துடன் நினைத்தாள்.

''எப்படி இருக்கிறார் அக்கா? உங்களுக்குப் அவரைப் பிடித்து இருக்கிறதா?'' என்று ஆவேசத்தோடு விசாரித்தாள் அப்பாவி செல்வி.

''எனக்குப் பிடித்தால் என்ன, பிடிக்கா விட்டால் என்ன?''

தேவி சிடுசிடுத்தாள்.

செல்வியின் முகம் வாடியது.

இதைக் கவனியாதவள் போலப் பேசினாள் தேவி.

''அவர் இப்போது எங்கே இருக்கிறார்?''

''அவர்... அவர்.. வட இந்தியாவில் இருக்கிறார் அக்கா...''

''அதுதானடி எங்கே என்று கேட்கிறேன்'' என்று பொறுமையிழந்து அதட்டினாள் தேவி. வட இந்தியா என்ன உன் உள்ளங்கையில் அடங்குகிற ஊரா? அங்கே எந்த ஊரில் இருக்கிறார் என்று சொல்லாமல் உளறுகிறாயே'' என்று கடிந்தாள்.

செல்வியின் முகமலர் மேலும் கூம்பியது. ''அது தெரியவில்லையே அக்கா, அவர் எழுதவில்லை...''

அவரது கடிதத்தை எதிர்பார்த்துத்தான் அன்று வாயிலில் நின்றாயாக்கும்? இந்த விஷயம் அவருக்குத் தெரியுமா? என்ன சொல்லுகிறார்'' உள்ளூரக் கவலையுடன் கேட்டாள் தேவி.

குழப்பத்துடன் தமக்கையை நோக்கினாள் தேவி. ''இதை எழுதினேன் அக்கா, அதன் பிறகு இன்னமும் பதில் வரவில்லை. ஏன் என்று தெரியவில்லை.. ஆனால், சீக்கிரம் வந்து விடும் என்று நினைக்கிறேன். வந்துவிடும் அக்கா, சீக்கிரம் வந்துவிடும், வந்தே விடும்'' என்று திரும்பத் திரும்பக் கூறிவிட்டுக் கைகளில் முகம் புதைத்து விம்மினாள் செல்வி.

தேவிக்கு மனம் பதறியது. 'இன்னமும் பதில் வருமென்று நினைக்கிறாயா, பைத்தியமே' என்று அவள் மனம் அரற்றியது.

உண்டு முடித்த வண்டு பறந்தாயிற்று. சூல் கொண்டு நின்ற மலரைப் பற்றி அதற்கு என்ன அக்கறை?

# 7

கடந்த காலத்தைப் பற்றி, நடந்துபோன விஷயங்களைப் பற்றி தேவி அதிகமாக விசாரிக்கவில்லை. செல்வியிடம் திரும்பத் திரும்ப அதைக் கேட்டு என்ன பயன்? எப்படியும் முடிந்து விட்ட கதை. மாற்ற முடியாது, அதைத் துருவித் துருவி ஆராய்வது, செத்த குழந்தைக்கு ஜாதகம் பார்ப்பது போலத்தான், வீண் வேலை.

அதை விட்டு விட்டு இனி நடக்க வேண்டியதைப் பற்றிச் சிந்தித்தாள்.

தேவியின் ஒரே உறவு செல்வி மட்டும்தான். பார்க்கப் போனால், தன்னை விடச் செல்விக்காகவே வாழ்ந்தாள். சிந்தித்தாள், செயல்பட்டாள் எனலாம். அந்தத் தங்கை தன்னை ஏமாற்றி விட்டாளே என்று தேவிக்குக் கோபம் வந்தது. ஆனால், அதைவிடவும் இப்படி ஏமாந்து நிற்கிறாளே என்ற பச்சாதாபம் மிகுதியாக இருந்தது. தங்கை செய்தது தவறுதான், ஆனால் பெருந்தவறு ஆயினும் அவள் தவிப்பதை தேவியால் தாங்க முடியவில்லை. அந்தத் தவிப்பைத் தீர்க்கத் தன்னால் ஆனதைச் செய்தாள்.

அந்த மனோகரைப் பற்றிச் செல்வியிடம் விசாரித்தாள். ''தினகர் அண்டு மனோகர் டிரேடர்ஸ்'' ஒரு பெரிய கம்பெனி. ஒரு பெரிய பிளாஸ்டிக் தொழிற்சாலை வைத்திருந்தார்கள். பிளாஸ்டிக் பொருட்களைத் தயார் செய்து விற்பனை செய்தார்கள். அதன் உரிமையாளர்கள் தினகர், மனோகர் என்ற இரு சகோதரர்கள். இருவரில் இளையவன் இந்த மனோகரன். தந்தையில்லை, தாயும் தமையனும் மட்டுமே. அண்ணனிடம் தம்பிக்கு அச்சம் உண்டு. அவன் சொல்லைத் தட்ட முடியாமல் தான் வடநாடு சென்றானாம். அவ்வளவு பயந்தவன் அண்ணனிடம் பயந்து கொண்டுதான் திருமண விஷயத்தை ரகசியமாக வைத்திருக்கிறானாம். அண்ணன் ஏவிய வேலையை திருப்தியுடன் முடித்து விட்டு, அவன் நல்ல பக்குவத்தில் இருக்கும் போது இதைப்பற்றிச் சொல்லப் போகிறானாம். அதுவரை செல்வி பொறுத்திருக்க வேண்டுமாம்.

இதெல்லாம் அவன் வடநாடு செல்லுமுன் கூறிய விவரங்கள். அதன் பிறகு ஒரு தகவலும் இல்லை.

'நீ எழுதினாயாடி?' என்று செல்வியைக் கேட்டாள் தேவி.

''இரண்டு கடிதங்கள் எழுதி விட்டேன் அக்கா.'' என்றாள் செல்வி பரிதாபமாக.

தேவி சற்று யோசித்தாள். ''ஆமாம் அவர் எந்த ஊரில் இருக்கிறார் என்பது கூடத் தெரியாது என்கிறாய், எப்படிக் கடிதம் எழுதினாய்?'' என்று வினவினாள்.

''இங்கே அலுவலக முகவரிக்கு எழுதச் சொன்னார் அக்கா. ஆனால், எப்படியோ என் கடிதம் அவருக்குக் கிடைக்கவில்லை போல் இருக்கிறது.''

''கிடைத்தும் பதில் எழுதவில்லையேடி அந்தக் கலவுளிமங் கன்'' என்ற பதில் தேவியின் நுனி நாக்கு வரை துடித்துக் கொண்டு வந்து விட்டது. மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். நம்பிக்கையோடு பேச முயன்றாலும் தன் கடிதத்துக்குப் பதிலைக் காணோமே என்று செல்வி பதைப்பது தேவிக்குப் புரிந்தது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதை போல நொந்த மனதைக் குத்தலாமா?

மாறாக 'ஏன் அப்படி அலுவலகத்துக்கு எழுதச் சொன்னார்' என்று விசாரித்தாள்.

''அவர் ஊர் விட்டு ஊர் சென்று கொண்டே இருப்பாராம். அலுவலகத்துக்கு என்றால் அன்றன்று டெலிபோன் தொடர்பு இருக்கும். அடுத்துச் செல்லும் இடத்துக்குச் சரியாக அனுப்பி விடுவார்கள் அல்லவா?'' என்று விளக்கினாள் தங்கை.

''அவர் ஒன்றும் எழுதவில்லையா?''

''முதலில் அவர்தான் எழுதினார், அக்கா. இதோ பார்! என்று கசங்கியிருந்த ஒரு கடிதத்தைக் கொடுத்தாள், செல்வி.

பலமுறை பிரித்து மடித்த அடையாளம் நன்கு தெரிந்தது. யோசனையோடு கடிதத்தை மெல்லப் பிரித்துப் படித்தாள் தேவி. இரண்டு வரிப் படித்ததுமே முகம் சிவக்கக் கடிதத்தை மூடிவிட்

டாள். என்ன எழுதுவது என்று இல்லையா? சே மீண்டும் பிரித்து தேதியை கவனித்தாள். இருபது நாட்களுக்கு முந்திய கடிதம்.

செல்வி தொடர்ந்தாள். ''இதற்கு ஒரு பதில் எழுதினேன் அக்கா... பிறகு... பிறகு இந்த விஷயம் இந்த மாதிரி சந்தேகம் வந்ததும் எழுதினேன். உடனே ஏதாவது செய்ய வேண்டும்; காலம் கடத்தினால் விபரீதமாகி விடும் என்று வலியுறுத்தி எழுதினேன். ஆனால், எப்படியும் கட்டாயம் பதில் எழுதுவார் அக்கா. அல்லது அவரே வந்தாலும் வந்து விடுவார். எப்படியும் அவரிடமிருந்து சேதி வரும் அக்கா.

அல்லது அவருக்கு ஏதும் உடம்பு மிகவும் சரியில்லையோ? ஒன்றும் புரியவில்லை அக்கா!'' என்று தீனமாக முடித்தாள் செல்வி.

தேவிக்கு நெஞ்சில் ஏதோ பிசைந்தது. ''செல்விம்மா'' என்றவள் அப்படியே தங்கையை இறுக அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பில் செல்வி உருகிப்போனாள். தேவியின் மடியில் முகம் புதைத்து விம்மி அழுது விட்டாள்.

தேவிக்கு நெஞ்சு கொதித்தது. இது என்ன நியாயம்? தப்புக்கு இருவர், தண்டனைக்கு இவள் ஒருத்தி மட்டுமா?

இப்போது என்ன செய்யலாம்? அந்த மனோகர் தானாகத் திரும்பி வந்து செல்வியை மணப்பான் என்று தேவி நம்பவில்லை. திருமண உறவு என்ற பந்தம் இல்லாமல் செல்வி கிட்ட மாட்டாள் என்று அந்தக் கயவனுக்குப் புரிந்து விட்டிருக்கிறது. ஏதோ போலியாக ஓர் ஏற்பாடு செய்து அவளைச் சமாதானம் செய்து விட்டான். பிறகு காரியம் முடிந்ததும் பறந்து விட்டான். அவன் கொடுத்த முகவரிகள் ஏதும் உண்மையாக இருக்கும் என்ற நம்பிக்கை தேவிக்கு வரவில்லை.

ஆனால் இதெல்லாம் முடிந்த கதை. இனி என்ன நடக்கும்? என்ன நடக்கக் கூடும் என்று எண்ணிப் பார்க்கவே தேவிக்கு அச்சமாக இருந்தது! 'சீரழிவார்கள்' என்று சாபமிட்டாளே அத்தை; அவளிடம் சவால் விட்டு விட்டு வந்தாளே, தேவி. இது வெளியானால் அவள் மெனக்கெட்டு வந்து கொக்கரிப்பாளே. அது மட்

டுமா? விஷயம் தெரிந்தால் இந்த வீட்டினர் இங்கே தங்க விடுவார் களா? அதெல்லாம் இருக்கட்டும் ஊர் உலகம் எப்படியும் போகட் டும். செல்வியின் கதி என்ன ஆகும்? அவன் திரும்பி வரமாட்டான் என்பதை அவள் தாங்குவாளா? நிச்சயமாக மாட்டாள்.

மடியில் கிடந்த தங்கையைப் பார்த்தாள். ஓர் ஆண்டு காலத் துக்கு முன் அத்தை வீட்டில் இதேபோல் அவள் இருந்தது நினைவு வந்தது. அந்த வேதனையை நிவர்த்தி செய்ய தேவியால் முடிந்தது. ஆனால் இதை?

இதையும் நிவர்த்தி செய்தே ஆகவேண்டும். தேவி உறுதியுடன் நிமிர்ந்தாள்.

மறுநாள் செல்வியிடம் அந்த இரண்டு சாட்சிகளின் முகவரிக ளையும் பெற்றுக் கொண்டாள். உடம்பு சரியில்லை என்று அலுவல கத்தில் அரைநாள் விடுமுறை பெற்றுக் கொண்டாள். முதல் முகவரிக்குச் சென்றாள்.

அங்கே கிடைத்தது பெரிய ஏமாற்றம். அந்த பங்களாவில் யாரும் இல்லை. பக்கத்தில் விசாரித்தாள். அந்த வீட்டில் முன்பு குடியிருந்தவர்கள் காலி செய்துவிட்டார்களாம். அந்த வீட்டுப் பையன் அமெரிக்கா போய் விட்டானாம். வீட்டுக்காரர் வீட்டை பழுது பார்ப்பதால் இன்னமும் புதிதாக யாரும் குடிவரவில்லை யாம். எந்த கிராமத்துக்குப் போயிருக்கிறார்கள் என்று தெரியாதாம். பையன்...? அவன் வாஷிங்டனிலோ நியூயார்க்கிலோ எங்கோ இருக்கிறானாம்.

அடுத்த இடம்...? அங்கே பையனின் பெற்றோர்கள் இருந்தார் கள். அவர்கள் பையன் கல்கத்தாவுக்குப் பெரிய வேலை கிடைத் துப் போய்விட்டதாகப் பெருமையுடன் சொன்னார்கள். அவன் விலாசம் வேண்டும் என்றாள் தேவி. அவ்வளவுதான் அந்த பெரிய வர்களின் போக்கே மாறி விட்டது. தேவியை ஏற இறங்க ஒரு மாதிரிப் பார்த்தார்கள். நன்றாகச் சம்பாதிக்கிற பையன் என்றால் எல்லாப் பெண்களுக்கும் என்னென்னமோ ஆசை வந்து விடுகிற தாம். கலி முத்தி விட்டதாம். பெண்கள் கெட்டு விட்டார்களாம். என்ன தைரியம் இருந்தால் அவர்களிடமே முகவரி கேட்பாள்

ஒருத்தி இப்படி இன்னமும் ஏதேதோ பேசினார்கள். தேவியைப் பேசவே விடவில்லை. கடைசியில் காதைப் பொத்திக் கொண்டு தேவி வந்து விட்டாள்.

நேராக பொது தொலைபேசி நிலையம் ஒன்றுக்குள் நுழைந்தாள். அங்கேயிருந்து 'தினகர் அண்டு மனோகர் கம்பெனி'க்கு போன் செய்தாள்.

யாரோ எடுத்தார்கள். ''மனோகரிடம் பேச வேண்டும்'' என்றாள். ''மனோகர் ஊரில் இல்லை'' என்றார்கள். அவரது முகவரி வேண்டும் என்றாள், தேவி.

''எங்களுக்குத் தெரியாது. ஆனால், அவருடைய சகோதரர் இருக்கிறார், அவருடன் பேசுங்கள்'' என்று இணைப்புத் தந்தார்கள்.

''அலோ தினகர் பேசுகிறேன். அங்கே யார்? என்ன வேண்டும்?'' என்றது ஓர் அழுத்தமான குரல்.

தேவிக்கு ஒரு கணம் என்ன செய்வது என்று புரியவில்லை. அதற்குள் அவன் பொறுமையிழந்து 'அலோ அலோ' என்று அவசரப்பட்டான்.

''நான்.. நான்.. எனக்கு மனோகரின் முகவரி வேண்டும்'' என்று திணறி முடித்தாள் தேவி.

''நீங்க யார் பேசுகிறீர்கள்?'' என்று விடாப்பிடியாகக் கேட்டான் அவன்.

''நான்... அவருக்குத் தெரிந்தவள்..''

''பணக்காரப் பையனை எத்தனையோ பேர் தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்களில் நீ யார்?'' என்று அதட்டினான் தின்கர்.

''செல்வி என்றால் அவருக்கே தெரியும்'' என்றாள் தேவி ஆத்திரத்துடன்.

''ஓ... ? ஓகோ! நீதானா அது'' அவன்குரல் வெகு உதாசீனமாகத் தெரிந்தது. ''இதோ பார், நேரே விஷயத்துக்கு வருவோம், உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?''

''பணமா?'' தேவிக்கு ஒரே அதிர்ச்சி.

''ஆமாம். பணம்தான். அதற்காகத்தானே இந்த வேடம் எல் லாம். ஆனால் இந்த வலையில் சிக்க அவன் அயிரை மீன் அல்ல. சுறா ஏதோ ஓர் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் வாங்கிக் கொண்டு ஓடிவிடு..''

''உங்களிடம் தர்மம் வாங்கிச் சாப்பிட இங்கே பிச்சைக்காரி எவளும் இல்லை'' என்று வெடித்து விட்டு, போனைத் தடால் என்று தாங்கியில் போட்டாள், தேவி. ''எவ்வளவு மட்டமாக எடைபோட்டு விட்டான். பாவி.. பாவி... பாவி'' உள்ளம் கொதித் தது.

## 8

தேவிக்கு உடலும் மனமும் ஒருங்கே பதறின. அங்கேயே சற்று நேரம் சாய்ந்து கொண்டு நின்றாள். அதற்குள் யாரோ போன் செய்ய வந்தவர்கள் 'டக் டக்' என்று கதவைத் தட்டினார்கள். என்ன அவசரமோ, பாவம், தன்னை ஒருவாறு சுதாரித்துக் கொண்டு வெளியே வந்தாள் தேவி.

நேரே அலுவலகத்துக்குச் சென்றாள். ஆனால் வேலை செய்ய முடியவில்லை. மீண்டும் மீண்டும் அந்தக் குரல், அந்தத் திமிரான குரல், ''எவ்வளவு பணம் வேண்டும்? எவ்வளவு பணம் வேண் டும்?'' என்ற குரல் காதில் கேட்டுக் கொண்டே இருந்தது. எவ்வளவு அகந்தை இருந்தால் அப்படிக் கேட்பான்? உலகத்தில் எல்லோரும் இவன் பணத்துக்காக வாயைப் பிளந்து கொண்டு இருப்பதாக நினைத்தானா? அந்த நூறு ரூபாய்க்காரனின் நினைவு வந்தது. அவனும் இப்படித்தானே, ஆண்கள் எல்லோரும் அயோக் கியர்கள் என்று நினைத்தாள், தேவி. அதிலும் இந்த தினகர், அவன் எதிரே சிக்கினால் அப்படியே கன்னம் பழுத்துவிடும். அவ்வளவு ஆத்திரம் பொங்கியது அவளுக்கு.

ஆத்திரம் மட்டுமல்ல, அவமானமும் கூட - எவனோ ஒருவன்; முன்பின் அறியாதவன் எவ்வளவு மட்டமாக எடை போட்டு

விட்டான். வேடமாமே! வலையாமே! இவனுடைய தம்பியின் வேடத்தை நம்பி அவன் விரித்த வலையில் சிக்கி தன் தங்கை மாட்டிக் கொண்டு விட்டாளே என்று தேவி வேதனைப் பட்டுக் கொண்டு இருக்கிறாள். இந்த அழகில் அவனுடைய தம்பிக்கு யாரோ வலைவிரித்தார்களாமே சீ.. சீ.. சீ..! இவன் பணக்காரன் என்றால் இவன் மட்டோடு.

கோபமும் அவமானமாகக் கொதித்துக் கொண்டிருந்தாள் தேவி. சிறு வயதில் இருந்தே தேவி அப்படித்தான். அநியாயங்களுக்குப் பணியவே மாட்டாள். உடல் வீங்க விறகு கட்டையால் அடி வாங்கினாலும் சரிதான், கண்ணீர் விடவும் மாட்டாள், பணிந்து போகவும் மாட்டாள்.

கோபத்துடன் முறைத்துக் கொண்டே நிற்பாள். ஜம்பம் சாயாதபோது எல்லாம் 'பிடாரி பிடாரி' என்பாள், அத்தை, ''இந்த, வீம்புக்குப் படுவாயடி'' என்பாள். அந்த அநியாயக்காரியின் வாக்குப் பலிப்பதா? அதைப் பார்த்துக் கொண்டு அந்தக் கடவுள் சும்மா இருப்பதா? கடவுளிடமே கோபம் வந்தது தேவிக்கு.

மூன்றாம் முறையாக லெட்ஜரில் பதிந்து இருந்ததைக் கூட்டிப் பார்த்தாள். தேவி கூட்டவே மறந்தாற் போல கணக்கு இடையிலே நின்றது. அலுப்புடன் புத்தகத்தை மூடினாள். மேல் அதிகாரியிடம் சென்றாள். ''உடம்பு சரியில்லை. ஒரு நாலு நாள் லீவு வேண்டும்'' என்றாள்.

தேவி அனாவசியமாக விடுமுறை கேட்டது இல்லை. எனவே ''சரி'' என்று அனுப்பினார், அந்த அதிகாரி.

அத்தை வீட்டில் ஆத்திரம் வரும்போதெல்லாம் வைகைக் கரையோரம் நடப்பாள் தேவி. இன்றும் கால் வலிக்கு மட்டும் நடந்தாள். எதிரே ஒரு பூங்கா தெரிந்தது. உள்ளே சென்றாள். சற்று நேரம் கண்களை இறுக மூடிக் கொண்டு அசையாமல் அமர்ந்தாள். மெல்ல மெல்ல போன் பேச்சிலிருந்து மனம் விடுபட்டது. உடனடிப் பிரச்சனையில் கவனம் சென்றது. எழுந்தாள், நேரே டாக்டர் சசியின் மருத்துவமனையை அடைந்தாள்.

மற்ற வேலைகளை விட்டு விட்டு தேவியிடம் வந்தாள், சசி. 'என்னம்மா' என்று பரிவுடன் விசாரித்தாள்.

தேவி நடந்ததையெல்லாம் ஒப்பித்தாள். முக்கியமாக, அந்த அண்ணன்காரனின் திமிரைப் பற்றி மறக்காமல் சொன்னாள்.

அவன் யார் என்று விசாரித்தாள், சசி. தேவி சொன்னாள்.

''ஓ! அந்த தினகரா? கஷ்டம்தான்'' என்று பெருமூச்செறிந்தாள், சசி.

''எனக்கும் அப்படித்தான் தோன்றியது, சசிக்கா. முன்பின் அறியாதவன், முதன் முறையாகப் பேசுகிறேன், என்னிடமே எவ்வளவு திமிரோடு பேசுகிறான்; பாருங்களேன். இவனையெல்லாம் வாலை ஒட்ட நறுக்க வேண்டும் அக்கா. நடுத் தெருவில் வைத்துச் சுட வேண்டும்'' என்று படபடத்தாள், தேவி.

சசி உதட்டைக் கடித்துக் கொண்டு சற்று நேரம் பேசாது இருந்தாள். ''தேவி, அந்த தினகர் பிடிவாதக்காரன் என்று கேள்விப் பட்டு இருக்கிறேன். பெண் விஷயத்தில் கூட அவ்வளவு நல்லவன் இல்லை என நினைக்கிறேன். சமீபத்தில்கூட ஒரு பெண்ணோடு சுற்றிக் கொண்டு இருந்தான். அண்ணனைப் போலத் தம்பியும் இருந்திருக்கிறான். இனியும் செல்வியையும் அவளுடைய காதலனையும் சேர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை...''

''எனக்கு அந்த நம்பிக்கை முதலிலேயே இல்லையக்கா'' என்று குறுக்கிட்டாள் தேவி.

சசி தொடர்ந்தாள். ''இனி அவமானம் வராமல் இருக்க அந்த வழியைக் கையாள வேண்டியதுதான். இவ்வளவு காலமாக அது பாவம் என்று நினைத்தேன். ஆனால், செல்வியின் மானம் உங்கள் எதிர்காலம் எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கும்போது சும்மா இருப்பதுதான் பாவம் என்று தோன்றுகிறது. உனக்குப் புரிகிறது அல்லவா?''

தலையை ஆட்டி விட்டுச் சற்று நேரம் பேசாமல் இருந்தாள் தேவி. பிறகு ''அக்கா, செல்வி அந்த மனோகரனை இன்னமும் நம்புகிறாள். இதற்குச் சம்மதிப்பாள் என்று தோன்றவில்லை'' என்றாள்.

''உம்...''

கலைத்துவிட்டு பிறகு என்ன பண்ணச் சொல்லுகிறாய்?'' என்று மடக்குகிறாள். அக்கா, நான் என்ன சொல்லட்டும்? இதை மறைத்து இன்னொருவனை மணக்கலாம் என்று சொல்ல முடியுமா? அது வேசித்தனம் இல்லையா?'' என்று வேதனையோடு கேட்டாள், தேவி.

''ஆனால் இப்போது வேறு வழியே இல்லையே.''

''அதைத்தான்நானும் சொன்னேன் அக்கா. அந்த முட்டாள் அதற்கும் பதில் வைத்து இருக்கிறாளே, அந்த மனோகர் ஏமாற்றி விட்டதாகவே வைத்துக் கொண்டாலும் இனி அவளது வாழ்வின் பற்றுக்கோடு இது ஒன்றுதானாம். இதையும் அழித்து விட்டு எந்த நம்பிக்கையில் எதற்காக என்னை உயிர் வாழச் சொல்லுகிறாய்?'' என்று கதறுகிறாள். 'அவமானம் ஆகுமே?' என்றால், 'எனக்கு ஆதாரமே இதுதானே' என்கிறாள். பிறகு என்னை வேண்டுமானால் ஏதாவது ஆசிரமத்தில் சேர்த்துவிடு, நீயேனும் கறைப்படாமல் இரு என்கிறாள் பாவி. எப்படிச் சொல்லிவிட்டாள் பாருங்கள் அக்கா. நான் எனக்காகவா இவ்வளவு வேதனைப்படுகிறேன்? இப்படிப் பிரித்துப் பேசிவிட்டாளே' என்று குமுறினாள் தேவி.

'நீயும் முட்டாள் மாதிரிப் பேசுகிறாயே, அவள் உன்னைப் பார்த்தா பேசினாள். நாம்தான் கேவலத்துக்கு ஆளாகிவிட்டோம். அக்காவாவது நல்லபடி இருக்கட்டுமே என்று நினைக்கிறாள். நீ அதற்குள் கொதிக்கிறாயே' என்று சமாதானம் சொன்னாள் சசி.

''சுகமோ, துக்கமோ, மானமோ அவமானமோ எதுவானாலும் உனக்கு வருவது எனக்கும் வரட்டும்'' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன் என்று முடித்தாள் தேவி.

இருவரும் சற்று நேரம் பேச்சின்றி இருந்தனர். திடீரென்று, ''ஏன் சசிக்கா, நான் வெளியே போகிறேன் வருகிறேன், என்னிடம் எவனும் வாலாட்டுவது இல்லையே. செல்வியிடம் மட்டும் ஏன் இப்படி? அத்தை வீட்டில் ஒரு குரங்கு இங்கே இந்த மனோகர்..''

சசி லேசாகப் புன்னகை செய்தாள். ''தேவி, நெருப்பை ஈ மொய்க்குமா? என்று சற்றுப் பெருமையோடு கேட்டாள்.

''என்னக்கா, நான் நெருப்பு என்றால் செல்வி மட்டும் என்ன வாம்?''

''செல்வி மலர், மென்மையான மலர் ரோஜா போல. உன் னைப் பார்க்கும்போதே மலருக்குக் காவலுக்கு உள்ள முள்ளாக உன் உறுதியும் வெளிப்படையாகத் தெரியும். அந்தத் தைரியமும் உறுதியும் அவளுக்கு ஏது?''

''என்னவோ போங்கள். இப்போது நன்றாக மாட்டிக் கொண்டு விழிக்கிறோம்'' என்று அலுப்புடன் கூறினாள், தேவி.

''செல்வி தைரியமாகவாவது இருக்கிறாளா?''

''எங்கே இருக்கிறாள்? தபால்காரர் வரும்போது அவள் கண்களைப் பார்க்க வேண்டும். ஆவலும் நம்பிக்கையும், பயமும், அவர் சென்ற பிறகு அந்தக் கண்களில் தோன்றும் நிராசையும் வேதனையும் சே சித்திரவதைதான் அக்கா.. அக்கா, அந்த ஆளுக்கு நான் இன்னொரு முறை டெலிபோன் செய்யப் போகிறேன்'' என்றாள், திடீரென்று.

''செய்யேன்'' என்று டெலிபோனிடம் அவளை அழைத்துச் சென்றாள், சசி.

தினகரின் வீட்டு எண்ணை டெலிபோன் புத்தகத்தில் கண்டுபி டித்தாள். அந்த எண்ணுக்கு போன் செய்தாள். இன்னமும் அலுவல கத்தில் இருந்து வரவில்லை என்று சொன்னார்கள்.

மீண்டும் அலுவலகத்துக்கு போன் செய்தாள். இம்முறை அவனே நேரடியாக டெலிபோனை எடுத்தான்.

தன்னையும் அறியாமல் குரல் கெஞ்சிக் குழைய யாசிப்பவள் போலவே, ''நான்தான் பேசுகிறேன்'' என்று தொடங்கினாள், தேவி.

மேலே தொடருமுன் அவன் குரல் இடைமறித்தது. ''தெரிகி றது, ஆனால் ஊரில் உள்ள கண்ட கண்ட பிச்சைக்காரிகளுக்கு எல்லாம் வாரி வழங்க நான் பாரி வள்ளல் இல்லை.''

கடுமையான குரலில் கூறிவிட்டு, அவள் முகத்தில் அறைவது போல டெலிபோனைப் பட்டென்று வைத்து விட்டான், தினகரன்.

# 9

நாளுக்கு நாள் செல்வியின் உடல் நலிந்தது.

என்னவென்று கேட்டுக் கொண்டு யாரும் வந்து விடக்கூடாதே என்று சத்தமின்றி வாந்தியெடுக்க அவள் படும்பாடு, தேவியின் நெஞ்சை பிளந்தது. எந்த நேரமும் அந்த அகன்ற விழிகளில் தென்பட்ட அச்சமும், கவலையும் தேவிக்குப் பெரும் வேதனையைத் தந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக இன்னமும் நம்பிக்கை இருப்பது போல் தேவியிடம் அவள் புன்னகை புரிய முயலும்போதுதான் தேவியால் சகிக்க முடியாது போயிற்று. இரவில் விளக்கணைத்த பிறகு வெகுநேரம் செல்வியின் உடல் அழுகையில் அதிர்வது தெரியும்.

ஒருநாள் செல்வி அழுது அழுது ஒய்ந்து தூங்கும்வரை தேவி காத்திருந்தாள். பிறகு மெல்ல எழுந்தாள். முருகன் படத்தருகே வந்து சின்ன அகல் விளக்கை ஏற்றினாள். அருள் நகை பொழியும் அந்தத் திருமுகத்தை உற்றுப் பார்த்தாள். உள்ளும் புறமும் ஒன்ற அவனை வேண்டினாள்.

''காலம் காலமாக எத்தனையோ பேர் உன்னை வணங்குகிறார்கள். அதனால் கடவுள் என்று நீ ஒருவன் இருந்துதான் ஆகவேண்டும். கடவுளே இந்த ஒரு தடவை ஒரே ஒரு தடவை எங்களைக் காப்பாற்று. வேறு எதையும் நான் உன்னிடம் யாசிக்கவில்லை. வேறு எதுவுமே வேண்டாம். இந்த ஒரு தரம், முருகா இப்போது மட்டும் எங்களை காப்பாற்றிவிடு'' என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

மறுநாள் காலை.

தபால்காரர் மாடியேறி அவர்களது வீட்டுக் கதவைத் தட்டிக் குரல் கொடுத்தார். கதவு இடுக்கின் வழியே ஓர் 'இன்லண்டு' உறையைத் தள்ளிவிட்டுப் போனார்.

செல்விக்கு ஒரே ஆனந்தம். ஓடோடிச் சென்று கடிதத்தை எடுத்தாள். கண்ணில் நீரும் உதட்டில் புன்னகையுமாக கடிதத்தை வேகமாகப் பிரித்தாள்.

பிரித்தாள்...

அது ஒரு புதிய கடைத் திறப்புக்கான அழைப்பு! அப்பகுதியில் புதிதாகக் கடை திறக்க அந்தக் கடைக்காரர் அங்குள்ளோர் அனைவரையும் கவர வீடு வீடாக அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் ஒரு கடிதத்துக்காக ஏங்கியிருந்த செல்விக்கோ அய்யோ, இதை எப்படித்தான் சொல்வது? முதலில் அந்த அழைப்பைப் பார்த்ததும் பேந்தப் பேந்த விழித்தாள். 'அழைப்பு.. அழைப்பு... அக்கா.... தோ ஓர் அழைப்பு...பு' என்று ஈனமாகக் கூறியவள், 'கடகட'வென்று பைத்தியம் போலச் சிரிக்கத் தொடங்கி விட்டாள்.

''செல்வி'' என்று பதட்டத்துடன் ஓடி வந்தாள், தேவி.

அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கதறத் தொடங்கி விட்டாள், செல்வி. 'அவர் வரமாட்டார் அக்கா. அவர் மனதை மாற்றி விட்டார்கள். மருந்து மாயம் என்பார்களே, ஏதோ செய்து விட்டார்கள், அக்கா. ஏழு பிறவியிலும் நீ தான் என் மனைவி என்றாரே, இந்தப் பிறவியிலேயே கைவிட்டு விட்டாரே அக்கா, பிடித்த கையை உதறிவிட்டாரே அக்கா...' என்று விக்கி விக்கி அழுதாள்.

''என் பிள்ளை தன் தகப்பன் யார் என்று கேட்டால் என்ன சொல்லுவேன் அக்கா?'' என்று மிரள மிரள விழித்தாள்.

''சும்மாயிரு... செல்வி... செல்வியம்மா... எல்லாம் சரியாகிவிடும்'' என்று அவளை அடக்க முயன்றாள், தேவி.

''அட, அக்கா, தீராத நோய் போல உனக்கு மாறாத பாரமாகி விட்டேனே'' என்று விசித்தாள் செல்வி.

''அசடு.. அசடு.. கொடிக்கு காய் பாரமாகுமா? எனக்கு நீ சுமையாவாயா? உளரக் கூடாது, தெரியுமா?'' என்று அணைத்தபடியே தங்கையை மெல்ல நடத்திச் சென்றாள். தானும் அமர்ந்து தங்கையைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள்.

தேவியின் இடுப்பைக் கட்டி பிடித்தபடி மெல்ல மெல்ல விசித்துக் கொண்டிருந்தாள் செல்வி. ஏனோ சிறு வயதில் படித்த ஆங்கிலக் கதை ஒன்று தேவிக்கு நினைவுக்கு வந்தது. ''பேபஸ் இன்தவுட்'' என்று பெயர். அதில் பட்டத்துக்கு உரிய இரு பிள்ளைகளைக் கொடியவனான சிற்றப்பன் நடுக்காட்டில் விட்டு விட்டு வந்து விடுகிறான். பஞ்சணையில் வளர்ந்த குழந்தைகள் குளிருக்கும் இருட்டுக்கும், விலங்குகளுக்கும் அஞ்சி ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு நிற்பதாக வரும்... அதுபோல நாங்களும் நிற்கிறோமா' என்று எண்ணிப் பார்த்தாள், தேவி. மனம் திக்கென்றது.

அந்தக் கதையின் இறுதியில் குழந்தைகள் இரண்டும் இறந்து விடுகின்றன. அதுபோல இவர்கள் கதையும் முடிந்து விடுமா? உடல் நடுங்கத் தங்கையை இன்னமும் இறுக அணைத்துக் கொண் டாள். ''ஊகூம் விடமாட்டேன். அப்படி நடக்க விடமாட்டேன். என் செல்வியை வாழ வைத்தே தீருவேன்'' என்று மனதில் உறுதி செய்து கொண்டாள்.

அன்று இரவில் சசி அவர்களைப் பார்க்க வந்தாள். செல்வியின் உடல் நலத்துக்காக ஏதோ மருந்து கொடுத்தாள். பொதுவாகக் கொஞ்ச நேரம் பேசிவிட்டுக் கிளம்பினாள், தேவி கார்வரை கூடவே சென்றாள்.

செல்வியின் காது கேளாத தூரம் சென்றதும் ''அக்கா செல்வி இந்த சோதனையைத் தாங்க மாட்டாள்'' என்றாள்.

''என்ன?''' என்று அவசரமாகக் கேட்டாள் சசி.

நடந்ததை விவரித்தாள் தேவி. ''கடிதம் மனோகருடையது இல்லை என்றதும் அப்படியே நிலைகுலைந்து போனாள். அவள் சிரித்ததும், புலம்பியதும் அப்பப்பா! பைத்தியம் பிடித்து விட் டதோ என்று பயந்து விட்டேன் அக்கா'' என்றாள் கவலையோடு.

.''சேச்சே அப்படியெல்லாம் நடக்காது. உடல் வெகு பலவீன மாக இருக்கிறாள் அல்லவா? எதிர்பார்த்து ஏமாந்ததும் கொஞ்சம் அதிர்ந்து விட்டாள். இரவில் நன்றாகத் தூங்கினாலே போதும்'' என்று கைப்பையைத் துழாவி ஒரு மாத்திரையை எடுத்துக் கொடுத் தாள்.

தேவி, ''இதை இரவில் படுக்குமுன் அவளுக்குக் கொடு, நல்ல தூக்கம் வரும். இந்த நிலையில் மன நிம்மதி வேண்டும். வேதனை கூடாது. ஆனால், அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?'' என்று பெருமூச்செறிந்தாள் டாக்டர் சசி.

தெரு விளக்கின் அரைகுறை ஒளியில் சசியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் தேவி. அவள் விழிகளில் நீர் பெருகுவது தெரிந்தது.

''சசி அக்கா'' என்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள் தேவி. ''எங்களை வரவழைத்த உங்களுக்கு மனதுக்கு நிரம்பவும் கஷ்டமாகி விட்டது அல்லவா'' என்று வருத்தத்துடன் கூறினாள்.

''பைத்தியம் அப்படி இல்லை. உங்களை வரவழைத்து இவ்வளவு வேதனைக்கு உள்ளாக்கி விட்டேனே என்று தான் வருத்தமாக இருக்கிறது'' என்று குரல் தழுதழுத்தாள் சசி.

''இங்கே வந்திராவிட்டால் இந்த ஓர் ஆண்டு மகிழ்ச்சி கூடக் கிட்டியிராது அக்கா. அதோடு ஏன் அடியோடு நம்பிக்கை இழக்க வேண்டும்? இன்னும் முயற்சி செய்து பார்க்கலாம். ஒருவேளை அந்த மனோகரே வந்து குதித்தாலும் குதிக்கலாம் யார் கண்டது'' என்று கசப்புடன் சிரித்தாள் தேவி.

நெஞ்சில் சுமையோடு விடைபெற்றுச் சென்றாள் சசி.

இரவெல்லாம் சிந்தித்து தேவி ஒரு முடிவுக்கு வந்தாள். அந்த அகம்பாவி அண்ணனை நேரிலேயே சென்று பார்ப்பது. டெலிபோன் செய்தால்தானே குரலைக் கேட்டதும் பட்டென்று கீழே வைக்க முடியும்; நேரிலேயே சென்று விட்டால்? சென்று அவனைச் சந்தித்து செல்வி படும் துயரை எடுத்துச் சொன்னால் இளக மாட்டானா? இந்த வேதனையைக் கேட்டால் கல்லும் கசிந்து விடுமே, இவன் ஒரு மனிதன் இரங்க மாட்டானா?

இந்த முடிவோடு மறுநாள் தேவி கிளம்பினாள். இரவு நன்றாகத் தூங்கியதோ என்னவோ செல்வியும் சற்று நன்றாக இருந்தாள். அவளுக்குப் பல கதைகள் சொல்லித் தைரியம் ஊட்டினாள். வலிய வரவழைத்த புன்னகையோடு தங்கையிடம் விடை பெற்றாள். தினகரின் கம்பெனி இருக்கும் இடத்தை விசாரித்துக் கொண்டு அங்கே சென்றாள்.

அங்கே அன்று ஏதோ பேட்டி போலும். பல பெண்கள் காத்திருந்தனர். தேவியும் அவர்களில் ஒருத்தியாகச் சேர்ந்து கொண் டாள். எல்லோரும் சென்று முடித்த பின் கடைசியாக எழுந்தாள். ஒரு பையன் வந்து அழைத்ததும் உள்ளே சென்றாள்.

குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருந்த அறை அது. தள்ளு கதவைத் தள்ளி உள்ளே சென்றதும் கதவு அவள் பின்னோடு சாத்திக் கொண்டது. பணிவுடன் வணக்கம் தெரிவித்தபடி நிமிர்ந்தாள். அவ்வளவுதான், ஆயிரம் மின்னல்கள் ஒருங்கே அவளைத் தாக்கி னவோ! அதிர்ச்சியுடன் செயல் இழந்து நின்றாள் தேவி.

அங்கே உரிமையாளரின் இருக்கையில் வெகு கம்பீரமாக அமர்ந்திருந்தவன், அவளுக்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவன்தான்.

நூறு ரூபாய் நோட்டை தானம் செய்தானே, அதே கர்வம் பிடித்தவன் தான்!

## 10

அதிர்ச்சியுற்ற தேவி சிலைபோல நின்றாள்.

அவனும் அவளை எதிர்பார்க்கவில்லை போலும். வியப்பின் அறிகுறியாக ஒற்றைப் புருவம் உயர்ந்தது. அழுத்தமான உதடுகள் லேசாக விரிய ''ஓ! நீயா!'' என்றான் ஆச்சரியத்துடன்.

இன்னமும் பதில் பேச வாயெழவில்லை தேவிக்கு. மனம் சுற்றிச் சுற்றிச் சுழன்றது. இவன் எங்கே இங்கே வந்தான்? அமர்த்த லாக இருப்பதைப் பார்த்தால் இவன்தான், அந்த தினகர் போல் இருக்கிறதே. ஓ! இவனே தான், அவன், அந்தப் பெண் அவனோடு வந்தவள் கூட தினு என்று அழைத்தாளே. தினகரின் செல்லச் சுருக்கம் போலும். அதே திமிர் பிடித்த பேச்சு, அதிலிருந்தே தேவி ஏன் அறியவில்லை?

அவன் தனது வியப்பை வெகு சீக்கிரம் சமாளித்து விட்டான். லேசான சிரிப்புடன் அவளை மேலும் கீழும் பார்த்தான்.

''ம்...ம்... பரவாயில்லை. நான் சொன்னது போலவே செய்திருக்கிறாய். நல்ல சேலையாகத்தான் வாங்கியிருக்கிறாய். இப்போது உன்னைப் பார்ப்பவர்கள் அந்தப் பிச்சைக்காரப் பெண்ணின் சகோதரி என்று எண்ண மாட்டார்கள்'' என்றான் புன்னகையுடன்.

தேவியின் குழப்பம் சட்டென மறைந்தது. பழைய ஆத்திரம் தலை தூக்கியது. ''உங்கள் பணம் பத்திரமாக இருக்கிறது. நாளையே கொண்டு வந்து தருகிறேன், பெற்றுக் கொள்ளுங்கள்'' என்றாள் வெடுக்கென்று.

அவனது புருவம் மீண்டும் மேலெழும்பியது. ''அந்தத் துடுக்கு அப்படியே இருக்கிறதே'' என்று வியந்தான். ''பரவாயில்லை, அந்தப் பணத்தை நீயே வைத்துக் கொள். பரிசு கொடுத்ததைத் திருப்பி வாங்கும் பழக்கம் எங்கள் பரம்பரைக்கே கிடையாது'' என்று கர்வத்துடன் கூறினான், அவன்.

''அப்படித்தான் தெரிகிறது'' என்று நினைத்தாள் தேவி. ,அவனுடைய தம்பிதான் நிரூபித்து விட்டானே. காதலைக் கொடுத்தவன் திருப்பிப் பெற மறுத்து ஓடிவிட்டானே!

''எதையும் இனாமாகப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் எங்களுக்கு இல்லை'' என்று அவன் குரலிலேயே சொல்லிக் காட்டினாள், தேவி.

''ஓ'' என்று அவன் கடகடவென்று நகைத்து விட்டான். ''மிக நன்றாகப் பேசுகிறாயே, நீ உன் பெயர் தேவிதானே? தேவிக்கா என்று அந்தப் பெண் அழைத்த நினைவு இருக்கிறது. வெறும் தேவியா அல்லது...?'' என்று வினவினான் அவன்.

''செந்தாமரை தேவி'' என்று தன்னையும் அறியாமல் பதில் கூறிவிட்டாள் தேவி. உடனே நாக்கைக் கடித்துக் கொண்டாள். அவனது கேள்வியை மதித்து பதில் சொல்லி விட்டாளே.

''அழகான பெயர்'' என்று மெச்சினான் அவன். ''ஆமாம் நீ இப்போது மதுரை வாசி இல்லை போல் இருக்கிறதே. போன தடவை மதுரைக்குச் சென்றபோது அந்தப் பூக்காரப் பெண்ணைப் பார்த்தேன். நீ சென்னைக்குச் சென்று விட்டதாக அவள் சொன்

ளாள், என்றாவது எங்காவது பார்க்க நேரலாம் என்று நினைத்தேன். ஆனால் நீயாக வருவாய் என்று நான் எண்ணவே இல்லை. என்ன விஷயமாக வந்தாய்? என்னைப் பார்க்கத்தானா? ஊகூம். இல்லை என்னை இங்கு எதிர்பார்த்து வரவில்லை என்பது உன் முகத்திலேயே தெரிந்ததே. பின்னே இந்த வேலைக்காகவா? ஆனால் நீ விண்ணப்பம் கூட அனுப்பவில்லை போலிருக்கிறதே'' என்று வெகு சரளமாகப் பேசிக் கொண்டே போனான்'' அவன்.

அவன் பேசுவதைப் பார்த்தால் தேவிக்கு பிரமிப்பாக இருந்தது. மதுரையில் அவ்வளவு அகந்தையோடு பேசியவனும், இவனும் ஒருவனா! இங்கே டெலிபோனில் கூட... டெலிபோன் என்றதும் கூடவே வந்த காரியமும் நினைவு வந்தது.

''நான்... நான்...'' என்று தயங்கினாள்.

''ம்... நீ..?'' என்று புன்சிரிப்போடு ஊக்கினான் அவன்.

''நான் செல்வியின் சகோதரி'' பட்டென்று உடைத்து விட்டாள் தேவி.

மறுவினாடி தினகரின் முகம் மாறியது. துணி கொண்டு துடைத்தாற்போல் சிரிப்பு அடியோடு மறைந்தது. புருவங்கள் நெரிந்தன.

''ஓகோ!'' என்றான் கூர்மை பெற.

''ஆ...மாம்... நான் செல்வியின் சகோதரிதான். இரண்டு நாட்களுக்கு முன் இரண்டு தடவை டெலிபோன் கூட செய்தேனே...''

''நினைவு இருக்கிறது'' என்றான் அவன் சுருக்கமாக. கூடவே ''உனக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றான். ''அந்த வார்த்தை கேட்டும் வெட்கமின்றி வந்தாயா?'' என்ற இகழ்ச்சி குரலிலேயே வெளிப்பட்டது.

''மறக்கும்படியான வார்த்தைகளை நீங்கள் பேசவில்லையே'' என்ற சினத்துடன் திரும்பினாள் தேவி. உடனே மீண்டும் நாக்கைக் கடித்துக் கொண்டாள். ''நாக்கே பொறுமையாக இரு. முந்திரிக்

கொட்டைத் தனமாகப் பேசிக் காரியத்தைக் கெடுத்து விடாதே. இது முள்ளில் விழுந்த துணி. பொறுமையாக எடுக்க வேண்டும்'' என்று மனதுள் அறிவுரை கூறிக் கொண்டாள்.

''மறக்காதவள் ஏன் வந்தாய்? பணம் வாங்கிப் போகவா? எவ்வளவு?'' என்று அலட்சியமாக மேசையின் இழுப்பறையைத் திறந்தான் அவன்.

தேவியின் நாவடக்கம் காற்றில் பறந்தது. ''உங்கள் பணத்தைக் குப்பையில் போடுங்கள்'' என்றாள் கொதிப்புடன்.

''ஓகோ பிகுவா? மிகவும் அதிகப் பணத்துக்கு அடிபோடுகிறா யாக்கும். பேராசைப் படாமல் கேள். கிடைக்கும். எவ்வளவு வேண்டும்?'' என்றான் அவன் பழைய மாதிரியே.

''உங்கள் பணத்தை குப்பையில் போடுங்கள் என்றேன்'' என்று பல்லைக் கடித்தாள் தேவி.

''மெய்யாகவா?'' என்று நம்பாமல் சிரித்தான். ''மிகவும் பிகு பண்ணாதே. நான் உண்மை என்று நினைத்து விட்டால் உனக்குச் சங்கடம்.''

''சீ'' என்றாள் தேவி. ''உங்கள் பணத்தில் ஒரு பைசா கூட எங்களுக்கு வேண்டாம். என் தங்கையின் மானத்தைக் காப்பாற்ற ஊரறிய ஒரு மஞ்சள் கயிறு மட்டும் உங்கள் தம்பியைத் தரச் சொல்லுங்கள், போதும்.''

அவன் இகழ்ச்சியாகச் சிரித்தான். ''பரவாயில்லை. பெரிய திட்டத்துடன்தான் வந்துவிட்டாய். ஊரறிய மஞ்சள் கயிறு என்றால் சொத்தில் பாதியல்லவா? அரைவிலை கால்விலை என்று விற்றா லும் பத்து லட்சம் தேறுமே. கெட்டிக்காரிதான்.''

தேவியால் அந்தப் பேச்சை சகிக்க முடியவில்லை. ''காது கேட்கவில்லையா? திரும்ப திரும்ப உங்கள் சொத்து எங்களுக்கு வேண்டாம், வேண்டாம் என்கிறேனே புரியவில்லையா? என் தங்கையின் வயிற்றைக் காப்பாற்றும் அளவுக்கு என்னால் சம்பா திக்க முடியும். அதற்கு மேல் பட்டிலும் பொன்னிலும் எங்களுக்கு

ஆசையில்லை. ஆனால், நான் கேட்பதெல்லாம் என் தங்கையின் மானத்தைக் காப்பாற்றுங்கள் என்பதுதான் என்று கோபத்தில் தொடங்கி கெஞ்சலில் முடித்தாள் தேவி.

''ம்...?'' நன்றாக வாதாடுகிறாள். வக்கீலுக்குப் படித்திருக்க லாம்'' என்று கிண்டல் செய்தான் அவன்.

என்ன செய்வது என்றே தேவிக்குப் புரியவில்லை. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். இவன் கல்லாய் இருக்கி றானே. ''நான் மெய்யாகவேதான் சொல்லுகிறேன். இன்னமும் தாமதித்தால் விஷயம் வெளியாகும் நிலை வந்துவிடும். அவமா னம் ஏற்படும்... செல்வியால் அதைத் தாங்க முடியாமல், உயி ரையே விட்டு விடுவாள். அய்யோ தயவு செய்து எங்கள் மானத் தைக் காப்பாற்றுங்கள்'' அவனிடம் கெஞ்சுவதற்குள் தேவிக்கு அவமானத்தால் உயிர் போய்வந்தது.

இன்னமும் அவன் பதில் பேசவில்லை.

உங்கள் பணம் எங்களுக்கு வேண்டாம் என்று சத்தியம் செய்கிறேன், அல்லது உங்கள் சொத்தில் ஓர் அணுவும் வேண்டாம் என்று எழுதித் தந்து விடுகிறோம். அந்தப் பொருள்பட நீங்கள் எப்படி எழுதச் சொன்னாலும் எழுதிக் கையெழுத்திட்டுத் தந்து விடுகிறோம். ஆனால் இப்போது தயவு பண்ணுங்கள், வயிற்றுக் குழந்தையோடு ஏங்கி நிற்கும் என் தங்கையின் மானத்தைக் காப்பாற்றுங்கள்.'' வார்த்தைகள் முடிவுறு முன் தேவியின் உதடுகள் நடுங்கலாயின. 'கடவுளே இந்தத் திமிர் பிடித்தவன் முன்னே அழுகை வேறு வந்து அவமானப்படுத்துமா?' என்று ஆத்திரத்து டன் நினைத்தாள்.

''எதை வேண்டுமானாலும் துணிந்து செய்யலாம். பெரிய இடத்துப் பையனை வலை போட்டுப் பிடித்தால் போதும் என்று மானம் கெட்டு செயல்படுகிறவர்கள் எல்லாம் மானம் - அவமா னம் என்று பேசினால் கேட்பதற்கு நன்றாக இல்லை'' என்றான் தினகர்.

தேவி சட்டென்று எழுந்து நின்றாள். ஆத்திரத்தில் அவள் உடல் நடுங்கியது. அவமானத்தில் முகம் ரத்த நிறம் கொண்டது. வரிசையான வெண் பற்கள் கீழுதட்டின் மீது அழுத்திப் பதிந்தன. நெஞ்சம் விம்மி விம்மித் தணிந்தது. இறுக மூடிய கைவிரல்களின் நகங்கள் மிருதுவான உள்ளங்கையைக் குத்திப் புண்ணாக்கின. கண்களை மூடிக் கொண்டு ஒரு முழு நிமிடம் அப்படியே நின்றாள். மானங்கெட்ட செயலாமே... 'செல்வி, செல்வீ, செல்வீ...' பல்லில் இருந்து விடுபட்ட இதழ்கள் முணுமுணுத்தன. மெல்ல மெல்ல உணர்ச்சிகள் ஒரு கட்டுக்குள் அடங்கி வரவும் கண்களைத் திறந்தாள்.

தன் முகத்தில் கூர்மையுடன் பதிந்திருந்த தினகரின் பார்வையை சந்தித்தாள்.

அவனிடம் ஏதேதோ சொல்ல வேண்டும் என்று வாயைத் திறந்தாள். ஆனால், என்ன சொல்லுவது என்று தான் புரியவில்லை. எதைச் சொல்லித்தான் என்ன பயன் விளையப் போகிறது? எதற்கும் - எதற்குமே இந்த் கல் நெஞ்சன் இளகப் போவதும் இல்லை. செல்வியின் கண்ணீர் வற்றப் போவதும் இல்லை. செல்வி, செல்வி என் தங்கமே, இருந்திருந்து இவன் தம்பியையா நீ காதலிக்க வேண்டும். அசட்டுப் பெண்ணே, இனி உன் கதி என்னடி? நேற்றைப் போல இன்னமும் எத்தனை நாள் வரும்! நீ தாங்குவாயா? அந்தத் திடம் உனக்கு ஏது? இனி நீ...

செல்வியைப் பற்றிய நினைவு வந்ததும் தேவியின் இதழ்கள் மீண்டும் நடுங்கலாயின. கண்களில் நீர் பெருகத் தொடங்கியது. இந்தத் தோல்வியுடன் அவள் முகத்தில் எப்படி விழிப்பது?

''கண்ணீரா? பெண்களின் கடைசி ஆயுதம் என்பார்கள். இது கடைசி கட்டப் போரா?'' தினகரின் குரலில் புன்னகையோடு அவளது சிந்தனையை இடைவெட்டியது.

நிமிர்ந்து அவனை வெறித்துப் பார்த்தாள் தேவி. எள்ளி நகையாடுகிறானா? இந்த வேதனையும் தவிப்பும் அவனுக்கு சிரிப்பாக இருக்கிறதா? இரக்கமற்ற பாவி வெறுப்புடன் பார்வையை அகற்றினாள். மேலே எதுவும் பேசாமல் கதவின் பக்கமாகத் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

''நீ வந்த பிரச்சினையை மறந்து விட்டுப் போகிறாய் போல் இருக்கிறதே'' என்று மீண்டும் குறுக்கே புகுந்தது தினகரின் குரல். ''அதில் என் கடைசி முடிவு என்னவென்று கேட்கவே இல்லை யே?''

ஆசையும் நிராசையும், நம்பிக்கையும், அவநம்பிக்கையும் ஒன்றை ஒன்று துரத்தி வர தேவி தினகரனைத் திரும்பிப் பார்த்தாள்.

## 11

இந்த அபலைப் பெண்ணின் துன்பத்தைக் கண்டு மனம் இறங்கி விட்டானோ என்ற நம்பிக்கை ஒருபுறம், இந்தக் கல் நெஞ்சனா இளகுகிறவன்? எவ்வளவு ஏளனம்! உதாசீனம்! இன் னும் அவமதிப்பாக ஏதேனும் கூற நினைத்திருப்பான் என்ற எண்ணம் ஒருபுறமாக தேவி தினகரனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் நிதானமாகத் தன் சுழல் நாற்காலியை விட்டு எழுந் தான். அவள் அருகே வந்தான். 'பாண்ட்' பையில் கையை விட்டுக் கொண்டு தேவியை ஏற இறங்கப் பார்த்தான்.

நண்டுக்குத் திண்டாட்டம், நரிக்குக் கொண்டாட்டமாம். தேவி யின் தவிப்பு தினகருக்கு ரசிப்பதாக இருக்கிறதாக்கும்!

கண்ணை மறைத்து விழுந்த கூந்தல் சுருளை ஆத்திரத்துடன் விலக்கினாள் தேவி. ''சொல்லித்தான் முடியுங்களேன் உங்கள் கடைசி முடிவை. நானும் கேட்டு விட்டே போகிறேன். ஒரு வேளை அதைச் சொல்ல உங்களுக்குக் கூடக் கூசுகிறதோ?' என்று பொறுமையிழந்து கேட்டாள் தேவி.

''பொறுமைக்கும் உனக்கும் இடைவெளி மிக அதிகம் இல் லையா தேவி?'' என்று பெற்றுப் பெயர் வைத்தவன் போல அவன் உரிமையுடன் அழைத்துப் பேசினான்.

அவளைக் கண்ணால் வெட்டினாள் தேவி. ''என் நிலையில் உங்களை வைத்துச் சிந்தித்துப் பாருங்கள். இந்த அளவு பொறுமை

யைக் கடைப்பிடிப்பது கூட எவ்வளவு கடினம் என்று பிறகு நீங்களே சொல்லுவீர்கள். அதுபோகட்டும், உங்கள் முடிவு என்ன?''

''உம்...'' என்று முகவாய்க் கட்டையைத் தடவினான், தினகர். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவனாகப் பேசத் தொடங்கினான். ''இதோ பார் தேவி, நீ கோரி வந்திருப்பது மிகவும் பெரிய விஷயம். இதில் எல்லாம் விநாடிக்குள் முடிவு சொல்ல இயலாது. நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும்'' என்று மணிக்கட்டைத் திருப்பிக் கையில் பளபளத்த கனமான சதுரக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். பிறகு தொடர்ந்தான். ''இப்போது அதைப்பற்றிச் சிந்திக்க எனக்கு நேரம் இல்லை. நீ ஒன்று செய்கிறாயா? இன்று மாலை... ஊகூம். இன்று வேறு வேலை இருக்கிறது. அதனால் நாளை வருகிறாயா? நான் என் முடிவைச் சொல்லுகிறேன்.''

''காலையிலேயே வரட்டுமா?'' என்று ஆவலுடன் கேட்டாள் தேவி.

''காலையிலா? வேண்டாம் வேண்டாம். நல்ல வேலை நேரம் ஆயிற்றே. அப்போது முடியாது. மாலை ஐந்து மணிக்கு மேல் வா. அல்லது நானே உன்னை வந்து அழைத்துச் செல்லட்டுமா? உன்...''

''எங்கே அழைத்துப் போகப் போகிறீர்கள்?'' என்று எச்சரிக்கையுடன் கேட்டாள் தேவி.

''எங்கேயாவது, எங்கேனும் மனம் விட்டுப் பேசக் கூடிய இடத்திற்கு போகலாம் என்று நினைத்தேன். ஏன் என்னுடன் வருவதற்குப் பயமாக இருக்கிறதா?'' என்று கேலியாகச் சிரித்தான் அவன்.

''எனக்கென்ன பயம்? நீங்கள் என்ன புலியா, கரடியா?'' என்று அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள் தேவி.

''அந்த இரண்டுக்கும்தான் பயப்பட வேண்டுமா? நான் வேறு நினைத்தேன்?''

''என்ன?''

''என் தம்பி மனோகரன் மாதிரி எண்ணி பயந்து விட்டாயோ என்று நினைத்தேன்'' என்று ஒருவிதமாகப் புன்னகை செய்தான் அவன்.

தேவியின் முகம் சிவந்தது. ''சீ'' என்று முகத்தை வேறுபுறம் திரும்பினாள்.

அவனது புன்சிரிப்பு நல்ல சிரிப்பாக மலர்ந்தது. சிரித்து முடித்து விட்டு, ''அப்படியானால் வருவதற்குப் பயம் இல்லை சரிதானே? நீ வீணாக இங்கும் அங்கும் அலைய வேண்டாம். உன் வீடு எங்கே என்று சொல். நானே வருகிறேன்'' என்றான்.

அவனது சிரிப்பில் ஏற்பட்ட அதிர்ச்சியை அடக்கிக் கொண்டு யோசித்தாள் தேவி. தவறே நடந்து விட்ட போதும் செல்வி வதந்திக்கு ஆளாகிவிடவில்லை. இப்போது இவன் அங்கே வருவதும், தான் அவனுடன் காரில் செல்வதும் அது எல்லோருக்கும் தெரிவதும் என்றால் தேவிக்குப் பிடிக்கவில்லை. 'தப்பா செய்கிறேன், மறைத்துச் செய்வதற்கு' என்று அடித்துப் பேசுகிறவள்தான். ஆனாலும்...

''என் வீட்டிற்கு நீங்கள் வரவேண்டாம், சுதந்திர நாள் பூங்கா அருகில் நில்லுங்கள். நான் வந்து விடுகிறேன்'' என்றாள் அவனிடம்.

உடனே அவன் தவறாக எடுத்துக் கொண்டானோ என்ற அச்சம் பிறந்தது. அண்ணாந்து அவன் முகத்தைப் பார்த்தாள். ஒரு குறுஞ்சிரிப்பு அவன் முகத்தில் வேறு மாறுதல் இல்லை. இந்த முகத்தைப் பார்த்தவர்கள் இந்த மனிதன் பொல்லாதவன் என்று எப்படிச் சொல்ல முடியும்? தம்பி ருத்திராட்சப் பூனை என்றால், அண்ணன் பசுத்தோல் போர்த்திய புலி போலும்.

மனோகரை நினைத்ததும் தேவியின் முகம் கருத்தது.

''என்ன அவ்வளவு கோபம்?'' என்று வினவினான் தினகர்.

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு அவனைப் பார்த்தாள் தேவி. அவளையா கவனித்துக் கொண்டிருக்கிறான்!

''கோபம் வேண்டாம் தேவி. நீ சொல்கிற இடத்துக்கே அடியேன் வந்து சேருகிறேன்'' என்று பொய்யான பணிவுடன் கூறினான், தினகர்.

அவனது வேடிக்கை தேவிக்கு ரசிக்கவில்லை. ''சரி நான் வருகிறேன்'' என்று கிளம்பி விட்டாள்.

வீட்டை அடைந்தாள்.

''என்னக்கா?'' என்று ஆவலே வடிவாக வந்தாள், செல்வி.

நடந்ததைச் சொல்லிவிட்டு ''யோசித்துக் கூறுகிறாராம்'' என்று முடித்தாள் தேவி.

முருகன் படத்தருகே ஓடினாள் செல்வி, பயபக்தியோடு கன்னத்தில் பட்பட்டென்று போட்டுக் கொண்டாள். ''சாமி, ஆண்டவனே, அவரை நல்ல பதில் சொல்லச் செய்ய வேண்டும்'' என்று கைகுவித்து வேண்டிக் கொண்டாள்.

பார்த்துக் கொண்டே இருந்த தேவிக்கு எரிச்சல் வந்தது.

''ஏண்டி, அந்த தினகர் நல்ல பதில் சொல்ல வேண்டும் என்று கேட்கிறாயே, உன் மனோகருக்கு நல்ல புத்தி வந்து கடமை உணர்வோடு உன்னிடம் திரும்பி வரட்டும் என்று கடவுளிடம் கேளேன்,'' என்றாள்.

''அதெப்படி அக்கா அவர் சும்மாவே கொஞ்சம் பயந்த சுபாவம் அண்ணனை மீறிப் போக அவரால் முடியுமா'' என்று மனோகருக்காக வக்காலத்து வாங்கினாள், செல்வி.

''ஆமாடி! கொஞ்ச நாள் பொறுத்துப் பார், அந்த தினகர் உன் மனோகரின் கழுத்தில் சங்கிலி மாட்டி தோதோ என்பார். உன் மனோகர் வாலைக் குழைத்துக் கொண்டு ஓடுவார், பார்த்து பார்த்து ரசி'' என்று வெறுப்புடன் கூறினாள் தேவி.

''என்னக்கா இப்படிச் சொல்லுகிறாய்'' என்று முகம் வாடினாள் செல்வி.

''இல்லைடி அம்மா, இனி இல்லை. உன் மனோகரை இனி ஒரு வார்த்தை சொல்லுவதில்லை, சரிதானே'' என்று எழுந்து

உள்ளே சென்றாள் தேவி. ''என் தங்கையை நல்லது கெட்டது அறியாத பித்தாக மாற்றி விட்டானே பாவி'' என்று உள்ளூரப் பொருமினாள்.

அடுத்த நாள் காலை கரைந்து மதியம் மறைந்து மாலையும் வந்து சேர்ந்தது. மணி ஐந்தை நெருங்குமுன் செல்வி தேவியை விரட்டத் தொடங்கி விட்டாள். ''கிளம்புக்கா கிளம்பு'' என்று ஒரே நச்சரிப்பு.

தங்கையிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பும்போது தேவியின் இதயம் கொஞ்சம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

பூங்காவை அடையும்போது தன் நெஞ்சு தடதட வென்று அடிப்பது நன்றாகவே கேட்டது.

மணி ஐந்தரையை நெருங்கிக் கொண்டு இருந்தது. தினகரை அதுவரையில் காணவில்லை. தேவிக்கு மெல்ல மெல்ல அச்சம் பிடிக்கலாயிற்று ஒருவேளை அவன் வராமல் ஏமாற்றி விட்டானோ? வராவிட்டால்...

தேவி குழம்பிக் கொண்டு நிற்கும் போதே ஒரு நீண்ட கறுப்புக் கார் சாலையில் வழுக்கிக் கொண்டு விரைந்தோடி வந்து அவள் அருகே நின்றது.

காரை ஓட்டி வந்தவன் தினகர்தான்.

அவன் முகத்தில் ஏதேனும் குறிப்பு காண முடிகிறதா என்று உற்றுப் பார்த்தாள், தேவி.

கற்சிலை போல உணர்ச்சியற்று இருந்தது, அவன் முகம்.

அதற்குள் இடப்புறமாக சாய்ந்து காரின் முன் கதவை திறந்து விட்டான் தினகர். ''ஏறிக் கொள்... பேசிக் கொண்டே போகலாம்'' என்றான்.

ஒரு வினாடி தயங்கி விட்டு முன்னே ஏறி அமர்ந்தாள் தேவி. ''எங்கே போகிறோம்?'' என்று வினவியபடி கதவைச் சாத்தினாள்.

''மனம் விட்டுப் பேசக் கூடிய இடத்துக்கு'' என்று சுருக்கமாகப் பதில் வந்தது. தேவி வாயை மூடிக் கொண்டாள். கார் பறந்தது.

## 12

கடற்கரையில் காரை நிறுத்தினான், தினகர். இறங்கினான். அவளையும் இறங்கச் சொல்லிவிட்டுக் காரைப் பூட்டினான்.

பிறகு மணலில் கூட்டம் அதிகம் இல்லாத ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தான். கூடவே வந்த தேவியிடம் ''நீயும் உட்கார்'' என்றான்.

சற்று தள்ளி அமர்ந்தாள். அதற்குமேல் அவளது பொறுமை பறந்தது. ''என்ன முடிவு செய்தீர்கள்?''

அவன் முதலில் ஒன்றும் சொல்லவில்லை.

தேவி பயந்து போனாள். இல்லையென்று சொல்லத்தானா இவ்வளவு முன்னேற்றபாடு? தன் பயத்தை மறைக்க முயன்றவாறு, ''என்ன?'' என்றாள்.

தினகர் மெல்ல ஒரு சிகரெட்டை எடுத்தான். அதைப் பற்ற வைத்தான். உதடுகளில் பொருத்தி ஒரு முறை புகையை இழுத் தான், பிறகு நிதானமாக தேவியைப் பார்த்தான். ''தேவி, நேற்று நீ பேசியது பெரிய விஷயம்?''

''அதைத்தானே நேற்றே சொன்னீர்களே..''

அவளது பேச்சை கவனியாதவன் போல அவன் தொடர்ந்து பேசினான்! ''அதைப்பற்றி உன் நிலையை எடுத்துச் சொன்னாய், மானம் என்றாய்; வலை என்றாய்; என் தம்பி ஏமாற்றினான் என்றாய். கண்ணகியின் மறுபிறவி போல வாதாடினாய். பொறு பொறு குறுக்கே பேசாதே. இன்று அதே விஷயத்தை என் நிலை யில் இருந்து சொல்லுகிறேன், நீ கேள். என் தம்பி பணக்கார வீட்டுப் பையன். அவனை வலை போட்டுப் பிடிக்க எத்தனையோ பெண்கள் முயன்றிருக்கிறார்கள். எத்தனை ரகங்கள் தெரியுமா? அவர்களைப் பற்றி நான் ஒரு பட்டியலே தர முடியும்.''

''எனக்கு ஒரு சந்தேகம்..'' என்று கண்களை அகல விரித்தாள், தேவி. ''மனோகர் பணக்காரன் என்றால் நீங்களும் பணக்காரர் தானே? உங்களை வலைபோட்டு பிடிக்க ஒருத்தி கூடவா முயற்சி செய்யவில்லை? ஒருவேளை அவரைப் போலவே நீங்களும் ஒவ் வொருவளாக சுவை பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களோ அல்லது இவ்வளவு பணம் இருந்தும் உங்களை மணக்கும் துணிவு எவளுக் கும் உண்டாகவில்லையா?'' என்றாள் கிண்டலாக.

தேவியின் முகத்தைப் பார்த்தான் தினகர். உடனே சிரித்து விட்டான். பிறகு சிரிப்பை நிறுத்திக் கொண்டு முகம் கறுக்கச் சொன்னான், ''என்னிடமும் அந்த முயற்சிகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் நான் வேறுவிதம் என்னிடம் இந்த மாயங்கள் ஒன்றும் நடக்காது. தம்பிக்கு மிகவும் இளகிய மனம். அதனால் சீக்கிரம் ஏமாந்து விடுகிறான். சிறுவயதிலேயே தந் தையை இழந்தவன், அவன் ஆகவே தந்தையின் பொறுப்புடன் கண்டிப்புடன் அவனைக் கண்டிக்க வேண்டிய கடமை மூத்த சகோதரனான எனக்கு இருக்கிறது. வெறும் பணத்தாசை கொண்டு அவனை வளைக்க முயல்கிறவர்களிடம் அவன் சிக்கிக் கொள்ளா மல் தடுக்க வேண்டி இருக்கிறது'' என்றான் தினகரன்.

''எங்கள் செல்வி அந்த மாதிரிப் பட்டவள் அல்லவே, அவளை ஒருமுறை பார்த்தால் கூடப் போதும். பிறகு இப்படிப் பேசமாட்டீர்கள்,'' என்றாள் தேவி பெருமையாக.

''பார்த்தேனே'' என்றான் அவன், வெகு சாதாரணமாக.

தேவி திகைத்தாள். ''எப்போது? எப்போது பார்த்தீர்கள்? எங்கே பார்த்தீர்கள்? ஊகூம். பொய், பொய்தானே சொல்லுகிறீர் கள்?'' என்று அடுக்கினாள் தேவி.

''சற்றுமுன் நீ பூங்காவுக்கு வரும்போது அவளிடம் விடை பெற்றாயே, அப்போது பார்த்தேன். நீல நிறத்தில் சேலை கட்டியி ருந்தாள். சிவப்புச் சாந்து கோபி மாதிரி நெற்றியில் இட்டிருந்தாள். ஒல்லியானவள், நிரம்பவும் சின்ன பெண் சரிதானே?''

''ஆமாம், அவளேதான். ஆனால், எப்படிப் பார்த்தீர்கள், எங்கள் வீடு எப்படித் தெரியும்? நேற்று கூட முகவரி கேட்டீர்க ளே?'' என்று வியப்புடன் மீண்டும் கேள்விகளை அடுக்கினாள், தேவி.

தினகரன் லேசாகச் சிரித்தான். ''அது அவ்வளவு பிரமாதம் இல்லை தேவி. நேற்று உன் பின்னே ஆள் அனுப்பி உன் வீட்டைக் கண்டுபிடித்தேன். இன்று சற்று முன்னதாக உன் வீட்டைக் கண்கா ணிப்பது அவ்வளவு கடினமான காரியமா?''

தேவி இரண்டாவது தடவையாகத் திகைப்புடன் ''ஓ... '' என்றாள்.

''உன் செல்வி மிக மிக நல்ல பெண்ணாகவே இருக்கட்டும். இதில் இன்னொரு முக்கியமான விஷயம் பற்றியும் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.''

''என்ன அது?''

''மனோகரன் பணக்காரன்...''

''இதை காது புளிக்கும் அளவுக்குப் பல தடவைகள் சொல்லி விட்டீர்கள்.''

அவளது பேச்சு காதில் விழாதது போல அவன் தொடர்ந்தான். ''அவனுக்குப் பணக்காரச் சம்பந்தங்கள் வருகின்றன. நேற்று கூட ஐந்து லட்சம் சொத்தோடு ஒரு பெண் வீட்டார் பேச வந்தார்கள்.''

''ஓ....!'' என்றாள், தேவி மூன்றாம் முறையாக. இந்த 'ஓ' வோடு தினகரைப் பற்றி கொஞ்சம் கொஞ்சம் தோன்றியிருந்த நல்ல எண்ணங்களும் அவளிடம் அடியோடு மறைந்தன. பழைய வெறுப்பு முழு அளவில் கிளர்ந்தது. ''பணமா பெரிது'' என்று ஆத்திரத்துடன் வினவினாள்.

''சந்தேகம் இல்லாமல் பணமும் பெரிதுதான்.''

''உங்கள் பணம் நாளைக்கே போய்விடலாம். அது போய்விட வேண்டும்'' என்று விரும்புகிறவளைப் போலச் சொன்னாள் தேவி.

''அவ்வளவு லேசில் போக விட்டுவிட மாட்டேன்...'' என்று அவன் அழுத்தமாகச் சொன்னான். ''அந்த ஐந்து லட்சத்தைப் புறக்கணித்து உன் சகோதரியை என் தம்பி மணக்க வேண்டும் என்றால், அதற்கு நிரம்பவும் முக்கியமான - வலுவான காரணங்கள் வேண்டும்.''

காரணம் வேண்டுமாமே! தேவி பல்லைக் கடித்தாள். ''உங்கள் தம்பியால் என் தங்கை கருவுற்று இருக்கிறாள். உங்கள் தம்பியின் குழந்தை என் செல்வியின் வயிற்றில் வளர்கிறது. உங்களுக்கு இதைவிடப் பெரிய காரணம் என்ன வேண்டும்?''

பதில் பேச முடியாதபடி மடக்கி விட்டோம் என்ற கர்வத்துடன் அவனை உறுத்து விழித்தாள் தேவி.

''என் தம்பி ஒருவிலைமாதிடம் கூடப் போகலாம். அந்த விலைமாதின் வயிற்றில் ஒரு குழந்தை வளர்கிறது. அவளை அவனுக்குத் திருமுணம் செய்து வைப்பது முறையாகுமா?''

அவன் வெகு அழுத்தம் திருத்தமாகக் கேட்டான்.

''என்ன? என்ன கேட்டீர்கள்? ஒரு விலைமாதும் என் செல்வியும் ஒன்றா? சே..'' என்று அடக்கமாட்டாத சினத்துடன் எழுந்து விட்டாள் தேவி.

''தேவி நெருப்பு என்றால் சுட்டு விடாது. உன் தங்கையைப் போலச் சொல்லிக் கொண்டு ஒரு விலைமாதும் வந்து நின்றால், என்ன செய்வது என்றுதான் சொன்னேன். அதற்குள் சண்டைக் கோழி போல் கிளம்பி விட்டாயே உட்கார். அதோடு உன் தங்கையை அப்படி யெல்லாம் சொல்லுவேனா? எதிர்காலத்தில் அவள் எனக்கு ஒரு கவுரவமான உறவினள் ஆகக் கூடும்..''

''அப்படியென்றால்?'' என்று ஆவலே வடிவமாகத் திரும்பினாள் தேவி.

''ஒன்றும் முடிவாகச் சொல்லவில்லை. அப்படியும் ஆகலாம் என்றேன்'' என்றான் தினகரன்.

தேவி ஏமாற்றத்துடன் அமர்ந்தாள்.

''என் தம்பி இதேபோல இன்னமும் நாலு பேரிடம் நடந்திருந் தால், அவனுக்கு யாரை மனைவியாக்குவது'' என்று மிகவும் கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான் தினகரன்.

தேவியின் முகம் கடுத்தது. ''உங்கள் தம்பியென்ன கலியுக மன்மதனா? அவர் கண்ணில் பட்டவர்கள் எல்லாம் மயங்கி விழுந்து விடுவார்களாக்கும்?'' என்று துடுக்காகக் கேட்டாள்.

''அப்படி நடந்திருந்தால்...?'' இதழ்களில் புன்னகையோடு அவன் திரும்பினான்.

சும்மா வெறும் வாதத்துக்காக அவன் பேசுவது தேவிக்குப் புரிந்து போயிற்று. நேராக அவன் கண்களை பார்த்தாள். ''அதனால் என் தங்கையை உங்கள் தம்பியின் மனைவியாக ஏற்க முடியாது என்று கூறுகிறீர்களா?''. என்று வெளிப்படையாகக் கேட்டாள்.

''ஒருவேளை நான் அப்படிச் சொல்லி.விட்டால்...''

''சொல்லி விட்டால் விதியே என்று நான் சும்மா இருப்பேன் என்று நினைத்தீர்களோ?''

''என்ன செய்து விடுவாய்?'' என்று அலட்சியமாகப் புன்னகை செய்தான் அவன்.

''வழக்குப் போடுவேன்''

''அடடே!'' என்று ஆச்சரியப்பட்டான்.

''ஆமாம், என்னிடம் உங்கள் தம்பி செல்விக்கு எழுதிய கடிதம், மாலையும் கழுத்துமாக அவர்கள் இருவரும் எடுத்துக் கொண்ட படம்; திருமணத்துக்கு இரண்டு சாட்சிகள். எத்தனை ஆதாரங்கள் இருக்கின்றன தெரியுமா'' என்று மிரட்டினாள் தேவி.

அவன் மறுத்தால் மிரட்டியேனும் காரியத்தைச் சாதிக்க வேண் டும் என்று தேவி ஏற்கனவே தீர்மானித்திருந்தாள்.

ஆனால் அவன் 'மலை விழுங்கி மகாதேவன்' என்று அவளுக் குத் தெரியுமா? ''என்னென்ன, முதலாவது என்ன கடிதமா? என் தம்பி மட்டும்தான் உன் தங்கைக்கு அந்த மாதிரி கடிதம் எழுதினான் என்று எப்படி நிரூபிப்பாய்? வேறு எத்தனை பேர் எழுதினார் களோ..''

''என்ன?'' என்று நெற்றிக் கண்ணைத் திறந்தாள் தேவி திடுக்கிட்டு.

''அய்யோ அய்யோ! நான் சொல்லவில்லை'' என்று பயந்தவன் போல பாவனை செய்தான் தினகர். ''அப்படி என் வக்கீல் கேட்டால் என்ன சொல்லுவாய் என்று கேட்க வந்தேன்... ம்... அப்புறம் போட்டோவா? தனித்தனி போட்டோக்களை இணைத்து ஒட்டி மீண்டும் படம் எடுத்தால் கூட இருவரும் ஒன்றாக நின்று எடுப்பது போலத்தான் இருக்கும். அப்புறம் என்ன சொன்னாய்...? சாட்சிகள் அதுதானே. சாட்சிகள் யார்? சங்கரும் வினோத்தும் தானே. அவர்கள் மனோகரின் நண்பர்கள். அவனுக்கு எதிராகச் சாட்சி சொல்வார்களா? அப்படியே சாட்சி சொல்லுவது என்றாலும் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா? வினோத் அமெரிக்காவில் இருக்கிறான். சங்கர் கல்கத்தாவில். நீ கெஞ்சினால் கூட அவர்கள் இங்கே வரமாட்டார்கள்...'' என்றான் தினகர் பழைய புன்னகையுடன்.

தேவிக்கு ஏதோ தோன்றியது. ''இது எல்லாம் உங்கள் ஏற்பாடு தானாக்கும்?'' என்று கேட்டாள்.

அவன் பெருமையோடு சிரித்தான். ''பின்னே என்னவென்று நினைத்தாய்? ஒரு பெண்ணின் கையெழுத்தில் மனோகருக்குக் கடிதம் வந்த உடனே உஷாராகி விட்டேன். பிரித்துப் பார்த்து விட்டு மனோவுடன் டெலிபோனில் பேசி விவரம் அறிந்தேன். உடனேயே முதல் காரியமாக அந்த மடையன் கூட்டிப்போன சாட்சிகளை அகற்றி விட்டேன்.

தேவிக்கு நெஞ்சு எரிந்தது. ''உங்கள் தம்பி அந்தப் புண்ணியவான், எதிர்த்து வாயே திறக்கவில்லையாக்கும்?'' என்றாள் குத்தலாக.

''என் தம்பி அந்தப் புண்ணியம் செய்தவன் எனக்கும் என் அம்மாவுக்கும் எதிராக வாயே திறக்க மாட்டான். அதிலும் நான் என்றால் அவனுக்கு நிரம்பவும் பயபக்தி...'' என்று பெருமையடித்தான் அவன்.

வெறுப்புடன் அவனைப் பார்த்தாள் தேவி. ''அக்டோபஸ்'' என்ற பிரம்மாண்டமான கடல் பிராணி ஒன்று உண்டு. அதற்கு சிலந்தி போல எல்லாத் திசைகளிலும் நீண்ட கைகள், அந்த

கைகளை நான்கு திசைகளிலும் பரப்பிக் கொண்டு இரைக்காகக் காத்திருக்குமாம். இரை கிட்டி விட்டால் அத்தனை கரங்களாலும் நசுக்கிக் கபளீகரம் செய்து விடும். அதுபோல இவனும் எல்லாத் திசைகளிலும் கையை நீட்டி அவளது சிறகுகளை ஒடித்து விட்டானே! தான் பெரிய புத்திசாலி என்று எண்ணிக் கொள்வாளே. இவனிடம் மண்ணைக் கவ்வவா? அவமானத்தால் அவள் முகம் சிவந்தது.

அவள் மனதில் இருப்பதை ஊகித்தவன் போல தினகர் பேசினான். ''நேரமாகி விட்டது, போகலாமா?'' என்று கையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டியபடி எழுந்தான்.

தேவியும் எழுந்து கொண்டே ''நீங்கள் முடிவாக ஒன்றும் சொல்லவில்லையே'' மிகுந்த சினத்துடன் தன்னை அடக்கிக் கொண்டு வினவினாள்.

''ஆமாம் இவ்வளவு நேரம் பேசியும் தீர்வு காண முடியவில்லை. நாளை மாலை நாம் மீண்டும் பேசலாம்.''

''ஏன், நாளை மாலை உங்கள் பொழுது போக்குக்கு வேறு ஒன்றும் இல்லையோ?'' என்று இடக்காகக் கேட்டு விட்டாள் தேவி. ''நாளை மாலை நான் கோவிலுக்குப் போக வேண்டும். அங்கே போய் இந்தத் தயவே... இல்லை சிக்கலில் இருந்து எனக்கு மீட்சிக் கொடு இறைவா என்று வேண்ட வேண்டும்..''

அவளது பேச்சின் முதல் பகுதியை மட்டும் கேட்டவன் போல தினகர் சொன்னான். ''கோவிலுக்குத்தானே? நாம் இருவரும் சேர்ந்தே போகலாம்.''

உன்னோடு சென்றால் கோயில் கூட சைத்தானின் இல்லமாகி விடும் என்று எரிச்சலோடு நினைத்துக் கொண்டாள் தேவி.

## 13

தேவி வீட்டை அடைந்தபோது செல்வியோடு சசியும் அங்கே காத்திருந்தாள். அவள் ஏதேனும் எண்ணிக் கொள்ளக் கூடாதே என்று ''இன்னமும் அவர் முடிவு பண்ணவில்லை'' என்று முதலிலேயே சொன்னாள் தேவி.

செல்வி முகம் விழுந்து விட்டது. ''அக்கா அப்படி என்றால் என்ன அர்த்தம்?'' என்று அச்சப்பட்டாள்.

''இன்னமும் யோசிக்க வேண்டுமாம். பாவம்; அலுவலகம், தொழிற்சாலை எல்லாம் பார்க்கிறார் அல்லவா? நேரம் இல்லை யாம், நாளை மாலை சற்று ஓய்வு இருக்கிறதாம். வரச் சொன்னார். சேர்ந்து பேசி எப்படியும் நாளைக்கு ஒரு முடிவுக்கு வந்து விடலாம் என்றார், பயப்படாதே'' என்று தங்கையைத் தேற்றினாள் தேவி.

சற்று ஆறுதலோடு இரவு சாப்பாட்டைப் பார்க்கப் போனாள் செல்வி. 'அப்பா' என்று சோம்பல் முறித்தபடி நாற்காலியில் சாய்ந்தாள் தேவி.

சசி யோசனையுடன் அவளைப் பார்த்தாள்.

கவிஞர்கள் கூறும் சாமுத்திரிகா லட்சணப்படி தேவி அழகி அல்லதான். ஆனால் அவளுடைய அளவான அங்கங்களும் அலை யலையான கூந்தலும் அவளை மிகுந்த அழகியாகக் காட்டின. எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் கண்கள்! ஆழமான கடலுள் இரு கருவண்டுகள் போலச் சுழலும் விழிகள் அந்த விழிகளுக்குப் போட்டியாக 'இம்' என்றுமுன் கன்னத்தில் சுழலும் குழி.

பெண்ணாகிய சசிக்கே அந்த குழியைத் தொட்டுப் பார்க்கும் ஆவல் தோன்றுவது உண்டு. பணக்கார தினகர் அப்படி ஒன்றும் நல்லவனாகத் தென்படவில்லை!

''சேற்றுப் பள்ளம் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா தேவி?'' என்று திடீர் என்று கேட்டாள் சசி.

''படித்திருக்கிறேன், அக்கா. சாதாரணமாகத் தோன்றுமாம். காலை வைத்தால் யானையைக் கூட உள்ளே இழுத்து விடுமாமே.''

''அதேதான். அறிந்தோ அறியாமலோ செல்வி அதில் சிக்கிக் கொண்டாயிற்று. அவளைக் காப்பாற்றுகிறேன் என்று நீயும் அதில் மாட்டிக் கொள்ளாதே'' என்று எச்சரித்தாள் சசி.

தேவி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். ''என்ன சசிக்கா? நீங்களா இப்படிப் பேசுவது? அதுவும் நெருப்பை ஈ அரிக்குமா என்று கேட்ட நீங்கள் இப்படிச் சொல்லலாமா?'' என்று படபடத்தாள்.

ஆத்திரப்படாதே தேவி. நெருப்பை ஈ அரிக்காது! அரிக்கவும் முடியாது. அது உண்மைதான். ஆனால் அதே நெருப்பை நீர் அடியோடு அணைத்து விடுமே'' என்றாள் சசி.

சசியின் முகத்தில் கப்பியிருந்த கவலையைப் பார்த்தாள் தேவி. பக்கென்று சிரித்து விட்டாள். சசியின் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''போங்கள் சசி அக்கா... கவனமாக இரு என்று என்னிடம் சொன்னால் போதாதா? இப்படிச் சுற்றி வளைக்க வேண்டுமா?'' என்று உரிமையோடு சொன்னாள். ''ஆனால் உங்கள் அச்சத்துக்கு அடிப்படையே இல்லை அக்கா. என்னைப் பொறுத்தவரையில் அந்த தினகரும் பாம்பு, பல்லி எதுவானாலும் அதுவும் ஒன்றுதான். அதோடு அந்த தினகர் வெறும் பணப் பைத்தியம் அக்கா. ஒரு மட்டைக்குச் சேலையைச் சுற்றி விட்டு அதற்குப் பத்து லட்ச ரூபாய் சொத்து இருக்கிறது என்றால், அந்த மட்டையையே கட்டிக் கொள்ளுவான்: இதை விட்டு என்னை ஏறிட்டுக் கூடப் பார்க்க மாட்டான்...'' என்று கேலி பேசினாள்.

''என்னவோ நாளைக்கும் வரச் சொல்லுவானேன் என்று உறுத்தலாக இருந்தது. அதனால் சொன்னேன்...'' என்று திருப்தியற்றுச் சொன்னாள் சசி.

''வித்தியாசமான பொழுதுபோக்கு'' என்று முணுமுணுத்தாள் தேவி.

மறுநாள் கிளம்புகையில் 'அக்கா' என்று அருகில் வந்தாள், செல்வி. ''அக்கா அவருக்கு ஆத்திரம் வரும்படியாக எதுவும் பேசிவிடாதே, அக்கா'' என்று கெஞ்சலாகக் கேட்டுக் கொண்டாள்.

''சரி செல்வி'' என்று புன்னகையோடு அவள் கன்னத்தில் தட்டினாள், தேவி.

வாயிலில் காரின் குழல் ஒலி கேட்டது. மடமடவென்று படியிறங்கிச் சென்று காரில் ஏறிக் கொண்டாள் தேவி.

காரைக் கிளம்பியபடியே ''எந்தக் கோயில்?''என்று வினவி னான் தினகரன்.

''எந்தக் கோயில்?'' தேவி திணறிப் போனாள். முதல்நாள் அவனை மட்டம் தட்டுவதற்காகத்தான் அவள் கோவிலுக்குப் போக வேண்டும் என்றது, இப்போது...''

''வடபழனிக்குப் போகலாமா?'' என்று அவனே காரைத் திருப்பினான்.

நல்லதாயிற்று என்று பேசாமல் இருந்து விட்டாள் தேவி.

கோவிலில் தினகரன் மிகவும் அறிமுகமானவனாக இருந்தான். பலவிதமானவர்களின் முகமன்கள். அவர்கள் முகத்தில் தேவியைக் கண்டதும் சிறு வியப்பும் அதை மறைக்கும் முயற்சியும் தெரிந்தது. தன் எளிய உடை காரணமோ என்று சந்தேகித்தாள். தேவி அதற்கு மேல் தன்னையும் அவனையும் இணைத்து யாரும் சந்தேகப்படக் கூடுமோ என்ற எண்ணம் கூட அவளுக்கு இல்லை.

எங்கிருந்தோ ஒரு பையன் அர்ச்சனைத் தட்டுகளுடன் வந் தான். சன்னிதி தோறும் அர்ச்சனைகள் நடந்தன.

அம்மன் சன்னிதியில் பெண்களின் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. வெகு இயல்பாக ஒரு விரலால் அவள் தோளைத் தொட்டு ''இப்படி வந்துவிடு தேவி'' என்று தன்னருகே அவளை அழைத்துக் கொண்டான், தினகர்.

கடைசியாக மாலை மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். அதற்குள் தினகருக்குத் தெரிந்த யாரோ வந்தார் கள். அவன் அவர்களோடு பேச தேவி ஒதுங்கி நின்றாள். அங்கும் இங்கும் பரபரத்த கூட்டத்தை வேடிக்கை பார்த்தாள் தேவி. திடீர் என்று தினகரின் சிரிப்பு சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தாள். பார்த்தவள் அப்படியே திகைத்து போனாள்.

நேற்று பார்த்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் இவ்வளவு வித்தி யாசமா? சரிகைக் கரை போட்ட பட்டு வேட்டியும் பட்டு ஜிப்பா வும் அவனுக்கு இவ்வளவு பொருந்தக் கூடும் என்று தேவியால் நம்பவே முடியவில்லை. அந்தப் புலி நகச் சங்கிலி அவனுக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது! கழுத்தில் இருந்து சுழற்றி ஒரு

கையில் மடித்துத் தொங்கப் போட்டிருந்த மாலையும், அவனது கம்பீரத் தோற்றமும், எல்லாவற்றுக்கும் மேலான இயல்பான அந்தச் சிரிப்பும்! தேவி மலைத்துப் போய்ப் பார்த்தாள்.

பேச்சின் ஊடேயே திரும்பிய அவன் கண்கள் தேவியின் பார்வையைச் சந்தித்தன. அவசர அவசரமாகப் பார்வையை விலக்கிக் கொண்டாள், தேவி.

அவன் விடைபெற்றுக் கொண்டு வந்ததும் இருவரும் காரில் ஏறிக் கொண்டு கிளம்பினர். போக்குவரத்து நெரிசலான பகுதியைத் தாண்டியது. ''என்ன முடிவு செய்தாய், தேவி?'' என்று வினவினான், தினகர்.

திகைப்புடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள் தேவி. அவன் இதழ்களில் ஓர் உல்லாசப் புன்னகை மலர்ந்திருந்தது.

ஒன்றும் சொல்லத் தோன்றாமல் குழப்பத்துடன் ''நான்... நானா முடிவு செய்ய...'' என்று தடுமாறினாள் அவள்.

''கோவிலில் அப்படிப் பார்த்தாயே, என்னைப் பற்றி என்ன முடிவுக்கு வந்தாய் என்று கேட்டேன். நான் அழகாக இருக்கிறேன் அல்லவா..'' என்றான் அதே உல்லாசத்துடன்.

''பாம்பு கூட அழகாய்த்தான் இருக்கிறது'' என்றாள் தேவி வெடுக்கென்று. அவளுக்கு அர்த்தம் புரியாத கோபம் வந்தது, அவள்தான் பட்டிக்காட்டாள் போலப் பார்த்தாள் என்றால், அவன் அதைச் சொல்லிக் காட்ட வேண்டுமா, 'உங்கள் அழகைப் பற்றிப் பேசுவதற்காக நான் இங்கே வரவில்லை' என்றாள் எரிச்சலுடன்.

அவன் தோள் குலுங்க நகைத்தபடி காரை ஓட்டினான். ''மெய்தான் உன் தங்கை பாசா, பெயிலா என்று கேட்பதற்காக அல்லவா நீ வந்திருக்கிறாய்.''

தன் வீட்டுக்குச் செல்லும் பாதையில் கார் செல்வதைக் கண்டதும் தேவி திடுக்கிட்டாள். வீட்டுக்கா போகிறோம்?''

''ஆமாம் தேவி'' என்றான் அவன். கோயிலுக்குச் சென்று வந்தது மனதுக்கு நிறைவாக இருக்கிறது. கண்டதையும் பேசி

அதைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று பார்க்கிறேன். நாளை எங்கே ஓடிப் போகிறது? சரிதானா? என்று முடித்தான்.

தேவியின் பொறுமை எல்லையைத் தொட்டது. ''நிறை வோடு நிறைவாக எனக்கும் நிறைவான பதிலைச் சொல்லி விடுவதுதானே'' என்றாள் எரிச்சலுடன்.

''மன்னித்துக் கொள் தேவி, நாளை எப்படியும் முடித்து விடலாம்'' என்றபடி அவளது வீட்டின் முன்னே காரை நிறுத்தி னான் தினகர்.

வேறு வழியின்றி கீழே இறங்கினாள் தேவி. படியேறப் போனவளை நிறுத்தி ஒரு தட்டுப் பிரசாதத்தை கொடுத்தான் தினகர். ''நாளை ஆறு மணிக்குத் தயாராயிரு'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

காரியம் முடியாத சலிப்புடன் படி ஏறினாள் தேவி. பயமும் நம்பிக்கையுமாகக் காத்திருந்த தங்கையைக் கண்டதும் தினகர் மீது அவளுக்கு மிகுந்த சினம் உண்டாயிற்று.

அன்றும் தினகர் குறித்த நேரம் தவறாமல் வந்தான். விதியே என்று காரில் ஏறினாள் தேவி. நேரே சாலையைப் பார்த்த வண்ணம் கற்சிலை போல அமர்ந்திருந்தாள்.

''தேவி... கடற்கரைக்குப் போனால் ஐஸ்கிரீம் முறுக்கு விற் போரின் தொல்லை. கோயிலுக்குப் போனால் தெரிந்தவர்கள் குறுக்கீடு, யாரும் முகம் பாராமல் பேசக் கூடிய இன்னோர் இடத்துக்கு உன்னை அழைத்துப் போகிறேன், இன்று எப்படியும் பேசி முடித்து விடலாம்'' என்றான் தினகர்.

''தேவி அலட்சியமாக, ''எங்கே!'' என்றாள்.

''டிஸ்கோதே போயிருக்கிறாயா?''

தேவி சட்டென நிமிர்ந்தாள். ''அது இளஞ்ஜோடிகள் செல்லும் இடம் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்''

''இளஞ்ஜோடிகள் தான் போக வேண்டும் என்பது இல்லை. குறுக்கீடுகள் இல்லாமல் பேசலாம் என்பதால் அங்கே செல்ல நினைத்தேன். அதில் உனக்கு என்ன ஆட்சேபனை? ஒருவேளை

என்னிடம் புதிய பயம் ஏதும் தோன்றி விட்டதா?'' தினகரின் குரலில் கேலி தொனித்தது.

''எனக்கு ஒன்றும் பயம் இல்லை?'' என்று அவசரமாக மறுத்தாள் தேவி. ''ஆனாலும் குறுக்கீடு இல்லாமல் பேச அங்கு தான் போக வேண்டும் என்பது இல்லை'' என்றாள், விடாமல்.

''தேவி'' என்றான் தினகர் அழுத்தமாக. ''அங்கே போய்தான் பேச வேண்டும் என்பது என் தீர்மானம். உனக்கு வர விருப்பம் இல்லையென்றால் சொல்லிவிடு, இதோ உன் வீட்டுக்கே காரைத் திருப்பி விடுகிறேன்'' என்றான் கண்டிப்பாக.

பொங்கியெழுந்த சினத்தை அடக்கினாள் தேவி. அசட்டையா கத் தோளைக் குலுக்கினாள். ''எங்கானால் என்ன?''

ஒரு பெரிய நவநாகரீகமான ஓட்டலின் முன்னே கார் நின்றது, பணம் தண்ணீராக செலவாகிற இடம் என்பது பார்த்தாலே தெரிந் தது. அந்த இடத்துக்கும் தன் உடைக்கும்... சற்று மனம் குன்றினாள் தேவி. வரவேற்புப் பெண்களிடம் பேசிக் கொண்டு இருந்த தினகரைப் பார்த்தாள். இன்றும் திகைத்தாள். பட்டு வேட்டியும் ஜிப்பாவும் எவ்வளவு பாந்தமாக இருந்தனவோ, அதேபோல இந்த புல் சூட்டும் ஷூவும் அவனுக்கு மிக பொருத்தமாக இருந்தன.

வரவேற்புப் பெண்ணிடம் எதையோ வாங்கிக் கொண்டு அவன் திரும்புவது தெரிந்தது, நேற்றையைப் பேச்சு நினைவு வந்தது. சட்டெனப் பார்வையைத் திருப்பினாள்.

தினகர் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். ஒரு பெரிய கூடத்தில் பல பொம்மைகள் கண்கவரும் உடைகளு டன் நின்றன. ''இங்கேயே வேறு சேலை வாங்கி அணியக்கூட வசதியிருக்கிறது தேவி, நீ வேறு மாற்றிக் கொள்கிறாயா?''

''ஏன் எனக்குப் பதிலாக அந்தச் சேலைதான் உங்களிடம் பேசப் போகிறதா?'' என்று ஏளனமாகக் கேட்டாள் தேவி.

சிரித்துக் கொண்டே ''சரி, பரவாயில்லை வா'' என்று அழைத் துச் சென்றான் அவன்.

தங்க நிற அலங்காரம் செய்த வெண்ணிறக் கதவு. அதைத் திறந்து கொண்டு இருவரும் உள்ளே சென்றனர். வெளியே இந்த வெளிச்சத்துக்கு உள்ளே கும்மிருட்டாகத் தோன்றியது. மெல்ல அந்த இருட்டு பழக்கத்துக்கு வரவும், ஆங்காங்கே கிடந்த திண்டுக ளோடு திண்டுகளாகக் கிடந்த மனித உடல்களும் தெரியலாயின. சரியாகப் பார்க்குமுன் ''அந்தப் பக்கம் ஆள் இல்லை தேவி, அங்கே போகலாம்'' என்று அழைத்துச் சென்றான், தினகர்.

எங்கிருந்தோ குளிர்ச்சியான காற்றும், அதில் மெல்லிய இசை யும் மிதந்து வந்தன. மெத்தென்று புதைந்த திண்டின் மீது அமர்ந்த படி தேவி பார்வையைச் சுழல விட்டாள்.

முகம் அறியாத இருட்டுதான். ஆனால் உடலின் வரி வடிவங் கள் லேசாகத் தெரிந்தன. தெரிந்த அளவில் தேவியின் காது மடல் வரை சூடாகிச் சிவந்தது.

''சே அசிங்கம்!'' என அவனிடம் ஏதோ சொல்ல முயலுமுன் தேவியின் தோளில் ஒரு கை வளைந்தது. மற்றொரு கை தேவியின் முகவாயைத் தொட்டுத் தன் புறமாகத் திருப்பியது.

''என் தேவி...'' என்று குலவியது தினகரின் குரல்.

## 14

மின்சாரம் தாக்கியது போல ஒரு கணம் செயலற்றுப் போனாள், தேவி. மறுகணமே அவன் கைகளை உதறி எறிந்து விட்டு சரேல் என எழுந்தாள். வெறி கொண்டவள் போலக் கதவை நோக்கி விரைந்தாள்.

விரைந்த வேகத்தில் அந்தக் கம்பத்தில் யார் மீதோ தடுக்கி விழுந்தாள். ''ஈஸிஹனி'' என்று அந்த யாரோ அவளை நன்கு அணைத்துத் தூக்கி விட்டான், உடல் எல்லாம் தீப்பிடித்தாற் போல எரிந்தது தேவிக்கு. இதழ்களை மூடிய வண்ணம் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

''என்னை என்னவென்று எண்ணிக் கொண்டான்? அவன் என்னை என்னவென்றுதான் நினைத்தான்'' திரும்பித் திரும்பி இதே கேள்வி நெஞ்சில் பேரோசையாய் ஒலித்தது. திக்கு திசை புரியாமல் மேலே மேலே மடமடவென்று நடந்தாள்.

வெளி வாயிலை அடைந்தபோது ஒரு கை அவளை வழிமறித் தது. சீற்றத்துடன் நிமிர்ந்தாள், தினகர்தான். எவ்வளவு தைரியம் இருந்தால் அவளைப் பின் தொடர்ந்து வருவான்?

அவள் கண்களில் வீசிய புயலைப் பொருட்படுத்தாமல், ''கொஞ்சம் அமைதிப்படுத்திக் கொள் தேவி'' என்றான் அவன் அதிகாரமாக.

''அதை நீங்கள் சொல்லத் தேவையில்லை'' என்று சினந்தாள் தேவி.

அவற்றின் வெளி வாயில் புறமாக வந்த இருவர் அக்கறையு டன் தங்களைக் கவனிப்பது தெரிந்தது. சட்டெனக் குரலைத் தணித்துக் கொண்டு ''வழியை விடுங்கள். நான் போக வேண்டும்'' என்று தேவி சீறினாள்.

''எங்கே?''

அவனை வெறுப்புமிகப் பார்த்தாள் தேவி. ''எங்கேயாவது, அதாவது நீங்கள் இருக்கும் இடத்தை விட்டு வேறு எங்கேயாவது போதுமா? இனியேனும் தயவு செய்து வழி விடுகிறீர்களா?''

''எப்படிப் போவாய் தேவி! உன் கைப்பை கூட காரில் அல்லவா கிடக்கிறது. அதை எடுத்துத் தந்து உன்னை அனுப்பும் உத்தேசம் எனக்கும் இல்லை. பாவம் பின்னே எப்படிப் போவாய்?'' என்று புன்னகையோடு பரிதாபப் பட்டான் தினகர்.

''நடந்தேனும் போகிறேன். நீங்கள் வழியை விட்டால் போதும்'' என்றாள் தேவி ஆத்திரத்துடன். ''எல்லோரும் காட்சிப் பொருள் போலப் பார்க்கத் தொடங்குகிறார்கள் தயவு பண்ணி விலகுகிறீர்களா?'' என்று அவனை சுற்றிக் கொண்டு செல்ல முயன்றாள்

அப்படிச் சொல்ல முடியாதபடி தினகர் மீண்டும் தடுத்தான். ''யார் எப்படிப் பார்த்தாலும் எனக்கு அக்கறையில்லை தேவி. உன்னிடம் எனக்குப் பேச வேண்டியிருக்கிறது. பேசி முடித்த பிறகுதான் உன்னை அனுப்பப் போகிறேன். நீ மீறிச் செல்ல முயன்றால் இத்தனை பேர் முன்னிலையிலும் உன்னைக் கையைப் பிடித்து இழுத்துச் செல்லக் கூடத் தயங்க மாட்டேன்'' என்று திடமான குரலில் உறுதியாகச் சொன்னான், தினகர்.

தேவிக்கு திக்கென்றது. அவனை ஏறிட்டுப் பார்த்தாள். குரலைப் போலவே உறுதியைக் காட்டி நின்ற முகம் தெரிந்தது. இவன் எதுவும் செய்வான், செய்யக் கூடியவன் தான். முதல் நாள் அவனைப் பார்த்ததும் உண்டான சிறு நடுக்கம் தேவியின் நெஞ்சுக் கூட்டினுள் மீண்டும் உண்டாயிற்று. எப்படியோ சமாளித்துக் கொண்டு, ''அங்கே உள்ளே வரமாட்டேன்'' என்று மட்டும் சொன்னாள்.

''வேண்டாம், இந்த ஓட்டல் தோட்டத்திலேயே உட்காரலாம். அந்த ஓரத்தில் ஒரு மேசை காலியாக இருக்கிறது. பார் அங்கே உட்காரலாம்..'' என்று அழைத்துச் சென்றான்.

இருவரும் எதிர் எதிரே அமர்ந்தனர். இருபுறங்களிலும் காகித விளக்குகளுடன் மேசை மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

அருகே வந்த சர்வரிடம் என்னவோ சொன்னான், தினகர். அவனும் தலையை ஆட்டி விட்டு அகன்றான்.

அவன் சென்ற பிறகு தினகரன் தேவியிடம் திரும்பினான். ''உன் தங்கை பற்றி என் முடிவு உனக்குத் தெரிய வேண்டாமா? அதற்குள் ஓடிவந்து விட்டாயே'' என்றான்.

''பின்னே? என் தங்கையின் வாழ்வுக்காக என் மானத்தை பறக்க விட்டு விடுவேன் என்று நினைத்தீர்களோ?'' என்றாள் தேவி கடுமையாக.

''இதில் மானம் பறப்பதற்கு என்ன இருக்கிறது? எத்தனை பேர் சாதாரணமாக வந்து போகிறார்கள்?''

அங்கே பார்த்த காட்சிகள் தேவியின் மனதில் தோன்றின. முகத்தில் ரத்தம் பாய்ந்தது.

'எனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லை. ஒருவேளை உங்கள்' ஐந்து லட்ச ரூபாய் பெண் இருக்கிறாளே, அவளுக்கு வேண்டுமா னால் இதெல்லாம் அன்றாட விஷயங்களில் ஒன்றாக இருக்கலாம்'' என்று மட்டம் தட்டினாள் தேவி.

''எங்கே இருந்து எங்கே தாவி விட்டாய்?'' என்று சிரித்தான் தினகர், ''அந்த ஐந்து லட்சத்தை வேண்டாம் என்று அனுப்பி விட்டேன் தெரியுமா?'' என்றான் சிரிப்பு மாறாத முகத்துடன்.

தேவியின் முகம் சட்டென ஒளி பெற்றது. மற்றதெல்லாம் மறந்தது. கண்கள் பளபளக்க ''அப்படியானால்?'' என்று வெகு ஆவலுடன் கேட்டாள்.

''நீ சொல்வது போலப் பணம் இல்லாது போனாலும் பரவா யில்லை என்று குணசாலியான ஓர் ஏழைப் பெண்ணை மனோக ருக்கு மணமுடிக்கப் போகிறேன்..'

''அது செல்விதானே? செல்விதானே?'' என்று பரபரத்தாள் தேவி.

''அதேபோல நானும் ஓர் ஏழைப் பெண்ணை மணப்பதாக முடிவு செய்துவிட்டேன்...''

''உங்கள் விஷயம் எனக்கு எதற்கு? ஆனால் உங்கள் தம்பிக் கும் என் செல்விக்கும் தானே..'

கண்கள் பளபளக்க அவள் ஆவலோடு அவள் பேசுவதையே இளம் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு இருந்தான் தினகர். அவனது பார்வையில் குழம்பிப் போய்ப் பேச்சை நிறுத்தினாள் தேவி.

''உன் தங்கையிடம் உனக்கு நிரம்பவும் பிரியம் இல்லையா தேவி?'' என்று மிகவும் மென்மையாகக் கேட்டான் அவன்.

சோர்ந்து கிடந்த செல்வியின் நினைவு வந்தது. ''ஆமாம்!'' என்று பதிலிறுக்குமுன் தேவியின் குரல் கம்மியது.

''உன் தங்கைக்காக எதுவும் செய்வாய் அல்லவா?''

தேவியின் புத்தி சட்டெனக் கூர்மை பெற்றது. சற்று முன் நடந்தது நினைவுக்கு வந்தது. ''என் தன்மானத்துக்குப் பங்கம் வராத அளவில் எதையும் செய்வேன்'' என்றாள் எச்சரிக்கையுடன்.

அவளைக் கூர்ந்து பார்த்தபடி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் தினகர். ஒருமுறை புகையை இழுத்து விட்டான். பிறகு சொன்னான். ''உன் தங்கையை என் தம்பிக்கு மணமுடித்து வைக்கிறேன், ஆனால்..''

''ஆனால்..?'' என்ன மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டாள் தேவி.

''அந்தத் திருமணத்துக்கு முன் நீ என்னை மணந்து கொள்ள வேண்டும்'' என்று நிதானமாக தெளிவாக — ஒவ்வொரு வார்த்தை யாகச் சொன்னான் தினகரன்.

ஆனால், அவன் சொன்னதில் ஒரு வார்த்தை கூட விளங்காத வள் போல பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள், தேவி.

''தேவி...''

''ஆங்... என்ன சொன்னீர்கள்?''

''நீ என்னை மணந்து கொள்ள வேண்டும் என்றேன்' என்றான் அவன் மீண்டும்.

சட்டென எழுந்து நின்றாள்.

''உட்கார் தேவி'' என்றான் அவன் பழையபடி அதிகாரமாக. ''எதையும் உட்கார்ந்து கொண்டு அமைதியாகவே பேசலாம். மற்றவர்களுக்கு நாம் இலவச நாடகம் நடத்திக் காட்ட வேண்டியது இல்லை.''

அவன் சொன்னவிதம் தேவிக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால் அவன் சொற்களில் உண்மை இருந்தது புரிந்தது. எனவே அவனை வெட்டுவது போலப் பார்த்து விட்டு அமர்ந்தாள். ''இனி பேசுவதற்கு என்ன இருக்கிறது?''

''அப்படியென்றால் சம்மதம் என்று அர்த்தமா?'' என்று அவன் கேலிச் சிரிப்புடன் கேட்டான்.

தேவி அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள். ''பசித்திருக்கும் புலிதானே என்று புல்லையும் தின்னச் சொல்லிப் பார்க்கிறீர்களோ!'' என்றாள் துச்சமாக.

அவன் சிரிப்பு மறைந்தது. முகம் கருத்தது. ''நாவைச் சற்று அடக்கிப் பேச வேண்டும் தேவி. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உன்னைப் பெண்டாளப் பார்க்கிறேன் என்று நினைத்தாய் அல்லவா? நீ நினைப்பது போல ஒன்றும் இல்லை. அந்த மாதிரி உன்னை என் அடிமையாக்க கவுரவமான திருமண பந்தம் தேவையில்லை. உன் தங்கை வாழ வேண்டுமானால் நீ என் ஆசை நாயகி ஆக வேண்டும் என்றுகூட நான் நிபந்தனை விதிக்க முடியும். பின் வேதனை பொறுக்காமல் நீ எனக்கு இணங்கி வந்திருப்பாய். அதோடு மூன்று நாட்களாக இருட்டிய பின் என்னோடு சுற்றுகிறாயே. உன் மானத்தைப் பற்றி இப்போது மற்றவர்கள் கணிப்பு என்னவாக இருக்கும் தெரியுமா?''

சரேலென முகத்தை திருப்பிக் கொண்டாள் தேவி. அதற்குள் முகம் எல்லாம் ஒரேயடியாகச் சிவப்பாகி விட்டது. ''இப்படி எல்லாம் பேச உங்களுக்கு கேவலமாக அசிங்கமாக இல்லையா?'' என்றாள் அருவெறுப்புடன்.

தினகர் நிதானமாக அவளைப் பார்த்தான். செக்கச் சிவந்திருந்த அவள் காதுமடல்கள் கண்ணில் பட்டன. ''தேவி, நீ பெண் சட்டென உணர்ச்சி வசப்பட்டு பேசுகிறாய். புலி புல் என்றெல்லாம் பொருத்தம் இல்லாத உவமானங்களை அடுக்குகிறாய். நீயே ஓர் ஆணாக இருந்திருந்தால், விஷயத்தை வேறு முறையில் அணுகியிருப்பாய். அது கிடக்கட்டும். விஷயத்துக்கு வருவோம். தேவி, நாம் பிறந்திருப்பது மேல் நாடு அல்ல. அங்கே பிறந்திருந்தால் சின்னவர்களுக்குத் திருமணத்தை முடித்துவிட்டு, பெரியவர்கள் நிம்மதியாக இருக்கலாம். ஆனால், துரதிருஷ்டவசமாக இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் பிறந்து விட்டோமே, இங்கே மூத்தவர் மணந்த பின்தான் அடுத்துப் பிறந்தவர்களின் மணம் என்று தொன்று தொட்டு ஒரு வழக்கம் இருக்கிறது. அதை எண்ணித்தான்..''

''இந்தக் காலத்தில் அதெல்லாம் யார் பார்க்கிறார்கள்?'' என்று குறுக்கிட்டாள் தேவி.

''நான் பார்ப்பேன்.. அதைவிட முக்கியமாக என் தாயார் பார்ப்பார்கள். அதை எண்ணித்தான் எல்லோருக்கும் கவுரவமாக இருக்கத்தக்க ஓர் ஏற்பாட்டைச் சொன்னேன். அதை ஏற்பதோ அன்றி விடுவதோ உன் விருப்பத்தைப் பொறுத்தது என்று முடித் தான் தினகர். பிறகு தன் பொறுப்பு முடிந்தது என்பது போல நாற்காலியில் சாய்ந்தபடி புகைக்கத் தொடங்கி விட்டான்.

''இந்த உலகத்திலேயே நீங்கள் ஒருவர்தான் ஆண்பிள்ளை என்றாலும் நான் உங்களை மணக்கப் போவது இல்லை.''

''உன் விருப்பம்'' என்று தோளை குலுக்கினான் தினகரன். ''பாவம் உன் தங்கை, நான் பார்த்த அளவில் அவள் அவ்வளவு மன உறுதி இல்லாதவள் போலத் தெரிகிறது. இப்போது என்ன ஆவாளோ?'' என்று பரிதாபப்பட்டான். ''சரி போகலாமா?'' என்று எழத் தொடங்கினான்.

''பொறுங்கள்'' என்றாள் தேவி அழாத குறையாக. ''நீங்கள் சொல்வது மிரட்டல் மாதிரி... மாதிரி...'' என்று திணறினாள்.

''என்னவென்று வேண்டுமானாலும் வைத்துக் கொள். நானும் இப்போது திருமணம் என்று துடிக்கவில்லை. நம் இளையவர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கும் சிக்கலுக்கு ஒரு விடை தேடினேன். இது கிடைத்தது. அதோடு நீயும் பார்ப்பதற்கு அழகற்றுத் தெரியவில் லை'' என்றான் நமட்டுச் சிரிப்போடு.

''அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு என்னை மணப்பா னேன்? வேறு யாரையாவது... பணத்துக்காக உங்களை வட்டம் போடுகிறார்களே அவர்களில் யாரையாவது மணப்பதுதானே'' என்றாள் தேவி சினத்துடன்.

''செய்யலாம், ஆனால் அவர்களில் யாரைப் பார்த்தாலும் எனக்குக் குமட்டுகிறதே. அதோடு உனக்கும் மணமாக வேண்டும் அல்லவா? ஒருவேளை உன்னை யாரேனும் சுற்றுகிறார்களா அவர்களில்..''

''அப்படி யாரேனும் என்னைச் சுற்ற வந்தால் கன்னம் பழுத்து விடும்'' என்றாள், தேவி சூடாக. திடீரென்று ஏதோ நினைவு வந்தது. உங்கள் 'தினு' சாரி - அதுதான் உங்களோடு மதுரைக்கு வந்தாளே அவள் என்ன ஆனாளாம்?''

அவன் ஸ்டைலாகத் தோளைக் குலுக்கினான். ''என்ன செய் வது? அவள் என்னைவிட வெளிநாடு மேல் என்று விட்டாளே!''

பேசிக் கொண்டே தினகர் எங்கோ ஏறிட்டுப் பார்த்தான். உடனே மந்திரத்தில் நடப்பது போல் பணியாள் இரு அழகிய கோப்பைகளில் பாதாம் கீருடன் வந்தான்.

''இன்று இந்தத் திருமணப் பேச்சைத் தொடங்கி விட்டேன். இப்போது இனிப்பாகச் கொஞ்சம் பாதாம் கீர் குடிக்கலாம். பிறகு இரவெல்லாம் சிந்தித்துப் பார். நாளை எனக்கு பதில் சொல், டெலிபோனில் சொன்னால் கூடப் போதும்'' என்றான், தினகர்.

அவன் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டு, தேவியை ஒன்று எடுத்துக் கொள்ளச் சொன்னான்.

இனிப்பா அது? தேவிக்கு வாய் கசந்தது, தொண்டை கசந்தது, வயிற்றினுள்ளும் வேப்பிலை போலக் கசந்தது.

## 15

அன்று வீடு திரும்பும் போது காரில் முழு அமைதி நிலவியது.

தேவி வீட்டு முன்னால் காரை நிறுத்தினான் தினகர். இறங்க முயன்ற தேவியைத் தடுத்துச் சொன்னான். ''நாளை காலை வீட்டுக்கு டெலிபோன் செய். ஒன்பது மணி வரை வீட்டில் இருப்பேன். அதுவரை நீ யோசிக்கலாம். ஆனால், ஒன்று திரும ணம் என்றால் இருவருக்கும் சேர்த்துதான். மற்றபடி ஒற்றைத் திருமணம் நடக்காது. புரிகிறதா?'' என்றான்.

தேவி பதில் சொல்லாமல் இறங்கிச் சென்றாள்.

அவள் மாடியேறிச் சென்று வீட்டினுள் செல்லும் வரை காத்திருந்தான் தினகர். பிறகு காரைக் கிளப்பிக் கொண்டு வெகு வேகமாகச் சென்று விட்டான்.

ஆவலுடன் எதிர்கொண்டாள் செல்வி. அவளைக் கவனியாதது போல் தாண்டிக் கொண்டு உள்ளே சென்றாள் தேவி. ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக ''சசி அக்கா வரவில்லையா?'' என்று கேட்டாள்.

''ஏதோ பிரசவக் கேசாம், வர இயலாது என்று சொல்லி அனுப்பினார்கள்...'' என்றாள் செல்வி.

தேவி அங்கும் இங்கும் பரபரவென்று நடந்தாள். எதையோ எடுத்தாள். எங்கோ வைத்தாள். பொருளற்று என்னவோ செய்தாள்.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்தாள். செல்வி பிறகு ''என்னக்கா ஆயிற்று!'' என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

தேவி திரும்பி அவள் முகத்தைப் பார்த்தாள். இவளிடம் என்ன சொல்வது? பேசவே வாய் எழவில்லை.

அதற்குள் செல்வி அஞ்சி விட்டாள், ''என்னக்கா! என்ன ஆயிற்று. அக்கா! முடியாது என்று சொல்லி விட்டாரா? நான் பயந்தது போலவே ஆகிவிட்டதா? இனி நான் என்ன செய்வேன்'' என்று பதறிக் கதறத் தொடங்கி விட்டாள். கண்ணீர் மலை மலையாக வழிந்தது.

இந்தத் துன்பத்தை ஒருகணம் கற்பனை செய்து பார்த்தால் கூடப் போதுமே, பிறகு முழுக்க முழுக்க கயவனாக இருந்தாலும் ஒரு பெண்ணை அவனால் ஏமாற்ற முடியுமா என்று தோன்றியது தேவிக்கு.

தன் வேதனையை மறைத்துக் கொண்டு ''இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்து கொண்டு கண்ணீர் விடுவதில் உனக்கு நிகர் நீயேதான்'' என்றாள் விளையாட்டாக.

பளிச்சென்று செல்வியின் கண்களில் நம்பிக்கை ஒளி தோன்றியது.

''ஆமாம்... அவர் அவர் சரியென்று சம்மதம் தெரிவித்து விட்டார்...'' என்றாள் தேவி. ''நானும் என் சம்மதத்தை நாளை கூறியாக வேண்டும்'' என்று இரும்பெனக் கனத்த இதயத்திடம் கூறினாள்.

''அக்கா!'' எல்லையில்லாத ஆனந்தத்துடன் தேவியைக் கட்டிக் கொண்டாள் செல்வி. கார்கால மின்னல் போல் அவள் கண்ணீரின் இடையே அரிசிப் பற்கள் பளீரென்று ஒளிர்ந்தன.

''மெல்லடி மெல்ல.. என் எலும்பெல்லாம் நொறுங்கி விடப் போகின்றன...!'' என்றபடி மெல்ல தன்னை விடுவித்துக் கொண்டாள் தேவி. தேவியால் தங்கையின் மகிழ்ச்சியில் ப்ங்கு கொள்ள முடியவில்லை. எழுந்தாள். ''வா, இன்றேனும் கொஞ்சம் சாப்பிடு '' என்று செல்வியை அழைத்துச் சென்றாள்.

தட்டில் சோறு பிசைந்து அவள் கையில் ஒவ்வொரு கவளமாக உருட்டி வைத்தாள். பல நாட்களுக்குப் பின் செல்வி நன்றாக உண்ணுவதைத் திருப்தியுடன் கண்டாள். தட்டு காலியாயிற்று. கையையும் தட்டையும் கழுவினாள்.

''அக்கா, நீ சாப்பிடவில்லையே!''

''நான் நெஞ்சு ம்ுட்ட உண்டாயிற்று'' என்றாள், தேவி.

''தினகருடனா அக்கா!'' என்றாள் செல்வி. உடனே வாயைப் பொத்திக் கொண்டாள். ''அவருக்கு அண்ணா, அவர் பெயரைச் சொல்லி விட்டேன் பார்'' என்ற வாயில் கையால் போட்டுக் கொண்டாள்.

தேவிக்கு ஒன்றும் ரசிக்கவில்லை. ''சரி சரி, வா படுத்து உறங்கு..'' என்றாள்.

சிறு குழந்தை போலப் படுத்தும் தூங்கி விட்டாள் செல்வி. எல்லையற்ற நிம்மதி அந்த இளம் முகத்தில் படர்ந்திருந்தது. இந்நிம்மதிக்கு விலையாக எதையும் — ஆம், எதையுமேதான்... தரலாம் என்று எண்ணிக் கொண்டாள் தேவி.

மறுநாள் தேவி எழும்போது மணி ஏழாகி விட்டது. கண்ணைத் திறக்கும் போதே சிட்டுக்குருவி போலத் தங்கை சுற்றுவது

தெரிந்தது. வாயில் ஏதோ பாட்டு வேறு. கண்களில் கனவின் மிதப்பு. முகத்தில் அன்றலர்ந்த மலரின் பூரிப்பு. சற்று நேரம் அவளையே பார்த்துக் கொண்டு இருந்து விட்டு படுக்கையை விட்டு எழுந்தாள் தேவி.

அவள் எழுவதற்காகக் காத்திருந்தவள் போலச் செல்வி ஓடி வந்தாள், ''எழுந்தாயா அக்கா? காபி கொண்டு வரவா?''

''மெள்ளடி மெள்ள, ஏன் அப்படி ஓடுகிறாய்? சசி அக்கா சொன்னது நினைவில்லையா? இன்னுமா தெரியாது?'' என்று சிடுசிடுத்தாள், தேவி.

செல்வியின் முகம் விழுந்து விட்டது. ''காப்பி குடிக்கிறாயா அக்கா!'' என்று மெல்லக் கேட்டாள்.

தேவி தன்னையே திட்டிக் கொண்டாள். செல்வி எதைக் கண்டாள். பாவம், இவள் மனதில் புயல் என்றால் அவளது உற்சாகத்தை குறைப்பானேன்! அவளாவது முழு மகிழ்ச்சியுடன் இருக்கட்டுமே.

''நான் இன்னமும் பல் துலக்கவில்லையே, துலக்கின பிறகு நானே எடுத்துக் கொள்கிறேன். நீ குடித்தாயா?'' என்று சற்று மிதமான குரலில் கேட்டாள். கூடவே ''ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் பார், அதனால் தான் அதட்டி விட்டேன்...'' என்று சமாதானம் சொன்னாள்.

செல்வியின் முகம் பளீரென்று மலர்ந்தது. ''என் செல்ல அக்கா'' என்று கொஞ்சினாள். ''அக்கா இன்று இனிப்பாக பாயாசம் செய்யலாமா?''

தேவியின் முகம் சட்டென மாறிவிட்டது. முதல் நாள் உண்ட இனிப்பு நினைவு வந்தது. முகத்தைத் தங்கையிடம் காட்டாமல் மறைத்தாள். ''ஆமாம், இப்போது நீ இனிப்பு உண்பாயா?'' என்று கேலி செய்வது போல் பேசிக் கொண்டே நடந்தாள்.

''அடடே... செல்லிம்மா... நான் இன்று அலுவலகம் செல்ல வேண்டுமே, மறந்து போய்த் தூங்கி விட்டேனே..'' என்று அவசரமாகப் பல் துலக்கச் சென்றாள்.

நேரம் செல்லச் செல்ல தேவிக்கு குப்குப்பென்று ஏதோ நெஞ்சை அடைத்தது. வயிறு ஒரேயடியாகக் காலியாகி விட்ட பிரமை உண்டாயிற்று. சசியிடம் சென்று எல்லாம் சொல்லலாமா என்று யோசித்தாள். ஒரு மூளைக்கு இரு மூளை வேலை செய்தால் நல்லதுதானே..

ஆனால் வேலை செய்து பயன் இல்லையே. இருப்பது இரண்டு வழி. ஒன்றில் செல்வி வாழ்வாள் அன்றி அடுத்ததைத் தேர்ந்தால், அவள் வாழ்நாள் எத்தனை நாள் என்று எண்ண வேண்டியதாகி விடும். செல்வி நல்ல வாழ்வு வாழ வேண்டுமானால் முக்கியமாக அவமானம் இல்லாமல் தப்ப வேண்டுமானால், தேவி அங்கே களப்பலி ஆகியே தீரவேண்டும். தேவியா? செல்வியா? இரண்டில் ஒன்றுதான் முடிவு. ஒரு பெரிய நன்மைக்காக நால்வரின் வாழ்வுகூடப் பலியாகலாம். பாண்டவரின் வெற்றிக்காக அரவான் களப்பலியாகவில்லையா?

அலுவலகத்துக்கு சீக்கிரம் செல்ல வேண்டும் என்று செல்வியிடம் பொய் சொல்லி விட்டு தேவி வேகமாகக் கிளம்பினாள். ஒரு பொது டெலிபோன் பெட்டியை அடைந்தாள்.

காசைப் போட்டு தினகரின் வீட்டு டெலிபோன் எண்களைச் சுழற்றினாள். ஒரு தடவை 'ரிங்' போகுமுன் யாரோ டெலிபோனை எடுத்தார்கள். தினகரது கம்பீரமான குரல் கேட்டது. ''அலோ, தினகர் பேசுகிறேன்...''

சில கணங்கள் தேவியால் பேச முடியவில்லை. அதற்குள் பொறுமையிழந்தவன் போல அவன் ''அலோ... அலோ...'' என்று படபடத்து விட்டான்.

''நான்... நான் தான் பேசுகிறேன்..''

''உம் தெரிகிறது...''

''நேற்று.. நேற்று.. சொன்னீர்களே, அது... அதற்குச் சம்மதம் என்று சொல்ல வந்தேன்...''

கண்களை இறுக மூடிக் கொண்டு எப்படியோ சொல்லி முடித்து விட்டாள். மீள முடியாதபடி மனதுக்குப் பிடிக்காத பந்தத்தில் சிக்குகிறோம் என்ற தவிப்பும், எப்படியோ ஒரு முடிவு ஏற்பட்டாகி விட்டது என்ற நிம்மதியும் ஒருங்கே தோன்றின.

ஆனால் சற்று நேரம் எதிர்முனையில் சத்தம் இல்லாது போகவே தேவி பதறிப் போனாள்.

''நீங்கள்... நீங்கள் அங்கே தானே இருக்கிறீர்கள்...'' என்றாள் பதட்டத்துடன்.

''ஆமாம்'' என்றது அவனது குரல். ''நான் இன்னும் சற்று நேரத்தில் அங்கே உன் வீட்டுக்கு வருகிறேன். நாம் இருவருமாக...''

''இல்லை இல்லை'' என்று தேவி அவசரமாக மறுத்தாள். அவன் முகத்தை இப்போது அவளால் எப்படிப் பார்த்துப் பேச முடியும்? நான் அலுவலகம் செல்ல வேண்டும்...''

''ஒக்கே'' அவளது தயக்கத்தை உணர்ந்தவன் போல தினகர் சரியென்றான். மாலையில் பார்க்கலாம் உன் அலுவலகத்துக்கு வருகிறேன்.''

தேவி ஒரு பதிலும் சொல்லாமல் போனைக் கீழே வைத்தாள். 'என் அலுவலகம் அவனுக்.. அவருக்கு எப்படித் தெரியும்? சும்மா எங்கேனும் அலையட்டும் என்று ஒரு குரூர திருப்தியுடன் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் மாலையில் அலுவலகத்தை விட்டு வெளியே வந்த போது அவள் திகைத்துப் போனாள். தினகர் காருடன் வெளியே காத்துக் கொண்டிருந்தான்!

காரை அவள் அருகே கொண்டு வந்து நிறுத்தி கதவைத் திறந்து விட்டு ''ஏறிக் கொள்'' என்றான்.

உடன் பணியாற்றும் ஊழியர்களின் குறுகுறு என்ற பார்வையில் தேவி குன்றிப் போனாள். இவன் எப்படி இந்த அலுவலகத்தைக் கண்டுபிடித்து வரலாம் என்று ஆத்திரம் வந்தது. ''நான் வரவில்லை, நான் சசி அக்காவைப் பார்க்கப் போகவேண்டும்...''

''அதற்கென்ன? நாம் இருவருமாகவே அங்கே போகலாம்'' என்றான், அவன் புன்னகையோடு. அதோடு நிற்கவில்லை. அவனுடைய இடது கை இயல்பாக நீண்டு வெகு எளிதாக அவளைக் காரினுள் இழுத்தது. இதை எதிர்பாராத அவள் தொப்பென அவன்

அருகில் முன் இருக்கையில் விழுந்தாள். அவளை உள்ளே இழுத்த கையோடு கதவைச் சாத்திக் கொண்டு காரையும் கிளப்பி விட்டான் அவன்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள், தேவி. ''இதெல்லாம் என்ன?'' என்று சினத்துடன் சீறினாள்.

''பின்னே அத்தனை பேர் பார்க்க உன்னுடன் தர்க்கம் செய்து கொண்டு இருக்க வேண்டும் என்கிறாயா? நேற்றுத் தான் 'பாரடை' சில் இலவச நாடகம் நடத்திக் காட்டியாயிற்றே இன்னமுமா அந்த ஆசை விடவில்லை?'' என்றான் அவன், கிண்டலாக.

அவன் பேச்சின் உண்மையை ஒப்புக் கொள்ள தேவிக்கு மனம் வரவில்லை. ''இப்போது எங்கே போகிறோம்?'' என்று பேச்சை மாற்றினாள்.

அதைப் புரிந்து கொண்டவன் போல அவன் சிறுநகை பூத்தான், ''திருமண அழைப்பிதழ் மாடல் கொடுக்க..''

''அழைப்பிதழா? அதற்குள்ளாகவா?'' என்று திடுக்கிட்டாற் போலக் கேட்டாள் தேவி.

''ஆமாம், தேவி, செல்விக்காக நம் திருமணத்தை விரைந்து நடத்த வேண்டி இருக்கிறது அல்லவா? அதனால் எல்லாமே விரைவாகப் பார்க்க வேண்டியிருக்கிறது,'' என்றான் அவன், வெகு சாதாரணமாக.

''அழைப்பிதழ்'' அதிர்ச்சி தேவிக்கு இன்னமும் தீரவில்லை. இந்தப் பேச்சே இவ்வளவு அதிர்ச்சியாக இருக்கிறதே, திருமணமே ஆவது என்றால்?

''வந்து...'' என்று இழுத்தாள்.

''வந்து என்பது என் பெயரா?'' என்று முறுவல் செய்தான், தினகரன்.

''மிஸ்டர் தினகர்..''

அவனது முறுவல் சிரிப்பாக மாறியது. ''மிஸ்டர் என்றா வருங்காலக் கணவனை அழைப்பார்கள்!''

''எப்படி அழைத்தால் என்னவாம்? உங்களைக் கூப்பிடுகி றேன் என்று உங்களுக்குப் புரிகிறது. எனக்குத் தெரிகிறது, அது போதாதா?'' என்று வெடுவெடுத்தாள் தேவி.

''போதாதே தேவி, உங்கள் இருவரையும் கண்டு நாங்கள் இருவரும் காதல் கொண்டு விட்டதாக அம்மாவிடம் சொல்லியி ருக்கிறேன். அதனால் இந்தக் கடுப்பு, முறைப்பு எல்லாம் கொஞ்சம் மறைவாகவே வைத்துக் கொள். மற்றவர் முன்னே இந்த மாதிரி நாயும் பூனையுமாக நின்றோமானால் நன்றாக இராது'' என்றான், தினகர்.

## 16

பிறகு எல்லாமே கனவின் பொய்மையோடு விரைந்து நடந்தன.

எல்லாமே சினிமா போலத் தோன்றியது. சினிமாவில் தான் முதல் காட்சியில் சிறிய செடி காட்டுவார்கள். அந்தக் காட்சியில் அந்தச் செடி பூத்துக் குலுங்கும். அதுபோல தினகர் திருமணப் பேச்சை எடுத்தாற்போல இருந்தது. இதோ விடிந்தால் திருமணம் என்ற அளவில் நெருங்கி விட்டது.

திருமணத்துக்குப் பின் தினகர் ஏமாற்றி விடக் கூடாதே என்று இரண்டு திருமணத்தையும் ஒன்றாக நடத்த வேண்டும் என்று நிபந்தனை விதித்தாள். தினகர் அதற்கு மறுப்புச் சொல்லாமல் ஒப்புக் கொண்டது மட்டும் அல்ல, உடனடியாக தன் தம்பி மனோகரையும் வரவழைத்தான். செல்வியின் திருமணம் எவ்வளவு அவசரம் என்பதை தினகரும் உணர்ந்து இருந்தான் போலும்.

இந்த விஷயத்தை சசியிடம் சொல்வது தேவிக்கு மிகவும் கடினமாக இருந்தது. தேவி சொன்னதும் முதலில் அவள் நம்பவே இல்லை, ''என்னையே முட்டாளாக்கப் பார்க்கிறாயா? அவரைப் பாம்பு பல்லியோடு ஒப்பிட்டவள், 'அவன் இவன்' என்றவள், இன்று காதலிக்கிறேன், கல்யாணம் செய்யப் போகிறேன் என்கி

றாயே, நம்புவதற்கு எனக்குப் பைத்தியமா? அல்லது நம்பச் சொல்லும் உனக்குப் பைத்தியமா?'' என்று ஒரேயடியாக அடித்துப் பேசினாள்.

மிக மிகச் சிரமப்பட்டு அவளை நம்ப வைத்தாள் தேவி. அவள் மூலமாகவே செல்வியிடம் தெரிவித்தாள். செல்விக்கு ஒரே கொண் டாட்டம். ''நாம் பிரிய வேண்டியது இருக்குமே, நீ தனியாக எப்படி இருப்பாய் என்று வருந்திக் கொண்டு இருந்தேன். அக்கா, இனி அந்தக் கவலையில்லை, வாழ் நாள் முழுவதும் நாம் சேர்ந்தே இருக்கலாம்'' என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தாள். ''அக்கா, நீ எனக்குப் பரிசு கொடுக்க வேண்டுமாக்கும். நான் இல்லையென் றால் நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்ப்பதெங்கே? பழகுவது எங்கே? மையல் கொண்டு மணப்பதுதான் எங்கே? எனக்கு நன்றியாவது சொல்லுங்கள்' என்று ஆர்ப்பாட்டம் செய் தாள்.

''முழுக்க முழுக்க இந்த நன்றி உனக்குத்தாண்டி..'' என்று வறட்சியாக நகைத்தாள் தேவி. ''என் வாழ்நாள் முழுவதும் அந்த நன்றிக்கடன் செலுத்தப் போகிறேனே'' என்று வேதனையுடன் நினைத்தாள்.

தாயில்லாப் பெண்கள் என்பதால் சசியின் தாயாரே பொறுப் பேற்றுக் கொண்டார்கள். அவர்களின் வீட்டில் தான் தினகரின் தாயார் வருங்கால மருமக்களைப் பார்க்க வந்தார்.

தினகரைப் போலவே கூரிய பார்வை புவனேசுவரி அம்மா ளுக்கு. அந்தப் பார்வை ஒற்றுமையைக் கண்டதுமே தேவிக்கு அவரைப் பிடிக்காமல் போயிற்று. அந்தப் பார்வையுடன் இரு பெண்களையும் ஏற இறங்கப் பார்த்தார். தேவிக்குச் சிலிர்த்துக் கொண்டு வந்தது. தன்னையும் அறியாமல் தலையை நேராக நிமிர்த்திக் கொண்டு நின்றாள்.

''உம் அதென்னவோ? இந்தக் காலத்தில் பிள்ளைகளுக்கு எதைக் கண்டு மயக்கம் வருகிறது என்பதே புரியவில்லை... ஊ...ம்....'' என்று அவர் இழுத்ததும் தேவிக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

அவளை அவர் கவனிக்கவே இல்லை. தன் போக்கில் பேசினார். பெரிய பெரிய இடங்களில் இருந்து மகாமகா அழகுடன் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு வந்தனராம். ஏன் அவரது தம்பி மகள் கூட எவ்வளவு அழகி, எவ்வளவு புத்திசாலி அதையெல்லாம் விட்டு இவன் புத்தி போன போக்கு தினகர் அப்படிச் சொன்ன பிறகு அவன் சொல்லுக்கு அவர்கள் வீட்டில் அப்பீலே கிடையாதாமே. அதனால்தான், இவரும் சம்மதித்தாராம், இத்யாதி... இத்யாதி...

ஒரு தடவையிலே தேவிக்கு காது புளித்துப் போயிற்று, வேண்டா வெறுப்பாக அவரை வணங்கி எழுந்தாள்.

அவர் சென்றபின் செல்வியிடம் தனிமையில் வாணலியில் இட்ட கடுகாய்ப் பொரிந்தாள் தேவி. ''பாரேன் அந்தம்மாளின் கர்வத்தை, நம்மிடம் நல்லதாக ஒன்றுமே இல்லாதது போலப் பேசுகிறார்களே, என்னவோ நம்மை குப்பைக் கூடையில் இருந்து பொறுக்கின மாதிரி...''

தன் கோபத்தின் எதிரொலியைத் தங்கையிடம் எதிர்பார்த்த தேவி ஏமாந்து போனாள்.

''அவர்கள் எவ்வளவோ பணம், அந்தஸ்து என்று எதிர்பார்த்திருப்பார்கள். சொந்தக்காரப் பெண்ணை மருமகளாகக் கற்பனை பண்ணியிருப்பார்கள். இப்போது நிரம்பவும் ஏமாற்றமாகி விட்டது. சொந்தம் சொல்லித் தீர்த்துக் கொள்கிறார்கள். அவ்வளவு தானே, அக்கா'' என்று வெகு அமைதியாக சொன்னாள், செல்வி.

''அதற்காக நம்மை மட்டம் தட்டலாமோ?''

''வேறு யார் அக்கா? அவரைப் பெற்ற அம்மா, நமக்கும் தாயாரைப் போல, பார்க்கப் போனால் தெய்வத்தைப் போல அவர்கள். அவர்கள் ஒரு வார்த்தை சொன்னால் நாம் தேய்ந்தா போவோம்'' என்று பயபக்தியோடு பேசினாள், செல்வி.

தேவி அதிர்ந்து போனாள். ''போகிற போக்கைப் பார்த்தால் அந்த மாமியாரம்மாள் நிற்கும் திசையெல்லாம் செல்வி விழுந்து கும்பிடுவாள் போலிருக்கிறதே?''

''என்ன தேவி யாரிடம் இவ்வளவு கோபம்'' என்றபடி, அந்த அம்மாவை அனுப்பிவிட்டு உள்ளே வந்தாள் சசி.

சட்டென முகத்தில் மலர்ச்சியைப் பூசிக் கொண்டாள் தேவி. ''சும்மாவே இருப்பது போரடிக்கிறது அக்கா. எப்போதடா இதெல்லாம் முடியும் என்று இருக்கிறது'' என்றாள்.

''அடேயப்பா, திருமதி தினகர் ஆவதற்கு அவ்வளவு அவசரமா?'' என்று கேலி செய்தாள் சசி.

எரிச்சலைக் காட்ட முடியாமல் ''போங்கள் அக்கா'' என்று தலையைக் குனிந்துக் கொண்டாள், தேவி.

மங்களமாகப் பொழுது விடிந்தது.

குறித்த நேரத்தில் தேவி, செல்வி இருவர் கழுத்திலும் பொற்றாலி ஏறிற்று.

மாலையும் கழுத்துமாக இரு ஜோடிகளும் புவனேசுவரியை வணங்கி எழுந்தனர்.

குனிந்து எழுந்தபோது வைரப் பதக்கம் ஒருபுறமாக மாறி விழுந்தது. புவனேசுவரி அம்மாள் அதைச் சரி செய்துவிட்டார். அதோடு நின்றிருக்கலாம். மாறாக, இதெல்லாம் அணிந்து பழக்கம் இல்லை அல்லவா! கண்டபடி விழவிட்டு விடுகிறாய், மற்ற நகைகளோடு வைரத்தை உராய விடாமல் க்வனமாகப் பார்த்துக் கொள்'' என்றார்.

தேவிக்குக் குப்பென்று சிவந்தது. நகை நட்டைக் கண்டு அறியாதவள் என்று குத்திக் காட்டுகிறார்களாக்கும்'' இதழ்களை அழுத்த மூடிக் கொண்டு நின்றாள். அவள் காதோரமாகக் குனிந்து ''முகத்தை ஏன் இப்படி வைத்துக் கொண்டிருக்கிறாய் தேவி? செல்வி கவனிக்கிறாள் பார், புன்னகையோடு இரு'' என்று கிசுகிசுத்தான் தினகர்.

''அதற்குள் என்ன அண்ணா ரகசியம்?'' என்று கேலியாகக் கேட்டான் மனோகர்.

'செல்வியிடம் கேள்' என்று நகைத்தான் தினகர்.

செல்வி நாணத்துடன் சிரித்தாள்.

தேவிக்கு ஒன்றும் ரசிக்கவில்லை. கடனே என்று அவளும் சிரித்தாள்.

இரவிலும் புவனேசுவரி ஒன்று சொன்னார். முத்து வளையலைப் போட்டுக் கொண்டே படுத்து விடாதே. முத்து உதிர்ந்து விடும்'' என்றார், உரக்க. பிறகு ''ஒன்றும் இல்லாததுகளைக் கொண்டு வந்து விட்டு எல்லாமே சொல்ல வேண்டியிருக்கிறது' என்று நன்றாக காதில் விழும்படியாக முணுமுணுத்து விட்டுப் போனார்.

தேவி உதட்டைக் கடித்துக் கொண்டு உள்ளூரக் குமுறினாள். ஒன்றும் வெளியே காட்டவில்லை. உள்ளூர அடைத்துக் கொண்டு படியேறினாள்.

தினகரின் அறையும் மனோகரின் அறையும் மாடியில் எதிரும் புதிருமாக இருந்தன.

தினகரின் அறைக்குள் வந்ததும் தேவியின் விழிகள் அந்த அறையை ஒருமுறை வலம் வந்தன.

அலங்காரம் செய்யப்பட்டு இருந்த இரட்டைக் கட்டிலும் அதன் அருகே நின்ற தினகரும் அவள் கண்ணில் பட்டதாகவே தெரியவில்லை.

ஒருபுறமாக மேசை ஒன்று இருந்தது. அதன் அருகே சென்றாள். மடமடவென்று கழுத்திலும் கையிலுமாக அடைத்துக் கொண்டு இருந்த அணிகளைக் கழற்றி மேசை மேல் எறியலானாள்.

சற்று பொறுத்தான், தினகர். பிறகு ''தேவி அவை நகைகள், தங்கமும் வைரமும்'' என்றான் மெதுவாகவே.

காத்திருந்தவள் போல அவன் புறமாகத் திரும்பினாள் தேவி. ''அப்படியா? தங்கமும் வைரமுமா. நான் பித்தளையும் கண்ணாடிக் கல்லும் என்றல்லவா நினைத்தேன்'' என்றாள் கிண்டலாக, மீண்டும் நகைகளைக் கழற்றி எறியலானாள்.

''செல்வத்திடம் மரியாதை காட்ட வேண்டும் தேவி அல்லது அது சென்றே விடும்'' என்று மீண்டும் இதமாகவே கூறினான் தினகரன்.

''நீங்கள்தான் போகவிட மாட்டீர்களே... பிறகு எனக்கென்ன கவலை?''

அவளையே பார்த்தபடி பேசாமல் நின்றான் தினகர். புருவங் கள் இடையே சிறு சுருக்கம் விழுந்தது.

கடைசிச் சங்கிலியில் கைவைத்தாள் தேவி. அது தாலி என் பதை கண்டாள். ''ஓ..'' என்று கையை எடுத்து விட்டாள். பிறகு ஆத்திரத்துடன் தினகரின் பக்கம் திரும்பினாள்.

''நாங்கள் ஏழைகள் என்பதை மறைத்தோமா! உங்கள் அம்மா வும் அது தெரிந்துதானே திருமணத்துக்கு ஒப்புக் கொண்டார்கள். பிறகு ஏன் திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டுகிறார்கள்?'' என்று சினத்துடன் கேட்டாள்.

தேவியின் செய்கையின் காரணம் இப்போதுதான் தினகருக்குப் புரிந்தது. மெல்ல நகைத்தான். ''இதற்காகவா தேவி எறிந்தாய்? போகிறது. அவர்கள் ஏதேதோ கற்பனை செய்து இருப்பார்கள். இப்போது மாறிவிட்ட எரிச்சலில் ஏதாவது சொல்லியிருப்பார்கள். அதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாதே'' என்றான் சமாதா னமாக.

கொஞ்ச நேரம் அமைதி நிலவியது.

கலீர் என்ற சிரிப்புச் சத்தம் அந்த அமைதியைக் கலைத்தது. செல்வியின் மென்மையான சிரிப்புடன் மனோகரின் ஆண்மைச் சிரிப்பும் கலந்து ஒலித்தது.

''தேவீ'' என்று அழைத்து, ஒருவித எதிர்பார்ப்புடன் தன் மனைவியை நெருங்கினான் தினகரன்.

## 17

தினகரின் அழைப்பு தேவியின் காதில் விழவில்லை. அவள் மனம் செல்வியின் சிரிப்பில் பதிந்திருந்தது. செல்வியால் எப்படி சிரிக்க முடிந்தது? செல்வியிடம் தானே அந்த அம்மா (அத்தை என்று நினைக்க இன்னமும் மனம் வரவில்லை) அப்படிச் சொன்னார்கள். அதற்குள் மறந்து விட்டாளா? இல்லை என்றால் இப்படிச் சிரிக்க முடியுமா?

படுக்கையில் அமர்ந்து இருந்த மனைவியை நெருங்கினான் தினகர்.

''நடந்தது எல்லாம் கடந்த காலம் தேவி, எப்படியோ இன்று நாம் கணவனும் மனைவியுமாக ஆகிவிட்டோம், இனி பழையதை மறந்து புது வாழ்வு தொடங்குவோம்'' என்று தேவியின் தோளைப் பற்றினான், தினகர்.

அவன் தொட்ட பிறகுதான், தேவியின் நினைவு செல்வியிடமிருந்து பிரிந்து வந்தது. சட்டென அவன் பிடியிலிருந்து விலகிக் கொண்டாள். புருவங்கள் நெரிய 'நீங்கள் சொல்வது புரியவில்லை' என்றாள்.

''இதழ்களில் மட்டும் சிறு புன்னகையுடன் எதிர் கதவுப் பக்கம் சுட்டிக் காட்டினான் தினகர். ''அந்த சிரிப்பை நாமும்...''

''அதெப்படி முடியும்?'' என்று குறுக்கிட்டாள் தேவி. ''அவர்கள் காதலர்கள், என்னென்னவோ கஷ்டப்பட்டுக் கல்யாணமும் செய்தவர்கள். அவர்களும் நாமும் ஒன்றா? கடனே என்று என்னை மணந்தவர் நீங்கள். விதியே என்று கழுத்தை நீட்டியவள் நான் எனக்கு உங்களிடமோ உங்களுக்கு என்னிடமோ எந்தப் பற்றும் கிடையாதே, இல்லாத ஒன்றை இருப்பதாக எப்படி ஏற்பது? அந்த மாதிரி நடிக்க நான் தயாராகவில்லை'' என்று முடித்துவிட்டாள், தேவி.

அத்தோடும் நிற்கவில்லை. கட்டில் மெத்தை மேல் கிடந்த விரிப்பை எடுத்துத் தரையில் விரித்தாள். ஒரு தலையணையும் எடுத்துப் போட்டாள்.

தானும் தொப்பெனப் படுக்கையில் விழப்போனவள் சற்று தயங்கினாள். குனிந்து சரிகைச் சேலையைப் பார்த்தாள். ''உறுத்தித் தொலைக்குமே'' என்று எரிச்சலோடு முணுமுணுத்தாள்.

''உன் பொருட்கள் எல்லாம் இங்குதான் இருக்கின்றன'' என்று ஒரு பெரிய பீரோவைத் திறந்து காட்டினான் தினகர்.

பீரோவின் உள்ளே அடுக்கடுக்காய்ப் பல சேலைகள், நகைப் பெட்டிகளும் கூட.

இதழ்கள் இகழ்ச்சியாக வளைய, ஒரு சாதாரணச் சேலையை உருவிக் கொண்டு குளியல் அறைக்குள் சென்றாள், தேவி. அங்கே முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு வந்தாள். தினகர் நிற்பதைக் கவனியாதவள் போல் தொப்பென்று தன் விரிப்பில் விழுந்தாள்.

''தேவி....'' என்று இன்னமும் தயங்கினான், தினகரன்.

வேகமாக எழுந்து உட்கார்ந்தாள் தேவி. ''என்ன என்ன விஷயம்? என்னைப் பொறுத்தவரையில் உங்கள் தாலிக் கயிறு மந்திரம் இன்னமும் நடக்கவில்லை. ஒரு வேளை உங்களிடம்?'' என்று நிறுத்திவிட்டு இளக்காரமாகப் பார்த்தாள்.

''நீ மெத்தையில் படுத்துக் கொள், நான் விரிப்பை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்வதற்காகத்தான் அழைத்தேன். ஆனால், நீ வேறு ஏதோ நினைத்துக் கொண்டாய் போலிருக்கிறதே'' என்றான் தினகர் கேலியாக.

தேவியின் முகத்தில் அசடு வழிந்தது. சமாளித்துக் கொண்டு, ''பரவாயில்லை பரவாயில்லை எனக்கு இது பழக்கம்தானே, உங்களுக்குத்தான் பஞ்சு மெத்தை இல்லாவிட்டால் உடம்பு கட்டையாய் உறுத்தும்'' என்று கடைசி அம்பை வீசினாள் தேவி. மேலே பேச்சுக்கு இடம் வைக்காமல் கண்களை இறுக மூடிக் கொண்டு வேறுபுறமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

தினகரும் மேலே அக்கறை அற்றவன் போல் விளக்கை அணைத்துவிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

நினைவு தெரிந்த நாளில் இருந்து ஓர் ஆண்மகன் இருந்த அறையில் தேவி படுத்து உறங்கியது இல்லை. இப்போது அது சங்கடமாக இருந்தது. இனி ஒவ்வோர் இரவையும் இப்படித்தான் கழிக்க நேரும் என்பதை நினைத்தாலே மகா எரிச்சலாய் இருந்தது. திருமணத்தின் அடிப்படையை இலகுவாகத் தகர்த்து விட்டாள். தினகரும் ஒரு பிரச்சினைக்கு விடையாக மட்டுமே அவளை மணந்ததால், அந்தத் தகர்ப்பு எளிதாகிப் போயிற்று, ஆனால் இந்த வெளிப் போர்வை? விரும்பாவிட்டாலும் வேர்வை கொட்டினாலும் அதைப் போர்த்துக் கொண்டுதான் நடமாடித் தீர வேண்டும். இல்லாவிட்டால் மற்றவருக்கு - முக்கியமாகச் செல்விக்கு உண்மை தெரிந்துவிடும். தெரிந்தால் 'தன்னால் தானே இந்த வேதனை' என்று வேதனைப்பட்டுச் சொல்லிச் சொல்லி மாய்ந்து விடுவாள்? அது கூடாதே. எனவே கடனே என்று இதைச் சகித்துக் கொள்ள வேண்டியதுதான். தொலைகிறது.

காலையில் எழுந்ததும் குளித்து உடைமாற்றிக் கொண்டு வெளியே வந்தாள் தேவி.

தினகர் இன்னமும் விழிக்கவில்லை. தேவி யோசனையோடு அவனைப் பார்த்தாள். சுருள் முடி கலைந்து நெற்றியை மறைத்துப் புருவத்தைத் தொட்டது செதுக்கப்பட்டது போன்ற உதடுகளில் அழுத்தம் மறைந்து இயல்பாக இருப்பது மிக அழகாகத் தெரிந்தது. காதல் கொண்ட மனைவி என்றால் இப்போது அந்த இதழ்களில் குனிந்து முத்தமிட்டிருப்பாள் என்று நினைத்தாள். தேவி, நினைக்கும்போதே - தேவியின் உதடுகளில் ஏளனப் புன்னகை ஒன்று தோன்றியது. 'ஒருநாளும் நடக்க முடியாத காரியம்' என்று எண்ணியபடி திரும்பினாள்.

அதற்குள் கதவு தட்டப்பட்டது. தேவி திறந்தாள். வெளியே காபி 'ட்ரே'யுடன் ஒரு பணியாள் மிகுந்த பணிவுடன் நின்றான். அவளிடம் 'ட்ரே'யைக் கொடுத்து விட்டு எதிர் அறைக் கதவைத் தட்டினான். செல்வியைப் பார்க்கும் ஆவலில் தேவி சற்றுத் தாமதித்தாள்.

செல்வி வந்ததும் அவளிடம் ஒரு 'ட்ரே'யைக் கொடுத்து விட்டுப் பணியாள் சென்று விட்டான்.

தங்கையின் ஈரக் கூந்தலைப் பார்த்ததும் ''நீயும் குளித்து விட்டாயாடி'' என்று இயல்பாகக் கேட்டாள் தேவி.

முகம் குபீரென்று சிவக்கத் தலையை மட்டும் ஆட்டி உள்ளே ஓடிவிட்டாள் செல்வி.

''இதில் என்ன வெட்கம்?'' என்று முணுமுணுத்தபடி உள்ளே வந்தாள் தேவி.

கதவைத் தட்டிய ஓசையில் தினகரும் விழித்திருந்தான். தேவி யின் பேச்சும் காதில் விழுந்ததோ என்னவோ இதழ்கடையில் ஒரு விதமான புன்னகையுடன் 'காபி கலந்து வை தேவி. இதோ வந்து விடுகிறேன்' என்று பல் துலக்கச் சென்றான்.

இருவருமாகக் காபி அருந்தி முடிக்கவும் ஒரு பணியாள் அன்றையப் பத்திரிகைகளுடன் வந்தான்.

தினகர் தினப் பத்திரிகையில் ஆழ்ந்தான்.

ஒரு வாரப் பத்திரிகையை எடுத்துப் புரட்டினாள் தேவி. பிறகு அதைப் போட்டு விட்டுத் தொண்டையைக் கனைத்தாள். தினகர் கவனித்ததாகத் தெரியவில்லை. எனவே ''உங்களைத்தான் கூப்பிட் டேன்'' என்றாள்.

''அப்படியா!'' என்று புன்னகையுடன் நிமிர்ந்தான் தினகர். ''சும்மா வெறும் தொண்டையைச் செருமிக் கொண்டாயாக்கும் என்று நினைத்தேன்'' என்றான். ஆனால் அவன் முகமே அவன் சொன்னது பொய் என்பதை எடுத்துக் காட்டியது.

தேவி சற்று கோபத்துடன் ''பின்னே உங்களை எப்படித்தான் கூப்பிடுவது?'' என்றாள்.

'அழகாக அத்தான் என்று அழைப்பது'' என்றான் அவன் மேலும் விரிந்த புன்னகையுடன்.

''அத்தான் மாத்திரம் போதுமா அல்லது நாடகம் போல 'அன்பே ஆருயிரே' என்று அழைக்க வேண்டுமா?'' என்று கிண்டலாக வினவினாள் தேவி.

''அதைவிடப் பழைய நாடகங்களில் மாதிரி 'ஹேபிராண நாதா' என்று மூக்கால் கூப்பிடேன்' என்று சிரியாமல் சொன்னான் தினகர்.

தன்னையும் அறியாமல் கலகலவென்று சிரித்தாள் தேவி. உடனே முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு 'கேட்க வந்ததை விட்டு விட்டேனே நான். எப்போதும் இதே அறையில்தான் இருக்க வேண்டுமா?' என்று கேட்டாள்.

''நீ என்ன பாதுகாப்புக் கைதியா. இந்த ஒரே அறையில் அடைபடுவதற்கு? என்னோடு சம உரிமை உள்ள என் மனைவியாயிற்றே. இந்த வீட்டில் எங்கே வேண்டுமானாலும் போகலாம். ஆனால் ஒன்று அம்மாவின் அறைக்குள் மட்டும் அனுமதியோடு போ..''

''அங்கே நான் போகமாட்டேன்'' என்று அறிவித்தாள் தேவி. ''மேலும் நான் அதைக் கேட்கவில்லை. உங்கள் அறையில்தான் நானும் இருக்க வேண்டுமா என்று கேட்டேன்.''

''அதுவா....'' என்று சிந்தனையோடு அறையின் இடப்புறமாகப் பார்த்தான் தினகர். அங்கே ஓர் அழகிய திரை தொங்கியது. திரையின் பின்னே கதவு இருப்பதும் தெரிந்தது. அதை விரலால் சுட்டிக்காட்டி, ''அங்கே ஓர் அறை இருக்கிறது. ஆனால், அம்மா ஏன் இப்படி ஏற்பாடு செய்தார்கள் என்று தெரியவில்லை. அம்மாவிடம் கேட்கலாம்'' என்று முடித்தான்.

''எதற்குக் கேட்க வேண்டும்? உங்கள் அளவுக்கு உரிமை எனக்கும் உண்டு என்று சற்றுமுன் தானே சொன்னீர்கள். நான் என் சாமான்களை அங்கே எடுத்து வைக்கப் போகிறேன்'' என்று எழுந்தாள் தேவி.

''பொறு தேவி... இந்த வீட்டினுள் அம்மா சொல்லுக்கு விருப்பத்துக்கு எதிராக நடப்பது இல்லை. அதை நீயும் அனுசரித்

துத்தான் ஆகவேண்டும்'' என்று அழுத்தமான குரலில் சொன்னான் தினகர்.

அந்தக் குரலில் திடுக்கிட்டு நின்றாள்.

அவனுக்கு என்ன தோன்றிற்றோ? இதமாகவே ''கொஞ்சம் பொறுத்துக் கொள். அந்த அறை உனக்கும், அதே மாதிரி எதிர் அறை செல்விக்கும் என்றுதான் ஏற்பாடு. ஒருவேளை வேலை முடியவில்லையோ என்னவோ, நான் அம்மாவிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் தினசரிக் குள் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

தேவி செயலற்றுப் போய் அவன் முகத்தை மறைத்த பத்திரி கையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

## 18

''தினகர் தான் சொன்னது போலவே தாயிடம் சொல்லி ஏற்பாடு செய்தான். மறுதினமே தேவியின் பொருட்கள் பக்கத்து அறையில் குடி புகுந்தன. இளம் சிவப்பு வண்ணத்தில் மிகவும் அழகான அறை. தினகரின் அறையைப் போல பெரிது அல்ல. அதில் பாதிஅளவு தான் இருக்கும். ஆனால், அதைப்போலவே இங்கிருந்து பார்த்தாலும் தோட்டம் தெரிந்தது. எல்லா விதத்திலும் தேவிக்கு மிகவும் பிடித்தது, அந்த அறை.

மெல்ல மெல்ல தேவிக்கு இந்த வாழ்வு பழக்கமாயிற்று.

காலைக்கடன்கள் முடிந்ததும் தினகரோடு காபி, பிறகு தோட் டம், அந்தப் பெரிய தோட்டத்தில் சுற்றோ சுற்று என்று சுற்றுவாள். மனதுக்குப் பிடித்த மலர்களைப் பறிப்பாள். பூசையறையில் வைப் பாள். அவள் காதோரமாகப் பெரிதாக ஒரு மலர் வீற்றிருக்கும். அவள் தானாகவே எடுத்துக் கொண்ட வேலை, மலர் அலங்காரம். அங்கங்கே குவளைகளில், நாளைக்கு ஒரு விதமாக அழகுடன், பன்னிற மலர்கள் எழிலுற துளிரும்.

ஒன்றிரண்டு நாட்கள் செல்வியும் தேவியுடன் தோட்டத்தில் சுற்றினாள். பிறகு புவனேசுவரி அதை விரும்பாதது போலப் பேசவே விட்டுவிட்டாள். தேவியிடம் அவர் ஏதும் சொல்லவும் இல்லை. சொன்னாலும் அதைக் கேட்பதாகவும் இல்லை.

தன் மாமியாருக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பது தேவிக்குப் புரிந்தது. சிறிய பெரிய என்று பல விஷயங்களில் அதை தேவி கண்டாள்.

ஒருநாள் மரியாதைக்காகவும் அதே நேரம் பொழுது போவதற்காகவும் மாமியாரிடம் சென்று, காய்கறி வெட்டித் தரட்டுமா?'' என்று வினவினாள் தேவி.

சமையலுக்கு ஆட்கள் இருந்தபோதும் பிள்ளைகளுக்கு விருப்பமானதைத் தன் கையால் தயாரிப்பதில் புவனேசுவரிக்குத் தனி திருப்தி. அவர் சமையல் அறையில் அடிக்கடி நிற்பதைப் பார்த்த பிறகுதான் தேவி உதவி செய்ய முன் வந்ததே.

ஆனால், அந்த அம்மாள் உடனே பதில் சொல்லவில்லை. அருகில் வந்த வேலைக்காரியிடம்,''அந்தப் புடலங்காயை வதக்கலுக்குப் பொடியாக வெட்டி கொண்டு வா'' என்று காயை அவளிடம் கொடுத்து அனுப்பி வைத்தார். பிறகு நிதானமாகத் தேவியின் பக்கம் திரும்பினார். ''அதையெல்லாம் செய்வதற்கு இங்கே ஆட்கள் இருக்கிறார்கள்'' என்று 'அதை' 'இங்கே' என்ற இரண்டு சொற்களிலும் ஓர் அழுத்தம் கொடுத்துக் கூறினார்.

தேவியின் முகம் அப்படியே சுண்டிப் போயிற்று. விருட்டென்று திரும்பி வந்துவிட்டாள். முதலில் அவர் தன் ஏழ்மையை எடுத்துக் காட்டுவது போலத்தான் தேவி நினைத்தாள். ஆனால் பிறகு யோசித்துப் பார்க்கும்போது விஷயம் அது மட்டுமல்ல என்று தோன்றியது. அவளுக்குப் புரிந்திராத ஏதோ இன்னொன்றுக்கும் சேர்த்து மாமியார் தன்னை மட்டம் தட்டியிருக்கிறார் என்பது தெரிந்தது. ஆனால் அந்த இன்னொன்று என்ன என்பது தான் தேவிக்குப் புரியவில்லை.

மொத்தத்தில் தனக்கு வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள், தேவி. மாமியாரின் குணம் தெரிந்தும் வலுவிலே சென்று உதவப்போனது அவளது தவறு தானே? நல்ல மாட்டுக்கு ஒரு

சூடு என்று எண்ணி, பிறகு சமையல் அறைப் பக்கமே தேவி செல்வது இல்லை.

செல்வி அப்படி இல்லை. மாமியார் சொல்லுவது ஒன்றுமே அவளுக்கு உறைப்பதாகக் காணோம். என்ன சொன்னாலும் பொறுத்துக் கொண்டு நாய்க்குட்டி போல அவர் பின்னேயே சுற்றுவாள். மாமியார் சோபாவில் கம்பீரமாக அமர்ந்து ஏதாவது சொல்ல, செல்வி அவர் காலடியில் பூனைக்குட்டி போல அமர்ந்து கேட்டுக் கொண்டு இருப்பாள். அதைப் பார்க்கையில் தேவிக்குப் பொத்துக் கொண்டு வரும். 'முதுகெலும்பு இல்லாத கோழை, பெருமாள் மாடு மாதிரி தலையை ஆட்டுவதைப் பார்' என்று ஆத்திரத்தோடு நினைத்துக் கொள்ளுவாள்.

தேவி ஒதுங்கினாலும் மாமியார் விடுவதாக இல்லை. ''பெண்ணாகப் பிறந்தால் மட்டும் பெண்ணாவாளா? முதலில் தகப்பனுக்கு, பிறகு கணவனுக்கு, அதன்பிறகு பிள்ளைக்கு என்று செய்யாதவள் பெண் அல்ல'' என்று தேவியின் காது கேட்கும்படியாகக் கூறுவாள்.

அவள் தடுக்கில் பாய்ந்தால், தேவி கோலத்தில் பாய்ந்தாள். மாமியாரின் பேச்சு காதில் விழாதது போலப் போய்விடுவாள். ''கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்தாரே அவருக்கு ஏன் செய்ய வேண்டும்?'' என்று உள்ளூர வாதம் செய்வாள். அதோடு, இவரது கடுகடுப்பைப் பொறுத்துக் கொண்டு, எவள் சமையல் அறையில் நிற்பாளாம்?

ஆயினும் செல்வி நின்றாள். ஒரு மாலைச் சிற்றுண்டிக்கு ஆரஞ்சு வண்ணத்தில் ஓர் இனிப்பு வந்தது. ''சின்னச் சின்னம்மா செய்தார்கள்'' என்று ஒருமுறை பரிமாறி விட்டுப் போனான் , சமையல்காரன்.

மனோகர் பெருமையுடன் மனைவியைப் பார்த்து விட்டு மீண்டும் ஒரு கரண்டி எடுத்துத் தன் தட்டில் போட்டுக் கொண்டான்.

''மற்றவர்களுக்கும் மிச்சம் வையடா. பெண்டாட்டி செய்தாள் என்றால், ஒட்டுபற்றுகூட இல்லாமல் வழித்து உண்டு விடுவாய் போல இருக்கிறதே'' என்று கேலி செய்தான் தினகர்.

அய்யோ பாவம் அண்ணனாயிற்றே, உங்களுக்குக் கொஞ்சம் வைக்கிறேன், அண்ணா'' என்று அண்ணனுக்கும் வைத்தான் மனோகரன்.

செல்வி சிரித்தாள். ''பெரிய அத்தானுக்குப் பிடிக்கிறதோ என்னவோ. நீங்கள் பாட்டில் தட்டுகிறீர்களே'' கணவனை அடக்கி னாள், செல்வி.

''மெய்யாகவே நன்றாகத்தான் இருக்கிறது செல்வி. நான் இந்தப் பயல் மயக்கத்தில்தான் விழுங்குகிறானோ என்று நினைத் தேன்'' என்று செல்வியிடம் கேலியைத் திருப்பினான், தினகர்.

''மயக்கத்தில் பாதி, சுவையில் பாதியாக உண்ணும்படி செய்து போடத்தானே மனைவி என்று ஒருத்தியைக் கட்டுவது? என்றார், புவனேசுவரி. அவரது கூரிய பார்வை தேவியின் மீது சற்று ஏளனமாகப் படிந்தது.

மாமியாரைத் தொடர்ந்து கணவனது பார்வையும் தன்மீது படிவதை தேவி உணர்ந்தாள். கன்னங்களில் தானாகச் சிவப்பு ஏறிற்று. ''அதையெல்லாம் செய்வதற்குத்தான் 'இங்கே' நிறைய ஆட்கள் இருக்கிறார்களே'' என்று தெளிவாக முணுமுணுத்தாள்.

நல்ல வேளையாகச் செல்வியும் மனோகரும் இதைக் கவனிக்க வில்லை. அவர்கள் ஒருவரில் ஒருவர் லயித்திருந்தனர்.

தனிமையில் செல்வியிடம், ''செய்யவில்லை என்று பேசுகி றார்களே, செய்யப் போனால் மட்டம் தட்டலாமா? என்று பொரு மினாள் தேவி.

பெரிய மனுஷி போல, ''அத்தை சொல்வதை ஒன்றும் மனதில் எடுத்துக் கொள்ளாதே அக்கா'' என்று தேறுதல் கூறினாள் தங்கை.

தேவிக்கு மனம் ஆறவில்லை. ''நீ எப்படியடி அவர்களிடம் சமாளித்துக் கொண்டு போகிறாய்?'' என்று வியப்புடன் விசாரித் தாள்.

''அதுதான் சொன்னேனே அக்கா, மனதில் எடுத்துக் கொள்ளக் கூடாது''.

''அது எப்படி முடியும்? சும்மா சும்மா குத்துகிறார்களே''

''வேறு யார் அக்கா நம் அம்மா மாதிரிதானே. அவருடைய தாயார் என்றால் என்ன? நம்மைப் பெற்றவள் என்றால் என்ன? நம் அம்மா சொன்னால் வேறுபாடாய் நினைப்போமா?

''அதெப்படி நம் அம்மா என்று எண்ணுவது?'' என்று எதிர்ப்பு தெரிவித்தாள் தேவி.

''உயிரும் உடலுமாய் அவரோடு ஒன்றிவிட்டோம். பிறகு அவரைப் பெற்றவர் நமக்கும் பெற்ற அன்னைதானே அக்கா'' என்று அமைதியாகச் சொல்லிக் கொடுத்தாள் செல்வி.

தேவிக்கு இந்த நியாயம் புரிபடவில்லை. அதெப்படி அம்மா வாக முடியும்? முதலில் அதென்ன உயிரும் உடலுமாக ஒன்றுவது? அதுவும் கட்டாயத் திருமணம் செய்து கொண்டவனோடு எப்படி ஒன்ற முடியும்? தேவி முகத்தைச் சுளுக்கிக் கொண்டாள்.

வரவரத் தான் மட்டும் தனித்து நிற்பதுபோல ஓர் உணர்ச்சி தேவியை அரிக்கத் தொடங்கியது. மாமியாரின் வழிக்குத் தேவி செல்வதில்லை. தினகரிடம் தானாகப் பேசுவது இல்லை. இவர்களை விடுத்து தேவியிடம் பேச செல்விக்கு நேரம் இல்லை. அதுதான் தேவிக்குப் பொறுக்கவில்லை. காலை என்றால் மனோகரன் அலுவலகத்துக்குச் செல்லும் வரையில் செல்வி வெளியே தலை காட்டுவதே இல்லை. பிறகானால் மாமியாருக்குப் பாத பூஜை செய்து கொண்டு அவர் பின்னே சுற்றுவாள். மதிய உணவு. பிறகு மாலையில் மனோகரன் ஐந்தரைக்கு வருவான். செல்வி ஐந்து மணிக்கே அலங்காரம் செய்து கொண்டு வழிபார்த்து நிற்பாள். அவர் அவர் என்று உருகுவாள். அவன் வந்த பிறகு மீண்டும் கூட்டுக்குள் அடைந்து விடுவாள். கண்ணிலேயே காண முடியாது.

அப்படி என்ன குலாவல் என்று தேவிக்கு எரிச்சல் வரும். பிடிக்காதவனை மணந்து கஷ்டப்படும் போது தங்கையின் அருகாமைதான் தனக்கு ஆறுதல் என்று தேவி முன்பு நினைத்திருந்தாள். அது இல்லை என்றபோது ஆத்திரம் வந்தது. கொஞ்சமும் அருகதை அற்ற மனோகரிடம் இவள் இப்படி உருகுவானேன்? ஒருநாள் வாய்ப்பு கிடைத்தது, தேவி சொல்லிக் காட்டி விட்டாள்.

ஒரு நாள் மதியம் சாப்பிட்ட பிறகு மாடிக்குச் செல்லும்போது அறைவாசலில் செல்வி தலைசுற்றிச் சாய்ந்து விட்டாள்.

''செல்வி, செல்வி என்று பதறினான் மனோகர். அவளை அப்படியே தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தினான். கூடவே சென்ற தேவி ஓர் ஈரத் துணியால் செல்வியின் முகத்தைத் துடைத்தாள். காற்று முகத்தில் படும்படியாக வீசினாள், மனோகரோ ''செல்விக் கண்ணு செல்வியம்மா'' என்று உருப்போட்டுக் கொண்டு அருகில் நின்றான்.

மெல்ல கண் விழித்தாள் செல்வி. கவலையுடன் கையைப் பிசைந்து கொண்டு நின்ற கணவன் முகம்தான் அவள் கண்ணில் பட்டதோ? ஒரு கையை நீட்டி அவன் கரத்தைப் பற்றினாள். ''எனக்கு ஒன்றும் இல்லை'' என்று தேறுதலாகப் புன்னகை செய்தாள்.

அவனுக்குக் கண்ணீரே வந்து விட்டது, மனைவியின் அருகே அமர்ந்து அவளது கூந்தலை வருடினான். ''கொஞ்ச நேரம் என் உயிரே போய்விட்டது, செல்வியம்மா'' என்று உருகினான்.

தேவிக்கு சகிக்கவில்லை. ''இப்போது உருகுகிறீர்களே! இதை விட மோசமாக கிடந்த போது பாராமுகமாக இருந்தீர்களே, இருக்கிறாளா செத்தாளா என்று கூட விசாரிக்கவில்லையே'' என்று சுடச்சுடக் கேட்டு விட்டாள்.

மனோகரின் முகம் வாடிச் சுருங்கி விட்டது. அவ்வளவுதான். செல்விக்குப் பொறுக்கவில்லை. ''அவர் என்ன செய்வார்? எல் லாம் பெரிய அத்தானின் சூழ்ச்சியும் அதிகாரமும் செய்த வேலை தானே. அதை மறந்து இவரைச் சொல்லுகிறாயே'' என்று தேவிக்கு பதில் கொடுத்தாள்.

தேவி அயர்ந்து போய் நின்றாள். இதே தங்கையுடன் சேர்ந்து தவித்த தவிப்பு, இதே தங்கைக்காக அவள் செய்த தியாகம் என்ன? இன்று இதே தங்கை அன்றுபட்ட துன்பங்களுக்கும் துயரங்களுக் கும் காரணமான ஒருவனுக்குப் பரிந்து கொண்டு தன்னையே எதிர்க்கிறாளே?

தேவியின் முகத்தைப் பார்த்த உடனேயே செல்விக்கு வருத்த மாகி விட்டது. ''அக்கா, அக்கா, என்னை மன்னித்து விடக்கா. தெரியாமல் உன்னிடம் பெரியத்தானைப் பற்றிச் சொல்லிவிட் டேனே, வருத்தப்படாதே அக்கா'' என்று கெஞ்சினாள்.

''அவரைச் சொன்னால் எனக்கென்னடி வந்தது?'' என்று கேட்டு விட்டு வெளியே சென்றாள், தேவி.

செல்வி குழப்பத்துடன் அவளைப் பார்த்தாள்.

## 19

டாக்டர் சசிரேகாவுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. மாப்பிள்ளையும் ஒரு டாக்டர்தான். இந்த செய்தியை தேவியிடம் சொல்லி விட்டுச் செல்ல சசி வந்தாள்.

''டாக்டரும், டாக்டருமா? நல்லது ஸ்டெதஸ்கோப்பா லேயே, மாலை மாற்றலாம். பூமாலை செலவும் மிச்சம். புதுமையாகவும் இருக்கும்.'' என்று தினகர் நகைத்தான்.

அதற்குள் தேவி பழச்சாறுடன் வந்து சேர்ந்தாள். எல்லோருக்கும் சாறு நிரம்பிய கண்ணாடிக் குவளைகளை அளித்தாள். பிறகு தினகரைத் தாண்டி கொண்டு ஓர் இருக்கையில் அமரச் சென்றாள். ஆனால், தினகர் மிகச் சுதந்திரமாக அவள் கரத்தைப் பற்றி அவளைத் தன் அருகே அமர்த்திக் கொண்டான். பிடித்த கையை விடவும் இல்லை. தேவி உடல் கூசி ஒதுங்க முயன்றாள். அதை கண்ட செல்வியின் முகம் முன்னிலும் அதிகமாக கலக்கமுற்றது.

''தேவி! நான் என்ன நினைக்கிறேன், தெரியுமா? நம் டாக்டரின் குழந்தை பிறந்த உடனேயே மாத்திரை மருந்து என்று ஆகும்...'' என்று ஏதேதோ கலகலப்பாகப் பேசினான், தினகர்.

தேவி லேசாகப் புன்னகை செய்தாளே தவிர தினகரைப் போல அவளுக்குப் பேச்சு வரவில்லை. கூடவே தினகரின் தொடு உணர்ச்சி வேறு உடம்பை என்னவோ பண்ணிற்று.

இதை உணர்ந்தவன் போல தினகர் எழுந்தான். ''வரட்டுமா? எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது.''

''இந்த நேரத்திலா?'' என்றாள் சசி.

''ஆமாம் கொஞ்சம் 'பைல்'கள் கொண்டு வந்திருக்கிறேன். இரவுக்குள் முடித்தாக வேண்டும்'' என்று அவன் திரும்பினான்.

''நீங்கள் பைலோடு உட்கார்ந்து விட்டால் எங்கள் தேவிக்குப் போரடிக்காதா?'' என்று சிரித்தாள் சசி.

''அதற்குத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்களே,'' என்றான் தினகர்.

''எதற்கு? போரடிப்பதற்கா?'' என்று மடக்கினாள் சசி.

தினகர் கலகலவென்று சிரித்துவிட்டு ''இப்போது அல்லவா தெரிகிறது, தேவி யாரிடம் பயிற்சி பெற்றிருக்கிறாள் என்பது'' என்ற பதில் கொடுத்தான்.

இதற்கு பதில் கூற முடியாமல் சசி சிரிக்க, கூடவே எல்லோரும் சிரிக்க சிரிப்பினூடே தினகர் வெளியே சென்றான்.

சசியின் திருமணம் தேவியின் சங்கடத்தையும் சஞ்சலத்தையும் வெகுவாகக் குறைத்தது பாதி நேரம் சசியோடு கழிந்தது. மீதி நேரமும் அதைப் பற்றியே சிந்தித்தாள்.

சசிக்கு என்ன பரிசு கொடுப்பது என்று யோசித்தாள். தினகர் அளவுக்கு பணம் இல்லை என்றாலும் சசி வசதியுடையவள் தான்.அதனால் அவளுக்குத் தேவைப்படக் கூடிய பொருள் என்று தேவிக்கு ஒன்றும் தெரியவில்லை. அவள் யோசித்துக் கொண்டு இருக்கும்போதே ஒருநாள் தினகர்,''டாக்டரின் திருமணத்துக்கு என்ன பரிசு கொடுக்கலாம்? ஏதாவது தேர்ந்து எடுத்தாயா?'' என்று கேட்டான்.

''எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை'' என்றாள் தேவி.

''வெள்ளியில் ஏதாவது செய்வோமா?''

''நன்றாக இருக்குமா?'' என்று தேவி சந்தேகப்பட்டாள்.

''நான் செய்யச் சொல்கிறேன். செய்து வந்த பிறகு பார். பிடிக்கவில்லையானால் மாற்றிக் கொள்ளலாம்'' என்றான் தினகரன்.

''பரிசு செய்து வந்தபின் அதைப் பார்த்து வியக்காமல் இருக்க அவளால் முடியவில்லை. ஒரு பீடம் அதில் இரண்டு தாங்கிகளில்

ஒரு தொட்டில் தொங்கியது. தொட்டிலில் கூட பலநிற எனாமல் வேலைபாடுடன் கண்ணைப் பறித்தது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இரு 'ஸ்டெதஸ்கோப்'புகளே பின்னிப் பிணைந்து பீடத்தை அமைத்து இருதாங்கிகளாகவும் முடிந்தது தான். அந்தப் பின்னலைப் பல வண்ணப் பூக்கள் சூழ்ந்து அணைத் தாற்போல அந்த அமைப்பு கண்ணைப் பறித்தது. தேவி தன்னையும் அறியாமல் கண்கள் விரிய, ''பிரமாதம்!'' என்று பாராட்டினாள்.

தினகர் ஒன்றும் கூறவில்லை. அந்தத் தொட்டிலைப் பார்த் தான். பிறகு தேவியை பிடுங்குவது போலப் பார்த்தான். வெளியே போய் விட்டான்.

அவனது பார்வையின் பொருள் என்ன என்பது தேவிக்கு விளங்கவில்லை. ஆனால், அதை மறக்கவும் முடியவில்லை.

திருமண வீட்டிலும் அந்தப் பரிசு எல்லோருடைய பாராட்டை யும் பெற்றது.

''முழுசாக நான்கு நாட்கள் விழித்திருந்து இந்த டிசைனை கண்டுபிடித்தோமாக்கும்'' என்று கூசாமல் புளுகினான் தினகர்.

''இல்லை அக்கா இவர்தான்...'' என்று தொடங்கினாள் தேவி. காலில் தினகரின் கால் அழுத்தியது. பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.

''அண்ணிக்கு அண்ணனைத்தான் எல்லோரும் புகழ வேண்டு மாம்'' என்றான் மனோகர்.

''அவர் புத்திசாலி என்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகி றோம் இல்லாவிட்டால் எங்கள் தேவியை மணப்பாரா?'' என்றாள் சசி.

''அக்காவும் புத்திசாலிதான். இல்லாவிட்டால் பெரிய அத் தானை விரும்பியிருப்பாளா?'' என்று தேவியைப் பார்த்தாள் செல்வி.

தேவி வலுக்கட்டாயமாகப் புன்னகை செய்தாள்.

''இப்போது கல்யாணப் பெண் யார்? தேவியை மாட்ட வைத்துவிட்டு அவர்கள் தப்பிக் கொள்கிறார்களே'' என்றான் தினகர்.

''அடேயப்பா! அண்ணியை கிண்டல் செய்வது கூட அண்ண னுக்குப் பொறுக்கவில்லையே!'' என்று மனோகர் நகைத்தான்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் சும்மா இருங்கள் மிஸ்டர் தினகர் அவள் உள்ளூர ரசித்துக் கொண்டு தான் இருப்பாள்'' என்றார் சசியின் கணவர் புன்முறுவல் செய்தார்.

''நிரம்பவும் நிச்சயமாகச் சொல்லுகிறீர்களே! சொந்த அனுப வமா?'' என்று மடக்கினான் தினகரன்''

சசியின் முகம் சிவந்து போயிற்று. அவளுடைய கணவர் அதைப் பார்த்ததும் உரக்கச் சிரிக்கத் தொடங்கி விட்டார்.

படபடவென்று பட்டாசாகப் பொரியும் தேவி இந்தக் கலக லப்பில் பங்கு கொள்ள முடியாமல் திணறினாள்.

அன்றிரவு வீடு திரும்பியபோது ஒரு வித்தியாசமான காட்சி தென்பட்டது.

வீட்டின் முன் ஹாலில் சோபாவில் புவனேசுவரி அம்மாளின் அருகில் குப்புறப் படுத்து விம்மி விம்மி அழுதுகொண்டு இருந் தாள், ஓர் இளம் பெண்.

தேவிக்கு ஆச்சரியமாக இருந்தது. பொதுவாக மற்றவர் பார்க்க அழுவது அவமானம் என்பது தேவியின் கருத்து. அதுவும் யாரும் வரப் போக இருக்கும் முன் அறையில் படுத்துக் கொண்டு உரக்க விம்மி அழுவது என்றால்...தேவியால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை...இரக்கத்துடன் அவளைப் பார்த்துவிட்டு நிமிர்ந் தாள்.

நிமிர்ந்து பார்த்தால் மீண்டும் ஆச்சரியம்.

தினகர் எங்கோ அந்தர்த்தனம் ஆகிவிட்டிருந்தான்.

மனோகர் செல்வியின் கையைப் பற்றி இழுத்தபடி ஓசையின் றிப் படியேறிக் கொண்டிருந்தான்.

நெஞ்சு வெடிப்பது போல ஒருத்தி அழுது கொண்டு இருக்கும் போது விட்டுச் செல்லவும் தேவிக்கு மனம் இல்லை. ஆனால், யார் என்று கூடத் தெரியாமல் என்ன ஆறுதல் கூறுவது? தான்

அழுவதை அன்னியாள் கண்டுவிட்டாளே என்று அவளுக்கு வருத்தமே மிகையாகலாம் . எனவே, இப்போது ஒதுங்கிப் போவது நல்லது.

அறை முழுவதுமாக சூட்கேசுகளும் 'ஜிப்' பைகளும் பரவிக் கிடந்தன. அவற்றில் தட்டி விழாதபடி ஓசையின்றி ஒதுங்கிச் செல்லலானாள்.

''கொஞ்சம் நில்'' என்று குரல் கொடுத்தார் புவனேசுவரி. ''ரேவதி, இதோ தினகருடைய மனைவி. இவள்தான், தேவி என்று பெயர்,'' என்று அறிமுகத்தைத் தொடங்கினார்.

சோபாவில் குப்புறக் கிடந்த அந்தப் பெண் தலையைத் தூக்கிக் கூடப் பார்க்கவில்லை. ''அய்யோ அத்தை அவளை நான் பார்க்க மாட்டேன் போகச் சொல்லுங்கள்,'' என்று கிரீச்சிட்டாள்.

தேவிக்குச் சட்டென முகம் கடுத்தது. ஆனால் உடனேயே மனதைச் சமாதானம் செய்து கொண்டாள். பாவம் துன்ப மிகுதியில் நிலைகுலைந்து கிடக்கிறாள். என்ன பேசுகிறோம் என்றே புரியவில்லை. ''பாவம், அத்தை ஏதோ துயரத்தால், தடுமாறி நிற்கிறாள். நான் பிறகு பார்க்கிறேன்'' என்று மாமியாரிடம் கிசுகிசுத்தாள். பிறகு ஓசைப்படாமல் விலகிச் சென்றாள்.

''இரண்டு மாதம் சென்று வருவதற்குள் இப்படிச் செய்து விட்டாரே, அத்தை'' என்று அந்தப் பெண் விக்கி விக்கி அழுவது தேவிக்குக் கேட்டது.

ஆனால், புவனேசுவரிக்கு அது கேட்கவில்லை. அவர் தன் மூத்த மருமகளை ஒருவித திருப்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

## 20

மறுநாள் காலை சாப்பாட்டின் போதுதான் தேவி அந்தப் பெண்ணை நன்றாகப் பார்த்தாள். நேற்று அதிகமாக அழுதாளே என்று பரிவுடன் நோக்கினாள்.

ஆனால், அமைதியாக சாப்பிட்டுக் கொண்டு இருந்த அவள் நிமிர்ந்து பார்த்ததும் ஆச்சரியத்தால் கண்களை அகல விரித்தாள். ''ஏய், நீ...நீ...அந்தப் பிச்சைக்காரி இல்லை'' என்று கூவினாள்.

தேவிக்கு உடனே நினைவு வந்தது. மதுரையில் கைப்பையை மணலில் புதைத்தவள். செந்திருவைத் திருடி என்றவள், அவளுக்கு அடி வாங்கி வைத்தவள். அவள்தான் இன்று தேவியைப் பிச்சைக் காரி என்கிறாள்,

''முகம் சிவக்க, நான் ஒன்றும் பிச்சைக்காரி இல்லை'' என்று கோபத்துடன் கூறினாள் தேவி.

''இன்றைக்கு ராணி மாதிரி நிற்கிறாயே. நான் உன் முன் கதையைச் சொன்னேனடி. அன்று கிழிசல் சேலையோடு நின் றாயே, நீ தானேடி அது. இங்கே எங்கேடி வந்தாய்?''

''போதும் ரேவதி. இவள்தான் என் மனைவி,'' என்றான், தினகரன்.

''ஆ!'' என்று வாயைப் பிளந்தாள், ரேவதி. ''உங்கள் மனை வியா? அய்யய்யோ! எப்படி அத்தான் உங்களுக்குப் பொடி போட்டாள்? அய்யோ தினு அத்தான் நீங்கள் எப்படியோ அவள் வலையில் சிக்கி விட்டீர்களே! என்று புலம்பலானாள்.

தேவிக்கு கொஞ்சம் கொஞ்சமாக சினம் ஏறிக் கொண்டு இருந்தது. பட்டென்று ''ஆமாம் உன் அத்தான் விலாங்கு மீன். நான் அப்படியே வலை வீசிப் பிடித்து விட்டேன். போதுமாடி, அம்மா?'' என்றாள்.

''அடி அடி அடியே...அத்தை அத்தை, இவள் வாயைப் பாருங்க ளேன். என்னை-உங்கள் தம்பியின் மகளை-அருமைமிகு மரும களை-எப்படிப் பேசுகிறாள் பாருங்களேன். இதையெல்லாம் கேட் டுக் கொண்டு சும்மா இருக்கிறீர்களே. அய்யோ நான் என்ன செய்வேன்? அய்யகோ நான் என்ன செய்யட்டும்...?'' என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள், அவள்.

மனோகர் தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டான்.

''சும்மா இரு ரேவதி. இது சாப்பிடும் நேரம் பிறகு...'' என்று லேசாக அதட்டினான் தினகர்.

''சாப்பாடா? இவளைப் பார்த்த பிறகு எனக்கு சாப்பாடு ஒரு கேடா? ஒரு கவளமேனும் உள்ளே இறங்குமா. நான் போகிறேன். அத்தான், நான் போகிறேன். ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிய கதையாக நான் போகிறேன். நீங்கள் எல்லோரும் நன்றாகச் சாப்பிடுங்கள். நான் போகிறேன் அத்தை, நான் போகிறேன்'' என்று விம்மியபடி நடந்தாள்.

சிறிய தூரம் சென்று நின்றாள். யாரும் பேசவில்லை, சற்றுத் தயங்கினவள், ''அத்தை நான் பட்டினி கிடந்தால் உங்களுக்கும் தினு அத்தானுக்கும் மனது தாங்காது இல்லையா? ஆனால் இவளோடு உட்கார்ந்து சாப்பிட என்னால் முடியாது. அதனால் என் அறைக்கே எல்லாம் தட்டில் அனுப்பி விடுங்கள். போகட்டுமா அத்தை...'' விக் என்று மீண்டும் விம்மிவிட்டு சென்றாள்.

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டான். மனோகர் செல்வி புன்னகை செய்தாள். ஆனால் தேவி சட்டெனச் சிரித்துவிட்டாள். அந்தச் சிரிப்புச் சத்தத்தில் ரேவதி திரும்பிவிட்டாள்.

''என் வேதனை உனக்கு சிரிப்பாகவா இருக்கிறது?'' என்று கத்தினாள். பிறகு ''அத்தை பால்போளி மட்டும் நிறைய அனுப்புங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

தேவி புன்னகையோடு திரும்பினாள். தினகரின் உணர்ச்சியற்ற பார்வை ரேவதியைத் தொடர்வதைக் கண்டாள். அவள் மனதில் சுருக்கென்று தைத்தது. சட்டென முகத்தை அலட்சியமாகத் திருப்பிக்கொண்டு சாப்பாடு மேசையின் முன்னே அமர்ந்தாள்.

புவனேசுவரி அம்மா ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

சற்றுப் பொறுத்து அவர் தேவியைத் தனியே அழைத்தார். ''மாடியில் மனோகரின் அறையை ரேவதிக்குக் கொடுக்கப் போகிறேன்'' என்று அறிவித்தார்.

''செல்விக்கு?''

''அவளும் மனோகரும் இனி கீழேயே இருக்கட்டும்'' என்று தீர்மானமாகப் பேசினார் மாமியார்.

செல்வி கீழேயே சென்று விட்டால் இதுவரை அவளுடன் பேசிய அளவுகூட பேச முடியாது. அது மட்டுமா? இந்தப் புலம்பல் நாயகிஎதிர் அறையில் இருந்துகொண்டு சதா புலம்பி னால்?

''ஏன் அப்படி? இந்த ரேவதிதான் கீழே இருக்கட்டுமே செல்வி எப்போதும் போல மாடியில் இருந்தால் என்ன?'' என்று எதிர்த்தாள் தேவி.

''இந்த உடல் நிலையில் செல்வி மாடிக்கு ஏறி இறங்குவது நல்லதில்லை'' நறுக்குத் தெறித்தாற்போல மாமியாரின் பதில் வந்தது.

பொட்டில் அடிபட்டாற்போல தேவி அதிர்ந்து போனாள். மெள்ளக் கொஞ்சம் சமாளித்துக்கொண்டு ''உங்களுக்கு...உங்களுக் குத் தெரியுமா?'' என்ற திக்கித் திணறினாள்.

அவளை அலட்சியமாகப் பார்த்தார், புவனேசுவரி. ''ஒரு தலைமுறை மூத்து விட்டதால் நான், கண், மூளை எல்லாம் மழுங் கிப் போன முட்டாள் என்று நினைத்தாயா?'' என்று எகத்தாளமா கக் கேட்டார்.

தேவியின் முகம் சுண்டிப் போயிற்று. ''நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லையே'' என்றாள்.

''சொல்லவில்லை. ஆனால் மனத்துக்குள் நினைத்துக் கொண் டாய். அவ்வளவுதான். சரிசரி, போ. போய்ச் சாமான்களை எடுக்க செல்விக்கு உதவி பண்ணு போ.'' என்று விரட்டினார் மாமியார்.

அன்றே புவனேசுவரிஅம்மாள் தன் மூத்த மகனையும் அழைத்து ஏதோ பேசினார். அவன் தலையை ஆட்டி மறுப்பது தேவியின் கண்ணில் பட்டது. மேலே நின்று பாராமல் சென்று விட்டாள்.

அன்று முதல் எதிர் அறையில் சர்வ சதா காலமும் 'பாப் மியூசிக்' முழுங்கத் தொடங்கியது. காட்டுக் கத்தலாக ஒரு பாட்டு, ''அய்யய்யோ அய்யய்யோ'' என்று இன்னொரு பாட்டு இரண்டும் மாறி மாறி எப்போதும் முழங்கின. எந்த நேரமும் தலைக்குள் 'டங்கு டங்கு' என்று ஏதோ தட்டுவது போன்ற உணர்ச்சியில் திண்டாடிப் போனாள்.

அதோடு, ரேவதியின் அறை திறந்த வீடு போல இருந்தது! எந்த நேரமும் சாத்தாத கதவு. போகும் போதும் வரும்போதும் கண்ட கண்ட உடைகளோடு அவள் ஏதோ கோலத்தில் கட்டிலிலோ சோபாவிலோ விழுந்து கிடப்பது தெரியும்.. வயிற்று மடிப்புகள், ப்ளவுசின் இறுக்கம், கெண்டைக்கால் சதை என்று ஏதேதோ பார்வையில் படும். தினகரின் கண்களிலும் இதெல்லாம் படுமே என்று மனதில் அருவருத்துக் கொள்வாள் தேவி.

அதே நினைவுடன் தூங்கியபோது, ஒருநாள் இரவில் தேவி ஒரு கனவு கண்டாள். ஒரு மாதிரியான கனவு ரேவதி ஒரு காபரே நடனக்காரி போல உடையணிந்து ஏதோ ஆட்டம் ஆடுகிறாள். ஆடி முடிந்ததும் சுண்டு விரலை லேசாக வளைக்கிறாள். காத்திருந்தாற்போல் தினகர் ஓடோடிச் சென்று அந்த விரலைப் பற்றுகிறான். இருவருமாகக் காற்றில் மிதந்து எங்கோ பறக்கிறார்கள். கண்களுக்கு எட்டாமல் மறைகிறார்கள். தேவி கீழே திக்குத்திசை புரியாமல் நிற்கிறாள், ரேவதி வாயால் ஊதி விட்டுப் போகிறாள். அவள் வாயிலிருந்து தீப்பொறிகள் பறந்து வந்து தேவியைத் தாக்குகின்றன. அதே நேரம் தேவியின் மேல் யாரோ எண்ணையை ஊற்றுகிறார்கள். தேவி மீது தீப்பற்றுகிறது. தொண்டை உலரத் தண்ணீர் தண்ணீர் என்று தவிக்கிறாள் தேவி. தவித்துக் கொண்டே கண் விழித்தாள். விழித்த பின் சிந்தனையில் ஆழ்ந்தாள். இது என்ன கனவு? ஏன் வந்தது?

சட்டென தேவிக்கு எல்லாமே புரிந்தது. ரேவதியை நினைத்துக் கொண்டே தூங்கியிருக்கிறாள். அது கனவாகி விட்டது. ரேவதியின் வார்த்தைகள் தீப்பொறிகள். எண்ணெய் ஊற்றுவது மாமியார். ஆனால் தினகர்... தினகர் ஏன் சென்றான்?...

தேவிக்கு மெய்யாகவே இப்போது தொண்டை உலர்ந்தது. எழுந்து கண்ணாடிக் குடுவையில் இருந்த தண்ணீரைக் குடித்தாள். தாகம் தணியவில்லை. மெல்ல கதவைத் திறந்தாள். தினகர் அயர்ந்து உறங்குவது தெரிந்தது. சத்தமின்றி அந்த அறைக் கதவையும் திறந்து கொண்டு கீழே வந்தாள்.

ஐஸ் பெட்டியில் இருந்து குளிர் நீரை எடுத்துக் குடித்தாள். கொஞ்சம் பரவாயில்லை போல ஓர் எண்ணம். அறைக்குத் திரும்பி வந்தவள் திடுக்கிட்டு நின்றாள்.

எதிரே தினகர் நின்று கொண்டிருந்தான்!

# 21

எதிர்பாராமல் கணவனை அந்த நேரத்தில் எதிரே கண்டதும் தேவியின் மனம் திடுக்கிட்டது. கூடவே அவளையும் அறியாமல் கனவு நினைவுக்கு வந்தது. சட்டென நிமிர்ந்தாள். அவனைத் தாண்டிக் கொண்டு மிடுக்காகச் சென்றாள். தன் அறைக்குள் சென்று படுக்கையில் விழுந்து கண்களை, இறுக மூடிக் கொண்டாள்.

மறுநாள் தேவியின் அறையில் ஒரு சிறிய ஐஸ்பெட்டி குடிபுகுந்தது.

ஆட்கள் அதை வைத்துவிட்டுப் போனார்கள்.

''இனிக் குளிர் நீருக்காக நீ கீழே போக வேண்டியிராது'' என்று புன்னகை செய்தான் தினகர்.

''என்ன திடீர் கரிசனம்'' என்றாள் தேவி, கேலியாக.

தினகரின் புன்னகை மறைந்தது. அவன் பார்வை எதிர் அறைப் பக்கம் சென்று திரும்பியது. ''உன் பொறுமைக்குப் பரிசு என்று வைத்துக் கொள்ளேன்'' என்றான், அவனும் கேலியாக, பிறகு ''பிடிக்கிறதா?'' என்று அமைதியாக கேட்டான்.

அவன் பார்வை சென்ற திசையை தேவியும் கவனித்துக்கொண்டுதான் இருந்தாள். ''பணம் இருந்தாள் எதுவும் செய்யலாம்'' என்றாள் ஏளனமாக,

தினகரின் புருவங்கள் தெரிந்தன. ''அப்படி என்றால் என்ன அர்த்தம்?''

என்ன தப்பு செய்தாலும் பணத்தைக் கொட்டிப் பூசி மெழுகி மறைத்து விடலாம்.

தினகரனது சுதி ஏறியது.''அப்படி என்ன தப்பு செய்து விட்டு மறைக்கப் பார்க்கிறேன் என்கிறாய்?''

அலட்சியமாகத் தோளை குலுக்கிவிட்டு சன்னல் அருகே சென்றாள் தேவி. வெகு ரசனையுடன் பார்ப்பவள் போலச் சன்னலின் வெளியே பார்வையை செலுத்தி வேடிக்கைப் பார்க்கலானாள்.

சற்றுப் பொறுத்து அவன் குரல் நிதானமாக, சற்று இதமாகக் கேட்டது. ''கொஞ்சம் இனிமையாகப் பேசக் கூடாதா தேவி?''

ஏன் பேச வேண்டும்?'' என்று சுருக்கமாகக் கேட்டாள் தேவி.

''மற்றதை விட்டுவிடு, 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' அல்லவா?'' என்றான் அவன் பொறுமையாக.

''வள்ளுவர் பொதுவாகச் சொன்னார். விரும்பாத ஒருத்தியைக் கட்டாயமாக மணந்து அவளது எதிர் காலத்தை இருளடிப்பவர்களிடம் அப்படிப் பேசச் சொல்லவில்லை'' என்று பதில் கொடுத்தாள், தேவி.

''தேவி...? என்று தினகர் ஏதோ சொல்ல முயன்றான்.

காது கேளாதது போல வெளியே சென்றாள், தேவி. எதிரே வெகு எடுப்பான உடையுடன் ரேவதி வந்தாள்.

''தினு அத்தான், இன்று நீச்சலுக்கு...'' என்று ஏதோ சொல்லிக் கொண்டு தங்கள் அறையினுள் அவள் செல்வது தேவிக்குத் தெரிந்தது. மடமடவென்ற அந்தக் குரல் லேசாகக் கூடக் கேளாத தூரத்துக்கு விழுந்தடித்துக் கொண்டு சென்றாள்.

மறுநாள் மாலையில் தினகர் இரண்டு டிக்கெட்டுகளுடன் வந்தான். ''நட்சத்திரக் கலைவிழாவுக்கு வருகிறாயா?'' என்று தேவியை அழைத்தான்.

அது மாலைச் சிற்றுண்டி நேரம், தினகரும் தேவியும் மட்டுமே மேசைக்கு வந்திருந்தனர். தனியே கிடைத்த தருணத்தில் தினகர் கேட்டான்.

''நான் வரவில்லை'' என்றாள் தேவி மொட்டையாக, நேற்று நீச்சலுக்கு அவளோடு சென்றிருப்பார். அதைப் பூசி மெழுக இன்று கலை விழாவிற்கு அழைப்பாக்கும்'' என்ற நினைத்துக் கொண்டாள்.

''ஏன், ஏன் வரவில்லை'' என்று அழுத்தமாகக் கேட்டான் தினகரன்.

''எனக்கு நடிப்பவர்களைப் பிடிக்காது'' என்றாள் தேவி.

''யாரைச் சொல்லுகிறாய்'' அதட்டினான் தினகர். உடனேயே, அந்த நாடகம் மிகவும் நன்றாக இருக்குமாம்'' என்று குரல் குழையக் கூறினான்.

''எந்த நாடகம், அண்ணா?'' என்று கேட்டபடி மனோகர் வந்தான். அவனது நிழலைப் போலச் செல்வியும் கூடவே வந்தாள்.

எதுவென்று தினகர் சொல்ல மனோகர் உடனே ஆமோதித்தான்.

''அப்படியானால் செல்வியை அழைத்துக் கொண்டு நீங்கள் போங்களேன்.'' என்று யோசனை சொன்னாள் தேவி.

மனோகருக்கு ஆர்வத்தில் விழிகள் பளபளத்தன. ஆயினும் அடக்கிக் கொண்டு, ''அண்ணனுக்குப் போக ஆசையாம்...'' என்று தொடங்கினான்.

''இல்லையடா, நான் வேண்டிய நாடகம் பார்த்தாயிற்று நீயே போய்வா'' என்றான் தினகர்.

''போகலாமா செல்வி!'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டான் மனோகர். செல்விக்கு மனோகருடன் செல்லும் ஆசை பாதி-அவளது சந்தேகத்தால் விளைந்த தயக்கம் பாதியாகத் தடுமாறினாள்.

...''எங்கே?'' என்று கேட்டபடி ரேவதி வந்தாள். யாரும் பதில் சொல்லும்முன் மேசையில் கிடந்த டிக்கெட்டை எடுத்தாள் ''ஆகா? அய்யோ அய்யோ நட்சத்திரக் கலைவிழாவா? சிவாஜி, ஜெய்சங்கர், லட்சுமி, உஷாநந்தினி...அய்யோ அத்தான், சிவாஜி நாடகம் வேறு. நாம் இரண்டு பேரும் போகலாம் அத்தான்'' என்று தினகரிடம் கொஞ்சிக் கெஞ்சினாள்.

''அதற்குச் செல்வியும், அவளுடைய கணவரும் போகிறார்கள்,'' என்றாள் தேவி வெடுக்கென்று.

''செல்வி எங்கே போவது? வெள்ளிக்கிழமையும் அதுவுமாக அந்தி சாய்ந்த பிறகு, அவள் எங்கும் போக வேண்டாம்'' என்று கட்டளையிட்டார். மாமியார் எப்போது வந்தாரோ?

''ஏன் போகக்கூடாது'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள், தேவி.

''இல்லை அண்ணி, நான் போகவில்லை'' என்று அவசரமாக மறுத்துரைத்தாள் மனோகர் செல்வியும் அதை ஆமோதித்தாள். இப்படிச் செல்ல வேண்டிய இருவருமே இப்படிச் சொல்லவும் வேறு வழியின்றி தேவி வாயை மூடிக்கொண்டாள்.

''அத்தை அத்தை, நான் அத்தானோடு போகிறேன் அத்தை'' என்று குதித்தாள் ரேவதி.

''சரிதான் குழந்தை ஆசைபடுகிறாள். இவளை அழைத்துக் கொண்டு போய்வா தினகர்'' என்று விஷயத்தை முடித்தார், புவனேசுவரி.

''குழந்தையாமே குழந்தை. பல்லைத் தட்டித் தொட்டிலில் போட்டு ஆட்டுங்கள்'' என்று முணுமுணுத்தாள் தேவி.

''என்ன சொன்னாய்? சரியாகக் கேட்கவில்லை. திரும்பச் சொல்லு'' என்று அவளிடம் திரும்பினார் மாமியார்.

''ஒன்றுமில்லை, ஆசைப்படுகிறவர்கள் எல்லாம் போக வேண்டியதுதானே என்றேன்'' என்றாள் தேவி பல்லைக் கடித்துக் கொண்டு.

இரண்டு நாள் சென்றது.

தேவி கீழேயிருந்து மாடிக்கு வந்து கொண்டு இருந்தாள்.

எதிர் அறையில் பேச்சுக்குரல் கேட்டது. ''தேவி'' என்ற சொல் காதில் விழவும் தன்னையறியாமல் தயங்கி நின்றாள்.

''இந்த தேவியை அத்தான் எந்தக் காட்டிலிருந்து பிடித்துக் கொண்டு வந்தார் அத்தை? என்னை எப்போதும் மட்டம் தட்டுகிறாளே. சும்மா சும்மா அடித்து விடுகிறமாதிரி பார்க்கிறாள் அத்தை. நீங்கள் எல்லாம் இல்லை என்றால் கொன்றே விடுவாள், பாவி'' குறை கூறிக் கொண்டு இருந்தாள் ரேவதி.

சற்றுத் தயங்கி விட்டு புவனேசுவரியின் தேறுதல் குரல் கேட்டது. ''அதற்காக நீ ஏன் கவலைப்படுகிறாய்? இன்னும் எத்தனை நாள் இவள் ஆட்டம் போடப் போகிறாள்? கொஞ்சநாள் தானே. பொறுத்துக் கொள் பிறகு பார்க்கலாம்.'' என்றார்.

தேவியின் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது. கண்கள் இருள, கால்கள் தடுமாற மெல்லத் தங்கள் அறையினுள் சென்றாள்!

## 22

தினகரிடமிருந்து தேவி ஒதுங்கி நின்றது ரேவதிக்கு நல்ல தொரு வாய்ப்பாகிப் போயிற்று. தினமும் அவன் கையிலேயே தொங்கிக் கொண்டு அங்கே இங்கே என்று அலைந்தாள். இதற்கு புவனேஸ்வரியும் வெகு அனுசரணையாக இருந்தார். சில விருந்துக ளுக்குக்கூட ரேவதியைச் சிங்காரித்து தினகருடன் அனுப்பி வைத் தார். ''பாவம் குழந்தை இங்கே பார்ப்பதுதானே, பூனாவுக்கு சென்று விட்டால் இதெல்லாம் ஏது?'' என்று உருகினார். ''ஊம். இவள் இங்கேயே இருந்துவிட்டால் நன்றாக இருக்கும்'' என்று பெருமூச்சு விட்டார்.

இதென்ன, இவளா கட்டிக் கொண்ட மனைவி? ஆத்திரத்து டன் ஒரு நாள் தேவி பிடிவாதம் பிடித்து தினகருடன் வெளியில் சென்ற பின் ஏன் சென்றோம் என்று வேதனையோடு திரும்பினாள்.

அது மதுபானத்துடன் கூடிய விருந்து. அந்த ஆள் அதிகம் போட்டு விட்டாரோ அல்லது அதை அருந்தினாலே பேச்சு அதிகப் பட்டு விடுமோ? லேசான தடுமாற்றத்துடன் தினகரும் தேவியும் இருந்த இடத்துக்கு வந்தார்.

''அலோ தினகர், லக்கிமேன் அய்யா நீ. முதலில் ரேவதி. பிறகு தேவி, பிறகு ரேவதி, மீண்டும் தேவி மாறி மாறி ஹி ஹி ஹி வள்ளி தெய்வானை மாதிரி ஒன்றுக்கு இரண்டு கிடைத்து விட்டதே, வா...வா...ழ்த்துக்கள்'' என்று குமுறினார்.

''உஷ் சுதர்சன், இதெல்லாம் என்ன பேச்சு'' என்று கண்டித்து அவரை அடக்க முயன்றான் தினகர்.

''பொய்யா சொன்னேன்? மெய்யாவே அம்மா எனக்கு சுட்டுப் போட்டாலும் பொய் பேச வராது. போன ஞாயிறு பால் டான்சில் ரேவதி இவர்மேல் அட்டை மாதிரி அப்படியே ஒட்டிக்...?''

''மூடடா வாயை'' என்றான் தினகர்,கடும் சினத்துடன்.

சுதர்சன் ஒன்றும் விளங்காமல் கையை விரித்துவிட்டு மேலே நடந்து சென்றார்.

''ஏன் வாயை மூடவேண்டும்? உங்கள் வண்டவாளம் தண்டவாளத்தில் ஏறுவதாலா?'' என்று ஏகத்தாளமாக வினவினாள், தேவி.

''ஆடும்போது தள்ள முடியாது தேவி. அதெல்லாம் ஒரு மரியாதை'' என்றான், அவன் அடிக்குரலில்.

''ஏது? அட்டைபோல் ஒட்டிக் கொள்வதா மரியாதை?'' என்று குத்தினாள் தேவி.

''அவள் ஒட்டினால் நான் என்ன செய்யட்டும்?''

''ஆகா ஆகா! வெகு பிரமாதமாகப் பேசுகிறீர்களே. ஈ தானாக வந்து வலையில் விழுந்தால் அந்த சாதுச்சிலந்தி என்னதான் செய்யமுடியும், பாவம்'' என்று எள்ளினாள் தேவி.

தினகரது முகபாவம் மாறிற்று. ''அவ்வளவு ஆத்திரப்படுவானேன். நீயும் அவளுக்கு மேல் அட்டைபோல் ஒட்டிக் கொண்டு விடுவதுதானே?''

''நானா? சீ...''

''ஆமாம் ஆமாம். மறந்தே போனேன் பார். புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமா? நீ தான் புலியாயிற்றே'' என்றான் அவனும்.

அன்று சீக்கிரமாகவே இருவரும் திரும்பி விட்டனர்.

இருவரது முகத்தையும் லேசாகப் பாராதது போலப் பார்த்தாள், செல்வி. பார்த்த அளவில் அவளது கவலை அதிகமாயிற்று.

தேவிக்கும் தினகருக்கும் இடையில் ஒன்றும் சரியில்லை என்பது செல்விக்கும் புரிந்தது. தேவி இன்னமும் தினகரின் உண்மையான மனைவி ஆகவில்லை என்று செல்வி சந்தேகப்பட்டாள். பின்னே ஏன் மணந்து கொண்டார்கள்? மனோகர்-செல்வியின் நிலைமைக்காகப் பிடிக்காமல் இருந்தும் மணந்தார்களா? நினைக்கும் போதே செல்விக்கு அழுகை வந்தது. கொஞ்சம் கண்ணீர் விட்டாள்.

அப்போது தோட்டக்காரனுடன் பேசிக்கொண்டு இருந்த தேவியின் குரல் கேட்டது. செல்வி அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். தேவிக்கு அழுவதே பிடிக்காது! கோழை மாதிரி அழுவதா என்பாள் அதுவும் உண்மைதான். சிந்தித்து செயல்பட வேண்டிய நேரத்தில் கோழை போலத்தானே செல்வி அழுகிறாள். செல்வி சிந்திக்கத் தொடங்கினாள்.

'என் வாழ்வை மலர வைத்தவள்' அக்கா. அவளது வாழ்வை நான் மலரவைத்தே தீருவேன்' என்று சபதம் செய்தாள், செல்வி. ஆனால் சபதத்தை நிறைவேற்றுவது எப்படி? 'ஈசா முருகா ஏதேனும் ஒரு வழி காட்டு' என்று வழக்கம் போலக் கடவுளைச் சரணடைந்தாள்.

அவளது வேண்டுகோள்களுக்கு அருள் செய்தாற்போல அன்று மாலை தினகருடைய நண்பர் ஒருவர் மனைவியோடு வந்தார். அவர்கள் தேவிக்கும் அறிமுகம் ஆனவர்கள்தான்.

சிற்றுண்டி முடிந்ததும் ''நீங்கள்தான் இந்தக் காரியத்தை முடித்து தரவேண்டும் மிசஸ்.தினகர்'' என்று தொடங்கினார் அவர்.

சற்றுக் கூச்சத்துடனேயே ''என்ன?'' என்று வினவினாள் தேவி.

''உங்கள் கணவரைப் பற்றிப் புகார் செய்ய வந்தோம் தேவி'' என்று குறுக்கிட்டாள், அந்த நண்பருடைய மனைவி சந்தியா. அதற்குள் அங்கே வந்த செல்வியைப் பார்த்தாள் ''வாருங்கள் மிஸஸ் மனோகர் நலம்தானா? உங்கள் சகோதரியை முந்திவிட்டீர்கள் என்று கேள்விப் பட்டோம்'' என்று அவளைக் கேலி செய்தாள்.

செல்வி வெட்கத்துடன் சிரித்தாள்.

''உங்கள் தங்கை வெட்கப்படுவது மிக அழகாக இருக்கிறது தேவி. மனோகருக்கு ஏற்ற மனைவி. அவர் மாதிரியே நளினம். என்ன சொல்லிக் கொண்டிருந்தேன். தினகரைப் பற்றிச் சொன்னேன் இல்லையா? பாருங்கள் தேவி, வேட்டைக் கழகத்தில் இருந்த இந்த சனி ஞாயிறில் கொடைக்கானலுக்குச் செல்வதாகத் திட்டம் போட்டது எல்லாம் தினகர்தான். அதிலும் அவரவர் மனைவியோடு செல்லலாம் என்றதுகூட அவர்தான். இப்போது-அதுவும் இன்று திடீர் என்று தான் வரவில்லை என்கிறார் தினகர் இல்லாத பயணம் எப்படியிருக்கும்? நீங்களே சொல்லுங்கள்'' என்று குறை கூறினாள், சந்தியா.

''அதேதான் நானும் சொல்வது பயணத்தின் களையே கெட்டு விடுமே. அவரது கலகலப்பும் கிண்டலும் சுறுசுறுப்பும் எங்களில் யாருக்கு வரும்? அதோடு சின்னச் சின்ன விஷயங்களையும் அவரைப் போல் யாரால் கவனிக்க முடியும்? கொல்லன் பட்டறையில் ஊசி விற்பது போல உங்களிடமே இதையெல்லாம் நான் அளக்கத் தேவையில்லை. மொத்தத்தில் தினகர் இல்லாமல் ஒன்றும் நன்றாயிராது? எப்படியாவது நீங்கள் அவரை வற்புறுத்தி அழைத்து வரவேண்டும்'' என்று முடித்தார் சுந்தர்.

''ஆமாம் தேவி, நீங்கள் சொன்னால் அவர் தட்டுவாரா? அதனால்தான் உங்களிடமே வந்து விட்டோம்'' என்று ஒத்துப் பாடினாள், சந்தியா.

தேவிக்கு ஒரே சங்கடமாகி விட்டது. இது முழுக்க முழுக்க அவளுக்குப் புதிய விஷயம். அவன் என்ன நினைத்துக் கிளம்பினானோ? எதனால் மறுத்தானோ? அதோடு தேவி சொல்லிக் கேட்பவனா அவன்? கூடவே கணவனிடம் இவ்வளவு சிறப்புகள் இருக்கின்றனவா என்று ஆச்சரியமாகவும் இருந்தது. ''வந்து...அவருடைய தம்பியும் ஊரில் இல்லை. டெல்லிக்குப் போயிருக்கிறார். தொழிற்சாலை அலுவலகம் இரண்டையும் விட்டுவிட்டு எப்படி... '' என்று இழுத்தாள்.

அதற்குள் செல்வியின் மூளை வேகமாக வேலை செய்தது. கொடைக்கானல் - இயற்கையின் எழில் கொஞ்சும் இடம் இதமான துணைதேடும் குளிர்-ரேவதி இல்லாத தனிமை (குறைந்த பட்சம் இரவிலேனும் தனிமை கிட்டும் அல்லவா?) தேவி தினகரின்

மனவேறுபாடு மறைய இதைவிடச் சிறந்த வாய்ப்பு ஏது? சட்டென தமக்கையின் பேச்சில் குறுக்கிட்டாள்.

''என்னக்கா சொல்லிக் கொண்டு இருக்கிறாய்? இரண்டு நாள் போய் வருவதற்குள் அலுவலகத்தை பூதமா தூக்கிப் போய்விடும்? எண்ணிஇரண்டே நாட்கள் தான். அதிலும் ஒன்று ஞாயிற்றுக்கிழமை. அதற்குள் என்ன நடந்துவிடப் போகிறது. அவர்கள் அவ்வளவு தூரம் கேட்கிறார்களே. சும்மா ஜாலியாகப் போய் வருவாயா - அது இது என்று இழுக்கிறாயே''.

''அப்படிச் சொல்லுங்கள் மிஸஸ்.மனோகர்'' என்று சபாஷ் போட்டாள் சந்தியா.

தேவி பதில் சொல்ல முடியாமல் திணறினாள். நல்ல வேளையாக தினகரே அப்போது வந்து சேர்ந்தான்.

''அடடா, சுந்தரா? வீட்டரசியாரும் கூடவா? ஏது இவ்வளவு தூரம்? சுகமா, சந்தியா காபி எல்லாம் ஆயிற்றா?'' என்று புன்னகையோடு விசாரித்தான்.

''சும்மா வரவில்லை பெரியத்தான். அக்காவுக்குச் சாவி கொடுக்க வந்திருக்கிறார்கள். அவர்களது வேலை முடிந்தாயிற்று. இனி அக்கா உங்களுக்குச் சாவி கொடுக்க வேண்டும். கொடுத்தானதும் அந்த வேகத்தில் இங்கே கிளம்புகிறவர்கள் கொடைக்கானலில் சென்று தான் நிற்க வேண்டும்'' என்று சிரித்தாள் செல்வி.

''ஓகோ! அந்த விஷயமாக வந்தீர்களா? பெரிய இடத்து சிபாரிசு பிடித்துவிட்டார்கள் போலும்''.

''அக்காவுக்கு ஆசைதான். அத்தான் தான் தயவு பண்ண வேண்டும்'' என்று முடிந்தவரை இயல்பாகச் சொன்னாள். செல்வி இந்த அக்கா முரண்டு பண்ணி விடக் கூடாதே'' என்று அவளுக்கு உள்ளூர உதைப்புதான்.

''அதைத்தான் உன் அக்கா இன்னமும் சொல்லவில்லையே'' என்று சீண்டினான் தினகர்.

தேவி சிந்தித்தாள். இரண்டு நாள் இந்த ரேவதியின் முகத்தில் விழிக்காமல், அந்த டங்கு டங்கு சத்தம் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாமே. முகமலர்ச்சியுடன் ''போகலாமே'' என்றாள்.

செல்விக்கு மிகுந்த மகிழ்ச்சி அக்காவும் அவளுடைய கணவ ரும் இணைந்து விட்டது போல மகிழ்ந்தாள். ஆனால் அந்த ஆனந்தம் நிலைக்கவில்லை.

## 23

**கா**ர் தயாராக நின்றது. பெட்டி படுக்கைகள் ஏற்றப்பட்டு விட்டன.

தேவியும், தினகரும் காரில் ஏற வந்தார்கள்.

அப்பொழுது, மின்னாமல் வந்த இடி போல புவனேசுவரி ஒரு குண்டைப் போட்டார்! குழந்தையையும் அழைத்துப் போடா! அவள் ஆசைப்படுகிறாள் பாவம்'' என்றாள்.

குழந்தை' ரேவதிதான் அந்தக் குழந்தை இறுக்கமான 'ஸாடின்' உள்ளுடை அணிந்து, அதன் மேல் தொள தொள வென்று வாலைப் பின்னலால் ஆன அங்கி மாடல் ஆடையோடு நின்றது. கவர்ச்சி என்றால் அப்படி இப்படி அல்ல, செல்வி அயர்ந்து போனாள். தேவி அழகிதான் கட்டுடல் கொண்டவள்தான் ஆனால், இப்படிக் காட்ட மாட்டாளே. எந்த நோக்கத்துடன் செல்வி இந்தப் பய ணத்தை ஊக்குவித்தாளோ அந்த நோக்கம் இப்போது ஆழக்காற் றில் அகப்பட்ட சருகுபோலப் பறந்தது!

தேவி அப்படியே உடைந்தவள் போல நின்றாள். ஏதோ சொல்ல வாயெடுத்த தினகர் தோளைக் குலுக்கி விட்டுக் கார் அருகே போனான்.

ஒருவாறு பேசத் தொடங்கியவள் செல்விதான். ''அத்தை அங்கே இடவசதி எல்லாம்...'' என்று தொடங்கினாள்.

அதற்குள் புவனேசுவரி குறுக்கிட்டார். ''அங்கே நம் பங்களா வில் மேலும் இரண்டு குடும்பம் தானே தங்கப் போகிறார்கள். அதுபோக இரண்டு படுக்கை அறைகள் உண்டே அதில் ஒன்றில் ரேவதி இருப்பாள். எல்லாம் சரியாக இருக்கும். நீ அழைத்துப்

போடா, தினகர். இவளும் தான் உன் நண்பர்களோடு நன்கு பழக வேண்டாமா?''

செல்வி திகைத்தாள். தேவி எங்கோ பார்த்தபடி காரில் ஏறினாள். ரேவதியும் தினகரும் ஏறிக்கொள்ள கார் கிளம்பியது.

பூனைக்குட்டியை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்த்த கதையாக ஆகிவிட்டதே? செல்விக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அப்போது ஆதரவோடு ஒரு கை அவள் தோளைத் தொட்டது. திரும்பிப் பார்த்தாள். மாமியார்தான். விசித்திரமான புன்னகையோடு இளைய மருமகளை உள்ளே அழைத்துச் சென் றார் புவனேசுவரி.

கொடை ரோடு செல்லும் வரையில் அந்தப் பயணம் எல்லை யில்லாது நீண்டு போனது போல் எல்லோருமே உணர்ந்தனர். கொஞ்ச நேரம் பொறுத்து தினகர் காரோட்டியை நகரச் சொல்லி விட்டுத்தானே காரை ஓட்டினான். கார் மின்னலெனப் பாய்ந்தது.

கொடை ரோடு வந்தபின் சுற்றுப்புறம் மாறித் தெரிந்தது. பச்சை நிறத்துப் பட்டுச் சேலை நிலமகளை எழிலுற அலங்கரித்தது. தேவி அதில் லயித்தாள்.

ரேவதியின் லொட லொடப்பு மட்டும் சற்று எரிச்சலாக இருந்தது.

வழியில் எல்லோரையும் போலச் செவ்வாழைப்பழம் வாங்கி னார்கள். மலை ஏற ஏற வெகு விரைவில் இருட்டிவிட்டது. கொடைக்கானல் பங்களாவை அடைந்ததும் அலுப்பு தீர சுடு நீரில் குளித்தனர்.

மறுநாள் எல்லோரும் சேர்ந்து சுற்றத் தொடங்கினர். மொத்தம் இருபதுக்கும் மேற்பட்ட ஆட்கள். கலகலப்பாக ஒருவரை ஒருவர் கேலி செய்தபடி சுற்றினர். யாரை என்ன சொல்வது என்பது இல்லை சும்மாகட்டவிழ்த்த கன்றுகள் போலத்தான்! அவர்களில் ஒருவர் நீதிபதியாம். அவர் 'ட்விஸ்ட்' ஆடியதைப் பார்த்து சிரித்து சிரித்து தேவிக்கு வயிற்று வலியே வந்து விட்டது. நினைத்த நேரத்தில் நீனி நினைத்த நேரத்தில் குதிரைச் சவாரி. பாட்டு,

விளையாட்டு முதலில் பெயருக்காக அதில் ஈடுபட்ட தேவியையும் உற்சாகம் தொற்றியது. மற்றவர்களுக்குச் சரியாகக் கொட்ட மடிக்கத் தொடங்கி விட்டாள். ''தினகருடைய மனைவி நம்ம 'செட்' தான்'' என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

குறிஞ்சி ஆண்டவர் கோயிலுக்குப் போனார்கள். ''கூடிய சீக்கிரம் குழந்தை வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள்'' என்று தேவி-தினகரை மற்றவர்கள் கேலி செய்தார்கள். முகம் சிவக்க ஓடிவிட்டாள் தேவி.

''சாவு முனை பார்க்கச் சென்றார்கள். தேவி தைரியமாக எட்டிப் பார்த்தாள். அப்படியே தலை சுற்றி விட்டது. எங்கிருந்தோ அருகில் வந்த தினகர் அவளை அப்படியே தாங்கிக் கொண்டான்.

சற்றுப் பொறுத்து மெல்ல கண் திறந்தாள், தேவி. கணவனின் அணைப்பில் இருப்பது புரிந்தது. கூச்சத்துடன் நகர முயன்றாள்.

''சற்று நேரம் அப்படியே இரு, தேவி'' என்றான் தினகர் மென்மையாக.

அந்தக் குரல் தேவியின் நெஞ்சில் மலரைப் போலத் தீண்டியது.

''வெட்கப்படாதீர்கள் தேவி. நாங்கள் வேண்டுமானால் கண்ணை மூடிக் கொள்கிறோம்.'' என்று யாரோ சிரித்தார்கள்.

தேவி அவசரமாக விலகி ஓடினாள், தினகரின் மென்னகை அவளைப் பட்டாகப் படர்ந்தது.

''இப்போதுதானே முதல் தடவையாகப் பார்க்கிறாள். அதனால் பயந்துவிட்டாள். அவள் நம்மைப் போல இல்லை. இதுமாதிரி இடங்களுக்கு வரப்போக அவளிடம் பணம் கிடையாது தெரியுமா? இப்போதுதான் அத்தான் பணத்தில் அனுபவிக்கிறாள்'' என்ற ரேவதியின் குரல் நாராசமாக ஒலித்தது.

தேவி திரும்பிப் பார்த்தாள். ஒரு புதருக்கு அப்பால் ரேவதி தான் இரு பெண்களிடம் அளந்து கொண்டு இருந்தாள். 'முன்பு நான் ஏழைதான் ஆனால் இதில் அவமானப்பட என்ன இருக்கிறது.?'' என்று தலை நிமிர்ந்தபடி நடந்தாள் தேவி.

மதிய உணவின் பின்னே சற்று நேரம் சீட்டு, செஸ் என்று பொழுது போயிற்று.

வெயில் சுள்ளென்று அடித்தது. ''அப்படி, இங்கே கூட என்ன வெயில்!'' என்றது ஒரு குரல்.

''மழை வரும்'' என்றார்கள் யாரோ.

''இப்போது கொஞ்சம் குளிர்ச்சியாக போட்டிங் போகலாம்'' என்றான் தினகரன்.

ஆமோதித்தபடி எல்லோரும் ஏரிக் கரைக்குச் சென்றனர்.

''குளித்தால் என்ன? இந்த கசகசப்பு நீங்கும்'' என்றாள் சந்தியா.

''நீச்சல் தெரியாதவர்கள் நின்று விடுங்கள்'' என்றார் ஒருவர்.

நீல நிற நீர்ப்பரப்பை ஆவலுடன் பார்த்தாள் தேவி. ''நீந்தத் தெரியுமா, தேவி?'' என்று மெல்லிய குரலில் கேட்டான் தினகர்.

நன்றாகத் தெரியும். எங்கள் வைகையில் வெள்ளம் வரும்போதுகூட நீந்துவேனே'' என்றாள் தேவி பெருமையாக.

சேலையை இழுத்துக் கட்டிக்கொண்டு சிறு மரப்படிகளில் இறங்கினாள், அம்பென நீரில் பாய்ந்தாள். வாளை போல் நீந்தினாள்.

''சேலையோடு நீந்துகிறாளே'' என்றாள் சந்தியா.

''நீச்சல் உடை இருந்திருக்காது'' என்று ரேவதி சொன்னதை யாருமே காது கொடுத்துக் கேட்கவில்லை.

அதற்குள் மேல் உடைகளைக் களைந்துவிட்டுத் தினகரும் நீரில் பாய்ந்தான். ''உன்னைப் பிடிக்கிறேன் பார்'' என்று இரண்டே வீச்சில் மனைவியின் அருகே வந்தான் அவள் நீரினுள் ஆழ அமிழ்ந்து சற்றுத் தள்ளி வந்து கரை ஏறிச் சிரித்தாள். வெண்ணிறப் பற்கள் பளிச்சிட்டன. உடலோடு ஒட்டிய ஆடைகள் பிரமனின் படைப்புத் திறனைப் பறைசாற்றின.

தினகரின் சிரிப்பு சட்டென மறைந்தது. ஏதோ யோசனை யோடு திரும்பினான்.

அதற்குள், ''அத்தான்'' என்று கிரீச்சிட்டாள் ரேவதி. ''என் காலில் என்னவோ அத்தான் அய்யய்யோ! அய்யய்யோ பாம்பு பாம்புதான் சுற்றிக் கொண்டது. அத்தான் அய்யோ நான் சாகப் போகிறேன்'' என்று அலறினாள்.

அருகில் சென்று பார்த்தால் வெறும் அல்லிக்கொடி ரேவதி மயங்கி விழாத குறைதான். அவளைத் தூக்கி வந்து உபசாரங்கள் செய்தபின் ஒருவாறு நிதானத்துக்கு வந்தாள். பிறகும், ''என்னை விட்டுவிட்டுப் போகாதீர்கள் தினு அத்தான்'' என்று தினகரன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

சந்தியா முகம் சுளித்தாள், அருகில் இருந்தவளிடம்,''இந்த ரேவதி இன்னமும் தினகரை இப்படி வளைப்பது நன்றாக இல்லை, தினகருக்கும் கொஞ்சம் தெரியலாம்'' என்றாள்.

இதைக் காதில் வாங்கிக் கொண்டு நடந்த தேவிக்கு, மனம் கடுத்தது. எதையும் கவனியாத தோற்றத்துடன் அப்பால் சென்றாள்.

அதன் பிறகு ரேவதி தினகரின் கையை விடவே இல்லை. கூடவே ஒட்டிக் கொண்டாள். தினகரும் அதைத் தடுத்ததாகத் தெரியவில்லை. தப்பித் தவறிக்கூட தேவியின் அருகிலும் வர வில்லை. பார்க்க பார்க்க தேவிக்குக் குமுறிக் கொண்டு வந்தது.

''இரவில் தினகர் படுக்க வந்ததும் சீறினாள். அவளுடன் அப்படி என்ன குலாவல்?''

தினகர் பதில் சொல்லவில்லை. அவளை ஏறிட்டுப் பார்க்கவும் இல்லை.

''உங்களிடம்தான் கேட்கிறேன்'' என்றாள் கோபத்துடன்.

'என்னிடம் கேட்கிறாய் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால், நீ என்ன கேட்பது? அதைத்தான் யோசித்தேன்'' என்று சட்டையைக் கழற்றித் தாங்கியில் மாட்டினான் தினகர்.

''இதோ, இதைக் கழுத்தில் கட்டியிருப்பதால்தான் கேட்கி றேன்'' என்று பொன் தாலியை எடுத்துக் காட்டினாள் தேவி.

''எங்கே பார்க்கலாம்'' என்று அருகில் வந்தான் தினகர்.

''என்னைக் கேள்விக் கேட்கும் உரிமை இது உனக்குத் தருகி றது அப்படித்தானே''

''சந்தேகமில்லாமல்'' என்று கர்வத்துடன் வந்தது தேவியின் பதில்.

''அதே போல எனக்கு ஓர் உரிமையைத் தருகிறது தெரியுமா?''

தேவி திகைப்புடன் நிமிருமுன் அவனுடைய வலிய கரங்கள் அவளை இழுத்து இறுக அணைத்தன.

வெளியே இடி இடித்தது மின்னல் வெட்டியது. ஊதல் காற்றின் இரைச்சல் ஓ வென்று கேட்டது.

## 24

தேவி பிரமித்துப் போனாள் சில கணங்கள்தான். அதற்குள் அவளது பிரமிப்பு மறைந்து சினம் பெருகியது.''விடுங்கள், என்னை என்று'' சீறினாள்.

''உரிமை தேவி உரிமை'' அவன் கரங்கள் மேலும் இறுகின.

அவன் பிடியை உதற முயன்றபடி, ''நான் ரேவதி என்று நினைத்தீர்களோ?'' என்றாள் தேவி ஆத்திரத்துடன்.

''என் மனைவி ரேவதி இல்லை என்று எனக்குத் தெரியும்'' என்று சுருக்கமான பதில் கிடைத்தது.

ஒருவாறு அவனை உதறித் தள்ளிவிட்டு விலகிப் போனாள், தேவி. ''அது வருத்தமாக இருக்கிறதோ? ஏன் மறுதாரம் கொள்வது

த்தானே. அந்த சுதர்சன் சொன்னதுபோல வள்ளி தெய்வானை என்று இருக்கும்'' என்று குத்தினாள்.

''போதும் தேவி'' என்று அதட்டினான் தினகர்.

தேவி நிறுத்தவில்லை. ''காதலுக்கு வள்ளி, கவுரவத்துக்கு தெய்வானை, அப்புறம் இன்னமும் ஏதாவது ஒரு காரணத்துக்கு இன்னொருத்தி...காப்பாற்ற உங்களிடம் பணமா இல்லை?'' அவனைப் புண்படுத்திவிட வேண்டும் என்ற வெறியில் தேவி பேசிக் கொண்டே போனாள்.

தினகர் அவளை வெறித்துப் பார்த்தான். ''என்ன பேச்செல்லாம் பேசுகிறாய் நீ. உன்னை...உன்னை'' ஒரே தாவலில் தேவி மீண்டும் அவன் பிடியில் சிக்கி விட்டாள்.

''நீங்கள் தொட்டாலே எனக்குப் பிடிக்கவில்லை என்னை விடுங்கள்'' என்று திமிறினாள், தேவி.

''சற்று முன் பேசினாய் பார்-அந்த மாதிரிப் பேச்செல்லாம் எனக்கு மிகவும் பிடித்தம் என்று நினைத்தாயோ? அது உன் உரிமை என்றால், இது என் உரிமை'' என்று அவள் முகத்தை நிமிர்த்த முயன்றான் தினகரன்.

இதற்கு முன்பும் இருவரும் ஒரே அறையில் இரவைக் கழித்தது உண்டு. ஏன், முன்தினம்கூட இதே அறையில் இதே தனிமையில்தான் இரவு கடந்தது, என்றால் என்ன பொருள்? அவன் ஆண் பிள்ளை. என்ன செய்தாலும் தேவி அவனுக்குப் பணிந்தாக வேண்டும் என்று காட்டப் பார்க்கிறானா? இந்த நினைவில் முழு மூச்சுடன் விடுபட முயற்சித்தாள், தேவி. இப்போது தினகரும் தயாராக இருக்கவே திமிறல் பயனின்றிப் போயிற்று.

''நீங்களும் ஓர் ஆண்பிள்ளையா! சொன்னால் தெரியவில்லை? இப்போது என்னை விடாவிட்டால் நான் கத்துவேன்'' என்று திணறிக் கொண்டு சொன்னாள் தேவி.

''என்னவென்று கத்துவாய்?'' என்று ஏளனச் சிரிப்புடன் கேட்டான் அவன்.

பதில் சொல்ல முடியாமல் தேவி அயர்ந்தாள். அந்த ஒரு கணத்தை அவள் பயன்படுத்திய முறையில் அவள் துள்ளித் துடித் தாள். தள்ளினாள். ஒன்றும் பயனில்லாது போயிற்று. தினகரின் உடும்புப்பிடி அவளை இறுக்கியது. தோற்று விடுவோமோ என்ற அச்சத்துடன் மூச்சு திணறத் தவித்தாள் தேவி.

அவன் ஒருவிதமான வரண்ட சிரிப்புடன் அவளை நோக்கிக் குனிந்தான்.

தலையைத் திருப்பிக் கொண்டு, இதற்குமேல் நீங்கள் என் னைக் கற்பழிக்கிறீர்கள் என்றுதான் சொல்வேன்'' என்று திக்கி னாள், தேவி.

''முட்டாள்! என்ன வார்த்தை சொல்லுகிறாய்'' என்று அதட்டி னான் தினகர்.

''ஆமாம், ஆமாம், அப்படித்தான் சொல்வேன். அப்படியே தான் சொல்லுவேன்' ' என்று குமுறினாள் தேவி.

தினகர் செயலற்று நின்றான்.

அந்த வினாடியைப் பயன்படுத்திக் கொண்டு அவனது பிடியி லிருந்து மீண்டும் ஓடினாள் தேவி.

''தேவி நில்...''என்று ஓர் எட்டு எடுத்து வைத்தான் அவன்.

அவனிடம் இருந்து விலகி ஓடிக்கொண்டே தேவி சுற்று முற்றும் பார்த்தாள் கதவுக்கும் தேவிக்கும் இடையே தினகர் நின்றான். எனவே தேவி மறுபக்கமாக 'பால்கனி'க்குச் செல்லும் கதவைத் தாளிட்டாள்.

ஊதல் காற்று உடலைத் தள்ளியது. வானமே இடிந்து விழுவது போல இடி இடித்தது. கண்ணைக் குருடாக்கும் மின்னல்கள். ஊசி

கொண்டு துளைப்பது போல மழைச் சரங்கள். எதையுமே தேவி பொருட்படுத்தவில்லை.

''தப்பிவிட்டேன், தப்பிவிட்டேன், தப்பிவிட்டேன்'' என்று அப்படியே 'பால்கனி'யின் கைப்பிடிச் சுவரில் சரிந்து விழுந்தாள்.

சில தடவை கதவைத் தட்டிப் பார்த்தான், தினகர். தேவி அசையவே இல்லை. கதவை அடுத்த சன்னலைத் திறந்தான். ''தேவி, கதவைத் திற. கதவைத் திற தேவி''.

தேவிக்கு காதே கேட்கவில்லையோ? அப்படியே கிடந்தாள். சேலை தொப்பலாக நனைந்தது. மழை நீர் முகம் எல்லாம் வழிந்து ஓடியது. பெரிய பெரிய மூச்சுகள் தவிர உயிர் உள்ளவள் போலவே தெரியவில்லை.

''தேவி, இனி உன்னைத் தொடவில்லை. நிச்சயமாகத் தொட வில்லை, தேவி. மழையில் மட்டும் நனையாதே தேவி, இந்த மழைக்கு உடம்பு கெட்டுவிடும்...''

''ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகிறதாக்கும். நான் உங்களை நம்பமாட்டேன். உள்ளே வரமாட்டேன்''என்று பிடிவாத மாகச் சொன்னாள். ஒரு காற்றுலேசாக வீசியது. குளிர் நடுங்கியது. சல்லாத் துணிச்சேலை எந்த விதத்திலும் குளிரைத் தடுக்கவில்லை. தாங்கமாட்டாமல் கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண் டாள்.

''தேவி, உன் விருப்பம் இல்லாதபடி சத்தியமாக உன்னைத் தொடவில்லை தேவி. இனிமேலும் நனையாதே. இதோ பார் தேவி. நானும் மனிதன். எனக்கு மானம் இல்லையா? நீ அந்த வார்த்தை சொன்ன பிறகு உன்னைத் தொட நான் மிருகமா? இப்படி நனைகிறாயே தேவி. நாளைக்கு உனக்கு ஏதாவது வந்தால் செல்வி தாங்குவாளா?''

அவன் முகத்தை தேவி வெறித்துப் பார்த்தாள். பிறகு மெல்லக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

மறுநாள் சென்னைக்கு கிளம்பினார்கள். வரும் வழியிலேயே தேவிக்கு சரியான காய்ச்சல்; இரண்டு நாள் சென்ற பின்புதான் நல்லபடியாகக் கண் விழித்தாள்.

செல்வி ஓடி வந்தாள். நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். ''அப்பாடி, காய்ச்சல் நன்றாக விட்டு விட்டது அக்கா'' என்றாள் நிம்மதியோடு.

லேசாக புன்னகை செய்துவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தாள் தேவி.

''என்னக்கா? அத்தானைத் தேடுகிறாயா? சீக்கிரமாக வந்து விடுவார்.'' என்று இதமாக கூறினாள் செல்வி.

''எப்படியடி வருவான். அவன் தான் ரேவதியை பூனாவுக்குக் கொண்டு போய்விடப் போயிருக்கிறானே'' என்று பெருமையாகக் கூறியபடி புவனேசுவரி உள்ளே வந்தார்.

தேவிக்குத் தலையில் ஓங்கி அடித்தாற் போல வலித்தது. அவளுக்குக் காய்ச்சல் அதிலும் தன் நினைவு இழந்த சுரம். அவனுக்கு ரேவதியோடு உல்லாசமா? வேதனையில், தேவியின் முகம் மாறியது.

''என்னக்கா?'' என்று பதறினாள், தங்கை.

''ஒன்றுமில்லை, தலைவலிக்கிறது'' என்று கண்களை இறுக மூடிக்கொண்டாள் தேவி.

''இதுக்கே தலைவலி. இதையும் சொன்னால், மாரடைப்பே வந்துவிடும்'' என்றார் புவனேசுவரி.

''என்ன?'' என்று உயிரற்றுக் கேட்டாள் தேவி. அவள் மனம் திரும்பத் திரும்ப பூனாவையே சுற்றியது.

''ஒன்றுமில்லை'' என்று மோவாய்க் கட்டையைத் தோளில் இடித்தார், புவனேசுவரி. ''செல்விக்கு இது ஐந்தாம் மாதம். ஐந்து

சோறு போட வேண்டும். பிறகு வளைகாப்பு இருக்கிறது. சீமந்தம் இருக்கிறது. எல்லாம் நானே தானே செய்ய வேண்டும். அதெல் லாம் பார்த்துச் சீராட்டப் பிறந்த வீட்டில் ஒரு வக்கு உண்டா என்றேன்''.

தேவி சிலிர்த்தெழுந்தாள். ''நான் இருக்கிறேன்'' என்றாள் திருத்தமாக.

''கிழித்தாய்! நீயும் இங்கேதானே கிடக்கிறாய்? வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே படைத்த மாதிரி இங்கேயே செலவும் செயலும் பார்ப்பாய்!'' என்று நொடித்தார், புவனேசுவரி.

தேவி பொங்கி எழுந்தாள். ''அவளை நான் அழைத்துப் போய் எல்லாம் செய்து அனுப்புகிறேன் பாருங்கள்'' என்றாள்.

''இந்தத் துள்ளலில் ஒன்றும் குறைச்சல் இல்லை! மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காதாம்'' என்று புவனேசுவரி குத்தலாகக் கூறினார்.

ஆத்திரத்துடன் செல்வியிடம் திரும்பினாள் தேவி. ''கேட்டுக் கொண்டு மரம் மாதிரி நிற்கிறாயே. கிளம்படி, உனக்குச் செய்ய வேண்டியது எல்லாம் நானே செய்து அனுப்புகிறேனா இல்லையா என்று அவர்களும் பார்க்கட்டும்'' என்று அதட்டி விட்டு மடமட வென்று மாடிக்குப் போனாள்.

பாதிப்படி ஏறியதும் செல்வி மாமியாரைப் பார்த்து அப்ப டியே நிற்பது தெரிந்தது. ''உனக்கு ரோஷம் இல்லையா செல்வி? அவர்கள் அவ்வளவு சொல்லியும் சும்மா நிற்கிறாயே. நான் பெட்டியோடு வருமுன் நீயும் கிளம்பியாக வேண்டும்'' என்று ஆவேசமாக மொழிந்து விட்டு மாடிக்கு ஓடினாள்.

பரபரவென்று ஒரு பெட்டியில் துணிமணிகளை அள்ளிப் போடத் தொடங்கினாள்.

அப்பொழுது செல்வி பூனைக்குட்டி போல பயந்து கொண்டே அவள் அருகில் வந்து நின்றாள். ''அக்கா உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' என்று மெல்லிய குரலில் கூறினாள்.

''என்ன?'' என்று அடிப்பட்ட புலி போல தேவி ஆவேசமாகத் தலை நிமிர்ந்தாள்.

''நீ காரணம் இல்லாமல் ஆத்திரப்படுகிறாய் அக்கா'' என்று செல்வி குறை கூறினாள்.

தேவிக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. வியப்பு டன் தங்கையை நோக்கினாள். ''செல்வி, அவர்கள் என்னவெல் லாம் சொன்னார்கள்...''

''சொன்னால் என்ன கெட்டுவிட்டது? பெரியவர்கள் சொன் னால் பொறுத்துக் கொள்ளத் தெரிய வேண்டாமா? பெரிய அத்தா னிடம்கூட இப்படித்தான் நடந்து கொள்கிறாய். உனக்கு ஆனாலும் ஆத்திரமும் அவசரமும் நிரம்பவும் அதிகம். கொஞ்சம் கூட அடக்கமோ அமைதியோ இல்லை'' என்று அடுக்கினாள் செல்வி.

தேவி மனம் உடைந்து போனாள். ''ஆமாமடி! நீ ஒருத்திதான் சொல்ல வேண்டும் என்று காத்திருந்தேன்'' என்று வெடித்தவள், விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டாள். செல்வி அரவமே இல்லாமல் வெளியே சென்றாள்.

தேவிக்கு இந்த வீடே கசந்து விட்டது. தங்கைக்காகக் கூட இனி ஒரு கணமும் இங்கே இருக்கக்கூடாது என்று தீர்மானித்தாள்.

பெட்டியை மூடியதும், ஓர் எண்ணம் தோன்றியது. பேனாவும் பேப்பரும் எடுத்துக் கொண்டு மேசை முன்னே அமர்ந்தாள்.

ஏதோ எழுதத் தொடங்கினாள். நாலைந்து முறை எழுதிய தைக் கிழித்தாள். கடைசியாக எழுதியதை மடித்து வைத்தாள்.

கைகளைக் கட்டிக் கொண்டு அமர்ந்தாள். எல்லாம் வெறுமையாகத் தெரிந்தது. இது என்ன வெறுமை? இது என்ன வேதனை? லேசாகப் புரிந்தும் புரியாமலுமாக தேவி கண்ணீர் வடித்தாள்.

சில நேரங்களில் அழுகை ஒரு வரப்பிரசாதம். ஒரு மூச்சுக் கண்ணீர் வடித்து விட்டால் நெஞ்சின் சுமையும் பாதி அந்தக் கண்ணீரிலேயே கரைந்து விடுகிறது. மனதிலும் கொஞ்சம் அமைதி உண்டாகிறது.

தேவியும் வெகுநேரம் அழுதாள். எதை எதையோ எண்ணி எண்ணி அழுதாள். கண்ணீர் ஆறாகப் பெருகியது. மழை பெய்து ஓய்ந்த வானம் போல, அவள் மனதிலும் ஒரு தெளிவு தோன்றியது. தினகர் என்ற நாணயத்தின் மறு புறத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

எழுதிக் கொண்டிருந்த கை பாதியில் நின்றது. அவன்...அவன் அன்று அணைத்தானே! தினகருக்கு மார்பில் அடர்த்தியான முரட்டு முடி அன்று அவனிடமிருந்து திமிறியபோது தேவியின் கன்னத்தில் குறுகுறுவென்று அது உரசியது. அன்று புரியாத ஏதோ ஓர் இதம் இன்று நெஞ்சில் தெரிந்தது. அந்த அணைப்பு இனிக் கிடைப்பது ஏது? அவன்தான் ரேவதியோடு கொஞ்சிக் கொண்டு பூனாவுக்குச் சென்று விட்டானே.

தேவிக்கு அடிவயிற்றில் இருந்து பொங்கிக் கொண்டு அழுகை வந்தது. குபுக்கென்று கண்ணில் நீர் நிறைந்தது. சமாளித்துக் கொண்டு கண்ணீரை அடக்கி விழுங்கியபோது தொண்டையில் உப்புக்கரித்தது. ஆவேசமாக கடிதத்தை எழுதி முடித்து எழுந்தாள்.

பெட்டியை கையில் எடுத்துக் கொண்டு, அந்த அறையில் இருந்து வேகமாக வெளியேற முயற்சித்தாள்.

அப்பொழுது சற்றும் எதிர்பாராத விதமாக தினகர் அவள் எதிரில் வந்து நின்றான்.

## 25

தினகர் பூனாவுக்குப் போயிருந்தானே? அதைப் பற்றி தேவி கவலைப்படவில்லை! அவனைப் பற்றி இனி அவளுக்கு என்ன கவலை?

''நீங்களும் வந்து விட்டீர்களா? சரியான நேரத்தில் தான் வந்திருக்கிறீர்கள்'' தேவியின் குரல் வரட்சியாக ஒலித்தது.

''இந்தாருங்கள்'' என்று கையில் இருந்த கடிதத்தை அவன் முன்னே நீட்டினாள்.

''என்ன அது?'' கடிதத்தைப் பெற்றுக்கொள்ளாமலே தினகர் விறைப்பாகக் கேட்டான்.

''விடுதலைப் பத்திரம். நீங்கள் ரேவதியை மணப்பதற்கு என் அனுமதி...ஆ?''

தேவியின் கன்னத்தைச் சதை ஜிவ்வென்று இழுத்தது கண்கள் இருட்டின. காது ''ஙொய்'' என்றது. இதற்கெல்லாம் பிறகு தான் தினகர் தன்னை அடித்து இருக்கிறான் என்பது தேவிக்குப் புரிந்தது. திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவன் அந்தக் காகிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்தான். ''விடுதலைப் பத்திரம் தருகிறாளாம்' விடுதலைப் பத்திரம்'' என்று சினத்துடன் அவளிடம் திரும்பினான்.

அடிபட்ட கன்னத்தை ஒரு கையால் தாங்கியபடி மிரண்ட குழந்தை போல விழித்துக்கொண்டு அவள் நிற்பதைக் கண்டான். சட்டென அவளை இழுத்து நெஞ்சோடு அணைத்து, பட்டான பூவிதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

ஆயிரம் கோடி ஆண்டுகளோ அல்லது அரை நிமிடமோ கழித்து அவன் நிமிர்ந்தான். அப்போதும் தேவியின் முகத்தில் அதே திகைப்புதான்.

மீண்டும் தினகரின் உதடுகள் மனைவியின் பட்டிதழ்களை நாடின-மீண்டும்...மீண்டும்...மீண்டும்...

கடைசியாக அப்படியே அவளை அரவணைத்துக் கொண் டான்.

முடி படர்ந்த மார்பு அவள் முகத்தில் உராய்ந்தது, தனக்கு என்ன ஆயிற்று என்பது அப்போதுதான் தேவிக்குப் புரிந்தது.

எப்படி? எப்படி! எப்போது தொடங்கியது? வடபழனியா! அங்கேயே அவனது தோற்றம் அவள் மனதில் பதிந்ததே பிறகு முத்தமிடும் உதடுகள் என்று நினைத்தாளே! கன்னத்தில் உரசிய முடி அவள் உள்ளத்தில் ஒரு குறுகுறுப்பை உண்டாக்கியது, சிறு விம்மலுடன் தேவி கணவனின் மார்பில் முகம் புதைத்தாள்!

தேவியை அழைத்துக் கொண்டு தினகர் கீழே வந்தான்.

கீழே புவனேசுவரி நின்று கொண்டு இருந்தார். விழிகளில் நீர் திரையிட அந்த அம்மாவின் கால்களில் தேவி விழுந்து பணிந்தாள்.

''அசடு அசடு'' என்று அவளை எழுப்பி அணைத்துக் கொண் டார், புவனேசுவரி. பரிவுடன் தேவியின் கண்களைத் துடைத்தார். ''எனக்கு என்ன வேண்டும்? இரண்டு கண்களைப் போல் இரண்டு பிள்ளைகள். அவர்கள் இருவரும் கட்டின மனைவியோடு ஆனந்த மாக நீடூழி வாழ வேண்டும். பேரன் பேத்திகளைப் பெற்றுத் தர வேண்டும். அவ்வளவு தான் என் ஆசை'' என்று சற்று நிறுத்தினார்.

பிறகு மீண்டும் தொடர்ந்தார். ''உங்களுக்குள் ஒன்றும் சரி யில்லை. அதை உன் பார்வையே காட்டித் தந்து விட்டது. அதோடு நீ கொஞ்சம் முரடாகவும் தெரிந்தாய். உன்னைத் திருத்த முயற்சி-

எடுத்துக் கொண்டேன். செல்வியும் என்னுடன் ஒத்துழைத்தாள். நான் விரட்டினால் நீ அவனிடம் தானே சரணடைய வேண்டும் என்று நினைத்தேன். அதற்கும் நீ மசியவில்லை. நல்ல காலமாக ரேவதி வந்து சேர்ந்தாள். அவளை சரியானபடி பயன்படுத்திக் கொண்டேன்''.

''பின்னே, நீங்கள் அவளை மருமகளாக்க வேண்டும் என்று விரும்பவில்லையா?'' என்று தேவி வியப்புடன் கேட்டாள்.

புவனேசுவரி வாய்விட்டுச் சிரித்தாள். ''அவளையா? ஒரு நாளுமே எனக்கு விருப்பம் கிடையாது, தம்பிக்கு இருந்த ஆசை யில், அவன் பாட்டில் மகளை இங்கே அனுப்பி விட்டான். இங்கே அவள் நடந்து கொண்ட தினுசில் எல்லோரும் ஒருவிதமாகப் பேசத் தொடங்கிவிட்டார்கள். தினகருக்கு வேறு ஒரே கோபம். திருப்பி அனுப்பவும் முடியவில்லை. என்னடா செய்வது என்று யோசித் தேன். நல்ல நேரத்தில் வேண்டியவர்கள் வெளி நாடு சுற்றப் புறப்பட்டார்கள், ஓர் இரண்டு மாதம் பிரிந்து போ. அப்போதுதான் தினகருக்கும் உன் மதிப்பு தெரியும் என்று ஏமாற்றி ரேவதியை அவர்களோடு அனுப்பி வைத்தேன். பிறகும் அவளைக் கொண்டே உன் பொறுமையைத் தூண்டினேன். என்னதான் இருந்தாலும் கணவன் தன்னைவிட இன்னொருத்தியை விரும்புவது எந்த மனை விக்கும் பொறுக்காது. நீ மட்டும் விதி விலக்கா?'' என்று புன்ன கைத்தார்,

பெரியவர்கள் பேச்சில் தலையிடாமல் நல்ல பிள்ளையாக செல்வி ஒதுங்கிக் கொண்டாள்.

தேவியின் முகம் இன்னமும் சரியாகவில்லை.'' பாவம் அத்தை, அந்த ரேவதி...''என்று இரக்கத்துடன் கூறினாள்.

''போதும் போதும், நிரம்பவும் அனுதாபப்படாதே. அவளுக் குத் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டது. தம்பிபோன் செய்தான். அதனால்தான் தினகர் அவளை விமானத்தில் கொண்டு விட்டு விட்டு வந்தான். உன் பொறுமையைத் தூண்டுவதற்காக, அவர்கள்

இருவரும் ரெயிலில் போனதாகச் சொன்னேன்'' என்று சிரித்தார் மாமியார்.

''அது புரியாமல் நான் விடுதலைப் பத்திரம் எழுதி விட்டேன், அத்தை'' என்று வெட்கமும் வருத்தமுமாகக் கூறினாள் தேவி.

''நீ எழுதினால் என் மகன் விடுவானா? அவன்தான் உன்னிடம் ஒரே பைத்தியமாகக் கிடந்தானே'' என்று சிரித்தார் புவனேசுவரி.

''உண்மையாகவா?'' என்பது போல தேவி வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

''மெய்தான் தேவி'' என்றான், தினகர். ''மதுரையில் உன்னைப் பார்த்ததில் இருந்தே, மனதில் ஏதோ குடைந்து கொண்டே இருந்தது. மீண்டும் மதுரைக்கு வந்தேன். நீ அங்கு இல்லை. அன்று அலுவலகத்துக்கு நீயாக வந்தது ஆனந்தமாக இருந்தது. அப்போது கூடத் தீவிரமாக ஒன்றும் நினைக்கவில்லை. பிறகு அந்த ஆனந்தத்தையும் செல்வி விஷயம் கெடுத்தது. அப்போது கொஞ்ச நேரம் கண்ணை மூடிக் கொண்டு நின்றாய் பார். அடேயப்பா! எத்தனை பாவங்கள்! அந்த ஒரே வினாடியில் என்மனம் உன் காலடியில் விழுந்து விட்டது. வட பழனியில் என்னைப் பார்த்தாயே. அப்பொழுதே உன் மனமும் எனக்குப் புரிந்து விட்டது.

''பின்னே ஏன் அலையவைத்தீர்கள்?''

''என் மனைவி எல்லாவற்றிலும் சிறந்து இருக்க வேண்டாமா? சோதனை வைத்தேன். பிரமாதமாகத் தேறினாய்''.

முதலிலேயே இதை என்னிடம் சொல்லியிருந்தால் இத்தனை துன்பம் ஏற்பட்டு இருக்காது''.

''சொல்லியிருந்தால், நீ என்ன செய்திருப்பாய் தெரியுமா? செல்வியையும் அழைத்துக் கொண்டு கண்காணாமல் ஓடியிருப்பாய் அவ்வளவு தூரம் என்மேல் ஆத்திரத்தை வளர்த்திருந்தாயே''.

அவன் சொல்வது சரி என்றே தேவிக்குத் தோன்றியது. அவன் மீது எவ்வளவு வெறுப்பை வளர்த்து வைத்திருந்தாள்.

அன்று இரவு அதற்காக அவனிடம் தேவி மன்னிப்பு கேட்டுக் கொண்டாள்.

''மன்னிப்பா! உனக்கு எத்தனை விதமான தண்டனைகள் கற்பனை பண்ணி வைத்திருக்கிறேன் தெரியுமா?'' என்று அவளை அணைத்தபடி கன்னக் கதுப்பை நிமிண்டினான் தினகர்.

''என்னைக் கேளாமல் தொடமாட்டேன் என்றீர்களே'' என்று புன்னகையோடு நினைவுபடுத்தினாள், தேவி.

''என் கட்டித் தங்கமே! உன் விருப்பம் இல்லாமல் உன்னைத் தொடமாட்டேன் என்றுதான் நான் சொன்னேன்.

''எங்கே, இப்போது என்னைப் பார்த்துச் சொல், நான் தொடுவது உனக்குப் பிடிக்கவில்லையா? இல்லை யென்று சொல்லிவிடு பார்க்கலாம்'' என்று சவால் விட்டான், தினகர்!

பதில் சொல்ல முடியாமல் அவனுடைய பரந்த மார்பில் தன் சிவந்த முகத்தை மறைத்துக் கொண்டு சிரித்தாள், தேவி!

❋


தேவி
ரமணிசந்திரன்